மீ [illegible] சமைத்த பெ[illegible]ல்

ம. யஹ்யாயெவ்

தேனீ வளர்ப்பாளர்கள்

த. லிஹ[illegible],தால்

மனவசிய நிபுணன்

ஹ. கஸீலவா

கடல் வண்ணத்துப் பூச்சிகள்

மழையில் மின்னிய விண்மீன்கள்

ஷு. பெய்ஷெனலீயெவ்

வெள்ளை ஒட்டகக் குட்டி

வி. திராகூன்ஸ்க்கிய்

ஸர்க்கஸ் சிறுமி

அ. அபூ-பக்கர்

கலைஞனின் மகள்

வி. கிராப்பீவின்

மழையில் மின்னிய விண்மீன்கள்

நி. நோஸவ்

மீஷா சமைத்த பொங்கல்

ம. யஹ்யாயெவ்

தேனீ வளர்ப்பாளர்கள்

த. லிஹத்தால்

மனவசிய நிபுணன்

ஹ. கஸீலவா

கடல் வண்ணத்துப் பூச்சிகள்

மழையில் மின்னிய விண்மீன்கள்

(சிறுவர்களுக்கான சிறுகதைகளும் நெடுங்கதைகளும்)

ஷு. பெய்ஷெனலீயெவ்

வெள்ளை ஒட்டகக் குட்டி

வி. திராகூன்ஸ்க்கிய்

ஸர்க்கஸ் சிறுமி

அ. அபூ-பக்கர்

கலைஞனின் மகள்

வி. கிராப்பீவின்

மழையில் மின்னிய விண்மீன்கள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ.

மொழிபெயர்ப்பாளர்: **பூ. சோமசுந்தரம்**

ЗВЕЗДЫ ПОД ДОЖДЕМ

(Рассказы и повести для детей)

На тамильском языке

Н. Носов «Мишкина каша»,

М. Яхьяев «Пчеловоды»,

Т. Лихоталь «Гипнотизер»,

Х. Гасилова «Бабочки с моря»,

Ш. Бейшеналиев «Белый верблюжонок»,

В. Драгунский «Девочка на шаре»,

А. Абу-Бакар «Култум»,

В. Крапивин «Звезды под дождём».

இந்தத் தொகுப்பில்

பதிப்புரை 5

நி. நோஸவ்: மீஷா சமைத்த பொங்கல் 7

ம. யஹ்யாயெவ்: தேனீ வளர்ப்பாளர்கள் 21

த. லிஹத்தால்: மனவசிய நிபுணன் 29

ஹ. கஸீலவா: கடல் வண்ணத்துப் பூச்சிகள் 45

ஷு. பெய்ஷெனலீயெவ்: வெள்ளை ஒட்டகக் குட்டி 51

வி. திராகூன்ஸ்க்கிய்: ஸர்க்கஸ் சிறுமி 83

அ. அபூ-பக்கர்: கலைஞனின் மகள் 97

வி. கிராப்பீவின்: மழையில் மின்னிய விண்மீன்கள் 111

பதிப்புரை

அருமை இளம் தமிழ் நண்பர்களே!

நகைச்சுவைக் கதைகளையும் வேடிக்கை நிகழ்ச்சிகளையும் கேட்டுச் சிரிப்பது உங்கள் எல்லோருக்கும் கட்டாயம் பிடிக்கும், அப்படித்தானே! தவிர இந்த மாதிரி ஒவ்வொரு கதையிலும் அறிவு புகட்டும் செய்திகளும் நிறைய இருக்கும்.

இந்தப் புத்தகத்தில் உள்ள சிறு கதைகளும் நெடுங்கதைகளும் பிரபல சோவியத் எழுத்தாளர்கள் இயற்றியவை. சோவியத் யூனியனில் வாழும் பல்வேறு இன மக்களின் பிரதிநிதிகள் இந்த எழுத்தாளர்கள்.

புத்தகத்தைப் படிக்கும்போது நீங்கள் சோவியத் நாட்டுச் சிறுவர் சிறுமியருடன் கலந்து உறவாடுவீர்கள். அவர்கள் எப்படி வாழ்கிறார்கள், படிக்கிறார்கள், ஓய்வு நேரத்தை எப்படிக் கழிக்கிறார்கள், எம்மாதிரி வேடிக்கை நிகழ்ச்சிகள் அவர்களுக்கு நேர்கின்றன என்பதை எல்லாம் தெரிந்துகொள்வீர்கள்.

ஆனால் இந்தப் புத்தகத்தில் வேடிக்கைக் கதைகள் மட்டுமே இல்லை. எத்தனையோ கதைகளில் ஆழ்ந்த விஷயங்கள் அடங்கியுள்ளன. ஒருவன் எப்படி இருக்க வேண்டும், உண்மை மனிதன் ஆவதற்கு எம்மாதிரிப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவற்றில் விளக்கப்படுகிறது.

தொகுப்பின் முதல் கதை பெயர்பெற்ற ருஷ்ய சிறுர் இலக்கிய எழுத்தாளர் நிக்கொலாய் நோஸவ் இயற்றியது. அவருடைய நகைச்சுவை நூல்கள் இந்திய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் ஒரு வேளை படித்திருப்பீர்கள்.

தமாரா லிஹுத்தால், விக்தர் திராகூன்ஸ்க்கிய், விளாதிஸ்லாவ் கிராப்பீவின் ஆகிய பிரசித்திபெற்ற ருஷ்ய எழுத்தாளர்களின் கதைகள் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. சோவியத் நாட்டின் தென் குடியரசுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களின் கதைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இவர்கள் தங்கள் சொந்த மொழிகளில் எழுதுகிறுர்கள். தார்கீனியர் அகமது ஹான் அபூ-பக்கர், கிர்கீஸியர் ஷுக்குர்பேக் பெய்ஷெனலீயெவ், அஸர்பைஜானியப் பெண் எழுத்தாளர் ஹலிதா கஸீலவா, குமீக் மஹாமெத் யஹ்யாயெவ் ஆகியோர் இவர்கள்.

இந்தப் புத்தகம் உங்களுக்குப் பிடித்திருந்து பயனும் அளித்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்.

நி. நோஸவ்

மீஷா சமைத்த பொங்கல்

நகர்ப்புற வீட்டில் நான் அம்மாவுடன் கோடை விடுமுறையில் தங்கியிருந்தபோது ஒரு தரம் மீஷா என்னைப் பார்க்க வந்தான். அவனைக் கண்டு நான் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது! மீஷாவுக்காக நான் அப்படி ஏங்கிப் போயிருந்தேன். அவன் வந்ததில் அம்மாவுக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

''நீ வந்தது ரொம்ப நல்லது ஆயிற்று. உங்கள் இரண்டு பேருக்கும் இங்கே அதிகக் குதூகலமாக இருக்கும். தவிர நாளைக்கு நான் நகரத்துக்குப் போகவேண்டியிருக்கிறது. ஒருவேளை அங்கேயே கொஞ்சம் சுணங்க நேரிடலாம். நான் இல்லாமல் இங்கே இரண்டு நாட்கள் இருப்பீர்களா?'' என்ருள் அம்மா.

''சந்தேகமில்லாமல். நாங்கள் ஒன்றும் சின்னவர்கள் இல்லையே'' என்றேன்.

''ஆனால் ஒன்று. சாப்பாடு நீங்களேதாம் சமைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். முடியுமா உங்களால்?''

''முடியும். இது என்ன பிரமாதம்?'' என்ருன் மீஷா.

''நல்லது, சூப் வைத்துப் பொங்கல் சமைத்துக்கொள்ளுங்கள். பொங்கல் சமைப்பது சுலபந்தானே.''

''அதற்கென்ன, பொங்கல் சமைக்கிறோம். என்ன பெரிய காரியம் அது!'' என்ருன் மீஷா.

எனக்குத் திக்கென்றது.

''யோசித்துக்கொள், மீஷா. ஒரு வேளை முடியாமல் போய் விட்டாலோ? நீதான் பொங்கல் சமைத்ததே இல்லையே'' என்றேன்.

''கவலைப்படாதே! அம்மா சமைத்ததைப் பார்த்திருக்கிறேன். பட்டினி கிடக்க மாட்டாய், வயிறு நிறையச் சாப்பிடுவாய். நாக்கைச் சப்பு கொட்டிக்கொண்டு தின்பாய், அவ்வளவு ருசியான பொங்கல் சமைப்பேன், பார்!''

மறு நாள் காலையில் அம்மா எங்களுக்கு இரண்டு நாட்களுக்கு வேண்டிய ரொட்டியும் தேநீர் சாப்பிடுவதற்குத் துணைப்பண்டமாகப் பழக்கூழும் எடுத்து வைத்தாள். எங்கே எந்த உணவுப் பண்டம் இருக்கிறது என்று காட்டினுள். சூப்

வைப்பது எப்படி, பொங்கல் எப்படிச் சமைப்பது, எவ்வளவு குறுநொய் போட வேண்டும், மற்றவை எவ்வளவு என்றெல் லாம் விளக்கிஞள். நாங்கள் எல்லாவற்றையும் கேட்டோம். ஆஞல் நான் எதையும் நினைவில் வைத்துக் கொள்ளவில்லை. ''மீஷாவுக்கோ எல்லாம் தெரியுமே. நான் எதற்காக நினைவு வைத்துக்கொள்ள வேண்டும்?'' என்று எண்ணினேன்.

அப்புறம் அம்மா புறப்பட்டுப் போய்விட்டாள். நானும் மீஷாவும் மீன்பிடிக்க ஆற்றுக்குப் போவது என்று தீர்மானித் தோம். தூண்டில்களைச் சரிப்படுத்திக்கொண்டோம், புழுக் களைச் சேகரித்துக் கொண்டோம்.

''பொறு. நாம் ஆற்றுக்குப் போய்விட்டால் சமைப்பது யார்?'' என்று கேட்டேன்.

''சமைப்பதாவது ஒன்ருவது! வெறும் தொந்தரவு! பகல் சாப்பாட்டுக்கு இருக்கிற ரொட்டியை எல்லாம் தின்போம், ராத்திரிச் சாப்பாட்டுக்குப் பொங்கல் சமைப்போம். பொங் கலை ரொட்டி இல்லாமலே சாப்பிடலாமே'' என்ருன் மீஷா.

நாங்கள் ரொட்டியைத் துண்டுபோட்டு, பழக்கூழ் தடவி எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப் போனேம். முதலில் நீந்திக் குளித்தோம். அப்புறம் மணலில் படுத்து வெயில் காய்ந்தவாறே, பழக்கூழ் தடவிய ரொட்டித் துண்டுகளை மென்று தின்ரேம். பிறகு மீன் பிடிக்கலானேம். மீன்கள்தாம் ரொம்பப் பிடிபட வில்லை. மொத்தம் ஒரு பத்து மீன்கள் அகப்பட்டன. பகல் பூரா வும் ஆற்றங்கரையில் அரட்டை அடித்துக்கொண்டிருந்தோம். சாயங்காலம் பசியுடன் வீடு திரும்பினேம்.

''நல்லது, மீஷா. நீதான் நிபுணன் ஆயிற்றே. என்ன சமைப்போம், சொல்லு. சட்டென்று தயாராகக் கூடியதாக இருந்தால் நல்லது. எனக்கு ஒரே பசி'' என்றேன்.

''பொங்கலே சமைப்போம். அது தான் எல்லாவற்றிலும் சுலபம்'' என்ருன் மீஷா.

''அதற்கென்ன, பொங்கலே இருக்கட்டுமே.''

அடுப்பு மூட்டினோம். மீஷா அடுக்கில் குறுநொய்யைக் கொட்டினான்.

''இன்னும் கொஞ்சம் கொட்டு. ஒரே பசியாய் இருக்கிறது'' என்று சொன்னேன் நான்.

அவன் அடுக்கு நிறையக் குறுநொய்யைக் கொட்டி மேலே தண்ணீர் ஊற்றினான்.

''தண்ணீர் அதிகமில்லையா? குழகுழவென்று ஆகிவிடுமே'' என்றேன்.

''பரவாயில்லை. எங்கள் அம்மா எப்போதும் இப்படித் தான் செய்வாள். நீ அடுப்பை மட்டும் கவனித்துக்கொள். நான் சமைக்கிறேன். கவலைப்படாதே.''

ஆக, நான் அடுப்பைக் கவனித்துக் கொண்டேன், மேற்கொண்டு விறகுகளைச் செருகினேன். மீஷா பொங்கல் சமைத்தான். அதாவது, அவன் சமைக்கவில்லை, உட்கார்ந்து அடுப்பைப் பார்த்துக்கொண்டிருந்தான். பொங்கல் தானே தயாராகிக் கொண்டிருந்தது.

சீக்கிரம் இருட்டிவிட்டது. நாங்கள் விளக்கைப் பொருத்தினோம். எப்போதடா பொங்கல் தயாராகும் என்று உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று அடுக்கு மூடி மேலே தூக்கியதையும் பொங்கல் அதன் அடி வழியே தளம்பி வழிந்ததையும் கண்டேன்.

''மீஷா, இது என்ன? பொங்கல் ஏன் வழிந்து ஓடுகிறது?'' என்று கேட்டேன்.

''எங்கே?''

''எங்கேயோ சைத்தானுக்கே வெளிச்சம்! அடுக்கிலிருந்து வெளியே வழிகிறது!''

மீஷா கரண்டியை எடுத்துக்கொண்டு பொங்கலைப் பாத்திரத்துக்கு உள்ளே திணிக்கத் தொடங்கினான். அதைக் கரண்டியால் நசுக்கினான், துவைத்தான். அதுவோ, அடுக்குக்கு உள்ளே வீங்கிப் பருத்து, அடங்காமல் பொங்கி வெளியே வழிந்தது.

''இது வெளியே பெருக எப்படித் தான் தீர்மானித்ததோ தெரியவில்லையே. ஒருவேளை வெந்து விட்டதோ?''

நான் கரண்டியை எடுத்து மாதிரி பார்த்தேன். குறுநொய் கரகரவென்று மணல் மணலாக இருந்தது.

''மீஷா, தண்ணீர் எங்கே போய்விட்டது? குறுநொய் ஒரேயடியாக வறண்டு கிடக்கிறதே?'' என்றேன்.

''தெரியவில்லை எனக்கு. நிறையத்தான் தண்ணீர் ஊற்றி னேன். ஒரு வேளை, அடுக்கில் ஓட்டையோ?'' என்றான் மீஷா.

அடுக்கைக் கவனமாக நோட்டமிட்டோம். ஓட்டை எதுவும் இல்லை.

''ஆவி ஆகியிருக்கும். இன்னும் கொஞ்சம் ஊற்ற வேண் டும்'' என்று சொன்னான் மீஷா.

அதிகப்படி குறுநொய்யை அடுக்கிலிருந்து தட்டில் எடுத் துப் போட்டுவிட்டு அடுக்கில் தண்ணீர் ஊற்றினான். மேலும் வேகவைத்தோம். பொங்கல் வெந்தது, வெந்தது, அப்புறம் பார்க்கிறோமோ, மறுபடி பாத்திரத்துக்கு வெளியே பொங்கி வழிந்தது.

''அட உன்னை என்ன செய்கிறேன் பார்! எங்கே வழிந்து ஓடுகிறாய்?'' என்று சீறினான் மீஷா.

கரண்டியை எடுத்து அதிகப்படி குறுநொய்யை மறுபடி அள்ளித் தட்டில் போட்டான். பிறகு இன்னொரு குவளை தண் ணீரை அடுக்கில் ஊற்றினான்.

''பார்த்தாயா? தண்ணீர் அதிகம் என்று நினைத்தாயே, இப் போது இன்னும் தண்ணீர் விட வேண்டியிருக்கும்'' என்றான்.

மேற்கொண்டு வேகவைத்தோம். என்ன வேடிக்கை! பொங்கல் மறுபடி வெளியே வழிந்தது.

''ஒரு வேளை, அளவுக்குமேல் குறுநொய் போட்டுவிட் டாய் போலிருக்கிறது. அது உப்புகிறது. அடுக்கில் அதற்கு இடம் போதுவதில்லை.''

''ஆமாம், கொஞ்சம் அதிகமாகவே போட்டுவிட்டேன் போலத்தான் தோன்றுகிறது. எல்லாம் உன்னால் வந்த வினை.

'இன்னும் நிறையப் போடு. ஒரே பசி!' என்று நச்சரித்தாயே'' என்றான் மீஷா.

''எவ்வளவு போட வேண்டும் என்று நான் என்னத்தைக் கண்டேன்? சமைக்கத் தெரியும் என்று நீதானே சொன்னாய்?''

''சரி, சரி, சமைக்கிறேன். நீ மட்டும் குறுக்கிடாமல் இரு.''

''அப்படியே ஆகட்டும். நான் குறுக்கிட மாட்டேன்.''

நான் ஒரு பக்கமாக ஒதுங்கிவிட்டேன். மீஷா சமைத்தான். அதாவது, சமைக்கவில்லை, அதிகப்படி குறுநொய்யை அள்ளி அள்ளித் தட்டில் போட்டுக் கொண்டிருந்தான். மேஜை பூரா விலும் தட்டுக்களாகப் பரப்பிவிட்டான், ரெஸ்டாரெண்டில் போல. மேலும் மேலும் தண்ணீர் வேறு அடுக்கில் ஊற்றிய வண்ணமாயிருந்தான்.

என்னால் பொறுக்க முடியவில்லை.

''என்னவோ செய்ய வேண்டிய விதத்தில் நீ செய்யவில்லை. இந்த ரீதியில் போனால் பொங்கல் தயாராவதற்குள் விடிந்து விடும்'' என்றேன்.

''இல்லாவிட்டால் நீ என்ன நினைக்கிறாய்? நல்ல ரெஸ்டா ரெண்டுகளில் சாயங்காலமே சமையல் தொடங்கிவிடுவார்கள், விடிவதற்குள் தயாராக வேண்டும் என்பதற்காக.''

''அதெல்லாம் ரெஸ்டாரெண்டுகளுக்குச் சரிதான். அவசரப்பட வேண்டியதில்லை, தவிரவும் வகை வகையான பண்டங்கள் நிறைய இருக்கும் அங்கே.''

''நமக்கு மட்டும் என்ன அவசரமோ?''

''நாம் சாப்பிட்டுவிட்டுத் தூங்க வேண்டுமே. பார், மணி பன்னிரண்டு ஆகப் போகிறது.''

''பயப்படாதே, நேரம் கிடைக்கும் உனக்கு உறங்கு வதற்கு.''

இப்படிச் சொல்லிவிட்டு மறுபடி ஒரு குவளை நீரைச் சளப்பென்று அடுக்கில் கொட்டினான். சிக்கல் என்ன என்பதை அப்போதுதான் நான் புரிந்துகொண்டேன்.

''நீ எப்போது பார்த்தாலும் தண்ணீரை ஊற்றிக்கொண்டே இருக்கிறுய். அது எப்படி வேகும்?'' என்றேன்.

''உன் அபிப்பிராயப்படி தண்ணீர் இல்லாமலே வேக வேண்டுமாக்கும், ஊம்?''

''பாதி குறுநொய்யைக் கொட்டிவிட்டு நிறையத் தண்ணீர் ஊற்றுவோம். தானே வேகட்டும்'' என்று சொன்னேன்.

அவனிடமிருந்து அடுக்கை வாங்கி, அதிலிருந்து பாதிக் குறுநொய்யை உலுக்கிக் கொட்டினேன்.

''இப்போது விளிம்புவரை தண்ணீர் ஊற்று'' என்றேன்.

மீஷா குவளையை எடுத்து வாளிக்குள் விட்டான்.

''தண்ணீர் இல்லை. எல்லாம் தீர்ந்து போய்விட்டது'' என்ருன்.

''நாம் என்ன செய்வது? தண்ணீர் கொண்டுவர எப்படிப் போவது? எவ்வளவு இருட்டாயிருக்கிறது பார்! கிணறு கூடக் கண்ணுக்குத் தெரியாது'' என்று சொன்னேன்.

''உளறல்! இதோ போய்க் கொண்டுவருகிறேன்.''

நெருப்புப்பெட்டியை எடுத்துக்கொண்டான். வாளியில் கயிற்றைக் கட்டினுன். கிணற்றடிக்கு நடந்தான். நிமிட நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்துவிட்டான்.

''தண்ணீர் எங்கே?'' என்று கேட்டேன்.

''தண்ணீர்... அங்கே, கிணற்றில்.''

''கிணற்றில் தண்ணீர் இருப்பது எனக்கே தெரியும். தண்ணீர் வாளி எங்கே என்கிறேன்?''

''வாளியும் கிணற்றுக்குள்ளே.''

''கிணற்றுக்குள்ளேயா, எப்படி?''

''அப்படித்தான், கிணற்றுக்குள்ளே.''

''தவறவிட்டுவிட்டாயா?''

''ஆமாம்.''

''அட தொளதொளாப் பயலே! நாம் பட்டினி கிடந்து சாக வேண்டும் என்று பார்க்கிருயா? இப்போது எதனுல் தண்ணீர் மொள்ளுவதாம்?'' என்று சிடுசிடுத்தேன்.''

''தேக்கெண்டியால் மொள்ளலாமே.''

நான் தேக்கெண்டியை எடுத்துக்கொண்டு, ''கயிற்றைக் கொடு'' என்றேன்.

''கயிறுதான் இல்லையே.''

''எங்கே அது?''

''அங்கே.''

''அங்கே என்றால்?''

''அதுதான் என்கிறேன், கிணற்றில்.''

''அப்படியானால் வாளியைக் கயிற்றோடு கிணற்றில் தவற விட்டுவிட்டாயா?''

''ஆமாம்.''

நாங்கள் இன்னொரு கயிற்றைத் தேடினோம். எங்குமே காணோம்.

''பரவாயில்லை. இதோ பக்கத்து வீட்டுக்காரர்களிடம் போய்க் கேட்கிறேன்'' என்றான் மீஷா.

''உனக்கு மூளை புரண்டுவிட்டது! கெடியாரத்தைப் பார் சற்றே. பக்கத்து வீட்டார் எப்போதோ உறங்கியிருப்பார் களே'' என்று சொன்னேன்.

வேண்டுமென்றே போல அப்போது பார்த்து எங்கள் இரு வருக்கும் தாகம் எடுத்தது. ஒரு குவளை நீருக்கு நூறு ரூபிள் கூடக் கொடுத்திருப்பேன் போலிருந்தது!

''எப்போதுமே இப்படித்தான். தண்ணீர் இல்லாத சமயத் தில்தான் இன்னும் அதிகமாகத் தாகம் எடுக்கும். பாலைவனத் தில் எப்போதும் தாகம் எடுப்பதற்குக் காரணம் அங்கே தண்ணீர் இல்லாததுதான்'' என்று விளக்கினான் மீஷா.

''நீ விளக்கியது போதும், கயிற்றைத் தேடு'' என்றேன்.

''எங்கே தேடுவதாம்? எங்குந்தான் பார்த்துவிட்டேனே. தூண்டில் கயிற்றைத் தேக்கெண்டியில் கட்டுவோம் வா.''

''தூண்டில் கயிறு தாங்குமா?''

''ஒருவேளை தாங்கலாம்.''

''தாங்காவிட்டாலோ?''

''தாங்காவிட்டால்... அறுந்து போகும்....''

''அது நீ சொல்லாமலே தெரியும் எனக்கு.''

தூண்டில் கயிற்றை அவிழ்த்துத் தேக்கெண்டியில் கட்டிக் கிணற்றுக்கு எடுத்துப் போனோம். நான் தேக்கெண்டியைக் கிணற்றில் விட்டுத் தண்ணீர் மொண்டேன். தூண்டில் கயிறு தந்திபோல விரைப்பாயிற்று. இதோ அறுந்துவிடும்போல் இருந்தது.

''தாங்காது. என் கைக்குத் தெரிகிறது'' என்றேன்.

''ஜாக்கிரதையாகத் தூக்கினால் ஒருவேளை தாங்கலாம்'' என்று சொன்னான் மீஷா.

நான் மெதுவாக மேலே தூக்கத் தொடங்கினேன். தண்ணீர் மட்டத்துக்கு மேலே தூக்கினேனோ இல்லையோ, டுபுக் கென்ற சத்தம் கேட்டது. தேக்கெண்டி போய்விட்டது.

''தாங்கவில்லையோ?'' என்று கேட்டான் மீஷா.

''சந்தேகமில்லாமல், தாங்கவில்லை. இப்போது எதனால் தண்ணீர் மொள்ளுவதாம்?''

''வெந்நீர்ப் பாத்திரத்தினால்'' என்றான் மீஷா.

''வேண்டாம், அதைவிடப் பாத்திரத்தை வெறுமே கிணற்றில் போட்டுவிடலாம். குறைந்த பட்சம் சள்ளைப்படவாவது வேண்டாமே. கயிறே நம்மிடம் இல்லை.''

''அப்படியானால் அடுக்கினால் மொள்ளுவோம்.''

''எங்கள் வீட்டில் அடுக்குப் பாத்திரக் கடை வைத்திருக்கிறது என்ற நினைப்போ உனக்கு?'' என்றேன்.

''அப்போது தம்ளரால் மொள்ளுவோம்.''

''தம்ளரால் தண்ணீர் மொண்டு ஊற்றுவதற்குள் தாவு தீர்ந்து போய்விடுமே!''

''வேறு என்ன செய்வது? பொங்கல் சமைத்தாக வேண்டுமே. போதாக் குறைக்கு ஒரே தாகம் வேறு நாக்கை வரட்டுகிறது.''

''நல்லது, குவளையால் மொள்ளுவோம். என்னவானாலும் குவளை தம்ளரைவிடப் பெரியதுதானே'' என்றேன்.

வீட்டுக்கு வந்து, குவளை கவிழ்ந்துவிடாதபடித் தூண்டில் கயிற்றால் இறுக்கிக் கட்டினோம். பின்பு கிணற்றடிக்குத் திரும்பினோம். ஒவ்வொரு குவளையாகத் தண்ணீர் மொண்டு தாகந் தீரக் குடித்தோம்.

மீஷா சொன்னான்:

''எப்போதும் இப்படித்தான். தாகம் எடுக்கும் போது ஒரு கடல் முழுவதையுமே குடித்துவிடலாம் போலிருக்கும். குடிக்க ஆரம்பித்ததுமோ ஒரு குவளை பருகுவதற்குள் தாகம் தீர்ந்துவிடும், ஏனென்றால் ஜனங்கள் இயற்கையாகவே பேராசைக்காரர்கள்....''

நான் இடை முறித்தேன்:

''ஜனங்கள் மேல் பழிசாட்டத் தேவையில்லை! போய்ப் பொங்கல் பாத்திரத்தை இங்கே எடுத்து வா. தண்ணீர் இறைத்து இறைத்து நேரே அதிலே ஊற்றுவோம். இல்லாவிட்டால் குவளையும் கையுமாக இருபது நடை போய்வர வேண்டியிருக்கும்'' என்றேன்.

மீஷா அடுக்கைக் கொண்டுவந்து கிணற்று ஓரத்தில் வைத்தான். நான் அதைக் கவனிக்காமல் முழங்கையால் இடித்துக் கிணற்றுக்குள் தள்ளப் பார்த்தேன்.

''அட கை வழங்காதவனே! அடுக்கை நேரே என் முழங்கைக்கு அடியில் ஏன் நுழைத்தாய்? கையில் எடுத்துக்கொண்டு கெட்டியாகப் பிடித்துக்கொள். கிணற்றிலிருந்து கொஞ்சம் விலகியே நில்லு. இல்லாவிட்டால் பொங்கலும் கிணற்றில் விழுந்துவிடும்'' என்றேன்.

மீஷா அடுக்கை எடுத்துக்கொண்டு கிணற்றிலிருந்து அப்பால் நகர்ந்து நின்றான். நான் தண்ணீர் இறைத்தேன்.

வீட்டுக்கு வந்தோம். பொங்கல் ஆறிவிட்டது. அடுப்பு அணைந்திருந்தது. மறுபடி அடுப்பு மூட்டிப் பொங்கல் சமைப்பதில் முனைந்தோம். கடைசியில் ஒரு விதமாக அது கொதிக்கத் தொடங்கிற்று, கெட்டியாயிற்று, ''புஸுக்-புஸுக்'' கென்று ஆவிவிட ஆரம்பித்தது.

''ஆகா! பொங்கல் அருமையாக வாய்த்துவிட்டது. முதல் தரமாக!'' என்று ஆர்ப்பரித்தான் மீஷா.

நான் கரண்டியை எடுத்து ருசி பார்த்தேன்.

''த்தூ! இது என்ன பொங்கல்! கசக்கிறது, உப்பே இல்லை, காந்தல் வாடை வேறு அடிக்கிறது'' என்றேன்.

மீஷாவும் ருசி பார்த்தவன் உடனே துப்பிவிட்டான்.

''மாட்டேன். செத்தாலும் சாவேனே தவிர இந்த மாதிரிப் பொங்கலைச் சாப்பிடவே மாட்டேன்!'' என்றான்.

''இந்தப் பொங்கலைத் தின்றே உயிரை விட்டுவிடலாம்!'' என்று சொன்னேன் நான்.

''என்ன செய்வது?''

''எனக்குத் தெரியாது.''

''வேடிக்கையான ஆட்கள் நாம்! நம்மிடந்தான் மீன்கள் இருக்கின்றனவே!'' என்றான் மீஷா.

''மீன்களோடு பாடுபடுவதற்கு இப்போது நேரம் இல்லை! சீக்கிரம் பொழுது விடியத் தொடங்கிவிடும்'' என்றேன்.

''நாம் இவற்றை வேகப் போவதில்லையே, பொரிக்கத் தானே போகிறோம். இது சீக்கிரம் ஆகிவிடும், ஒரே நொடியில்.''

''சீக்கிரம் ஆகிவிடும் என்றால் பொரி. அதுவும் பொங்கலைப் போலவே ஆகும் என்றால் வேண்டவே வேண்டாம்'' என்றேன்.

''ஒரே நொடியில். நீயே பார்ப்பாய்.''

மீஷா மீன்களைச் சுத்தம் செய்து வாணலியில் போட்டான். வாணலியில் சூடு ஏறியதும் மீன்கள் அதனுடன் ஒட்டிக் கொண்டன. மீஷா கத்தியால் மீன்களை வாணலியிலிருந்து பிய்த்து எடுக்கப் பார்த்தான். மீன்களின் விலாக்கள் எல்லாவற்றையும் குதறிவிட்டான்.

''புத்திசாலிதான் போ! எண்ணெய் இல்லாமல் மீனை யாராவது பொரிப்பார்களா?'' என்று நொடித்தேன்.

மீஷா எண்ணெய் பாட்டிலை எடுத்து எண்ணெயை வாணலியில் கொட்டி, பொரியல் சீக்கிரம் தயாராக வேண்டும் என்பதற்காக வாணலியை நேரே அடுப்புக்குள் நுழைத்தான். எண்

ணெய் சீறிற்று, சடசடத்தது, திடீரென்று குப்பென மூண்டு எரிந்தது. வாணலியைத் தீச்சுவாலை மூடியது. மீஷா வாணலியை அடுப்பிலிருந்து வெளியே எடுத்தான். அதில் எண்ணெய் எரிந்துகொண்டிருந்தது. நான் அதில் தண்ணீர் ஊற்ற விரும்பினேன், ஆனால் வீட்டில் ஒரு துளி தண்ணீர்கூட இல்லை. எண்ணெய் எல்லாம் தீரும்வரை வாணலி எரிந்து கொண்டிருந்தது. அறையில் புகையும் நாற்றமும் நிறைந்தது. மீன்களுக்குப் பதில் வெறும் கரித் துண்டுகள்தான் மிஞ்சியிருந்தன.

''ஊம், இனி எதைப் பொரிப்பது?'' என்றான் மீஷா.

''வேண்டாம். இனி எதையுமே நீ பொரிக்க விட மாட்டேன். பண்டங்களைப் பாழாக்குவதோடு நில்லாமல் தீ விபத்து வேறு ஏற்படுத்திவிடுவாய் நீ. உன்னால் வீடு முழுவதும் தீக்கிரை ஆகிவிடும். போதும்!'' என்று சொல்லிவிட்டேன்.

''பின்னே என்னதான் செய்வது? பசியாய் இருக்கிறதே!''

பச்சைக்குறுநொய்யைத் தின்று பார்த்தோம். வாயில் வைக்கவே பிடிக்கவில்லை. பச்சை வெங்காயத்தைத் தின்றோம், காட்டமாய் இருந்தது. ரொட்டி இல்லாமல் வெறும் வெண்ணெயைச் சாப்பிட்டுப் பார்த்தோம். குமட்டிக்கொண்டு வந்தது. பழக்கூழ் பாத்திரம் கண்ணில் பட்டது. அதை வழித்துத் தின்றுவிட்டுப் படுத்தோம். இரவு வெகு நேரம் ஆகியிருந்தது.

காலையில் பசியுடன் கண் விழித்தோம். மீஷா பொங்கல் சமைப்பதற்காகக் குறுநொய் எடுக்கப் போனான். அதைக் கண்டதும் எனக்கு உடம்பெல்லாம் நடுக்கம் கூட ஏற்பட்டது.

''அந்த வழிக்கே போகாதே! இதோ வீட்டுச் சொந்தக்காரி நத்தாஷா சித்தியிடம் போய் நமக்குப் பொங்கல் சமைத்துத் தரும்படி கேட்கிறேன்'' என்றேன்.

நாங்கள் நத்தாஷா சித்தியிடம் போய் விஷயத்தை எல்லாம் சொன்னோம். நானும் மீஷாவும் அவளுடைய காய்கறித் தோட்டத்தில் வளர்ந்திருக்கும் களைகள் எல்லாவற்றையும் பிடுங்குவதாக வாக்களித்தோம். பொங்கல் சமைத்துத் தரும்படி வேண்டிக் கொண்டோம். நத்தாஷா சித்திக்கு எங்கள்

மேல் இரக்கம் வந்து விட்டது. எங்களுக்குப் பாலும் முட்டைக் கோசுப் பணியாரமும் உடனே உண்ணத் தந்தாள். அப்புறம் காலை ஆகாரம் பரிமாறினாள். நாங்கள் அவுக்கு அவுக்கென்று தின்றுகொண்டே இருந்தோம். எங்களுக்கு இவ்வளவு பசியா என்று நத்தாஷா சித்தியின் மகன் வோவா மலைத்துப் போனான்.

கடைசியில் எங்களுக்கும் வயிறு நிறைந்துவிட்டது. நத்தாஷா சித்தியிடம் ஒரு கயிறு கேட்டு வாங்கிக்கொண்டு கிணற்றிலிருந்து வாளியையும் தேக்கெண்டியையும் வெளியில் எடுக்கப் போனோம். வெகு நேரம் தொல்லைப்பட்டோம். கயிற்று நுனியில் லாடத்தைக் கட்டும் யோசனை மீஷாவுக்கு உதித்திராவிட்டால் நாங்கள் எதையும் எடுத்திருக்க மாட்டோம். வாளியும் தேக்கெண்டியும் கொக்கியில் போல லாடத்தில் மாட்டிக் கொண்டன. ஒன்றும் கெட்டுப் போகவில்லை. எல்லாவற்றையும் வெளியில் எடுத்துவிட்டோம். அப்புறம் மீஷாவும் நானும் வோவாவும் காய்கறித் தோட்டத்தில் களை பிடுங்கினோம்.

மீஷா சொன்னான்:

''களை பிடுங்குவது அற்பக் காரியம்! கொஞ்சங்கூடக் கஷ்டமே இல்லை. பொங்கல் சமைப்பதைவிட எவ்வளவோ லேசு!''



ம. யஹ்யாயெவ்

தேனீ வளர்ப்பாளர்கள்

''அக்கம் பக்கத்துக்காரர்கள் எல்லாரிடமும் தேன்கூடுகள் இருக்கின்றன. அவர்கள் தாங்களே எடுத்த தேனைச் சாப்பிடு கிறார்கள். நமக்கும் தேன்கூடுகள் வாங்கேன், ஊம்?'' என்று ஒரு நாள் அம்மா அப்பாவிடம் சொன்னாள்.

''அதற்கென்ன, மெய்யாகவே வாங்கத்தான் வேண்டும்'' என்று இசைந்தார் அப்பா.

ஞாயிற்றுக்கிழமை அவர் சந்தைக்குப் போய் இரண்டு தேன்கூடுகள் வாங்கி வந்தார்.

அப்பா தேன்கூடுகளின் மூடிகளைத் திறந்து தேனடைகளை உள்ளேயிருந்து எடுப்பதையும் அப்புறம் அம்மா அவற்றைப் பிழிந்து கெட்டியான தங்கநிறத் தேன் சேகரிப்பதையும் நான் அடிக்கடி கண்டேன். ஆரம்பத்தில் அப்பா தேன்கூடுகளைத் திறப் பதற்கு முன்னால் சல்லாத்துணியால் தலையை மூடிக் கட்டிக் கொள்வார். அப்புறமோ, இது ஒன்றும் இல்லாமலே சகஜ மாகத் திறக்கத் தொடங்கினார். தேனீக்கள் கொட்டுவதாக அவர் ஒரு தரங்கூடக் குறை சொல்லவில்லை.

ஒரு நாள் அம்மாவும் அப்பாவும் திருமண விருந்துக்குப் போனார்கள். வீட்டில் தனியாக இருப்பது எனக்குச் சலிப்பாக இருந்தது. நான் அகமதை அழைத்தேன். எங்கள் பேச்சு தேனீக் களைப் பற்றி எப்படித் தொடங்கியதோ, நினைவில்லை.

''இப்போதெல்லாம் நாங்கள் சொந்தமாக எடுத்த தேனையாக்கும் சாப்பிடுகிறோம், தெரியுமா? இப்பொழுது கூட அடைகளில் தேன் நிரம்பியிருக்கிறது'' என்று பெருமை அடித்துக்கொண்டேன்.

''அடே, அப்படியா?'' என்று கேட்டான் அகமது. அவனுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை.

''தேனீக்கள் பெருத்த உழைப்பாளிகள். எப்போது பார்த் தாலும் தேனைச் சுமந்து வந்த வண்ணமாக இருக்கின்றன'' என்று விளக்கினேன்.

''அவற்றுக்கு என்ன இரை போடுகிறாய்?''

''ஒன்றுமே போடுவதில்லை. அவை தாமே இரை தேடிக் கொள்கின்றன. வெகு தூரம் காட்டில் பறந்து போகின்றன,

அங்கேயே இரை தேடித் தின்கின்றன. அப்புறம் பூக்களிலிருந்து தேன் சேகரித்து இங்கே கொண்டுவருகின்றன. உனக்குக் கூடத் தேன் வேண்டுமானால் கொடுக்க முடியுமே என்னால். தேனீக்கள் என்னைக் கொட்டுவதில்லை'' என்று பீற்றிக்கொண்டேன். ''உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்றேன்.

''கையை மாத்திரம் விடு, எப்படிக் கொட்டுகின்றன என்று பார்!'' என்று கோணலாக நகைத்தான் அகமது.

நாங்கள் தேன்கூடுகளருகே போனோம். அவை எங்கள் தோட்டத்தில் இருந்தன. கூடுகளை நெருங்கினோம். பார்க்கிறோமோ, அங்கே சந்தடியே இல்லை. ஒரே அமைதி. தேனீக்கள் சாந்தமாகப் பாடுபட்டுக்கொண்டிருந்தன. சில சிறு திறப்புக்குள் ஊர்ந்து சென்றன. வேறு சில அவசரமாக எங்கோ வெளியே பறந்து போயின.

''நல்லது. இதோ கூட்டைத் திறப்போம். எங்கள் தேன் எவ்வளவு ருசியானது என்பதைக் காண்பாய்'' என்றேன்.

''கேளு. என்ன இருந்தாலும் இது ஆபத்தானது. உன் அப்பா போலத் தலையில் எதையாவது சுற்றிக்கொள்வோம்'' என்றான் அகமது.

''நான்தான் சொல்லுகிறேனே, அவை கொட்டுவதில்லை என்று. அப்பாகூட இப்போதெல்லாம் எதையும் சுற்றிக்கொள்வதில்லை. நீ என்ன, பயப்படுகிறாயா? எனக்குக் கொஞ்சங்கூடப் பயமில்லை.''

நான் வேலையில் முனைந்தேன். அகமது ஒரு பக்கம் விலகிவிட்டான். நான் கூட்டின் மூடியைத் திறந்து, அப்பா செய்வது போலவே தேனடையின் மேல்விளிம்பைப் பிடித்து ஒரு துண்டு விண்டு எடுக்க முயன்றேன். அப்போது அகமதும் பக்கத்தில் நெருங்கி வந்து கூட்டுக்குள் எட்டிப்பார்த்தான். நான் அடையின் துண்டை விள்ளுவதற்குள் தேன்கூட்டுக்குள் எதுவோ விழுந்தது. எங்கள் தலைகளுக்கு உயரே விமானம் பறப்பதுபோலப் பெரிய இரைச்சல் உண்டாயிற்று. நான் மூடியை மடாரென்று சாத்திவிட்டு அப்பால் தாவிவிட்டேன். ஆனால் ஆயிரமாயிரம் தேனீக்கள் மேகப் படலம் போல எங்களை நோக்கிப் பறந்து

வந்தன. நான் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு எடுத்தேன் ஓட்டம். அகமது காட்டு மிருகம் போல வீரிட்டது என் காதில் பட்டது.

நான் வீட்டுக்குள் ஓடினேன். அகமது என் பின்னே ஓடி வந்தான். அவன் ஏதோ வலிப்பு வந்தவன் போல முகத்தையும் கழுத்தையும் மாறி மாறிப் பிடித்துக்கொண்டான்....

என் நெற்றி தாங்க முடியாதபடிப் பயங்கரமாக வலித்தது. நாங்கள் அறையில் அரைமணி நேரம் சுற்றிச் சுற்றி ஓடியவாறு கழுதைகள் போலக் கத்திக்கொண்டிருந்தோம். ஆனாலும் அகமது என்னைவிட உரக்கக் கத்துவதாக எனக்குத் தோன்றியது.

கடைசியில் அவன் கேட்டான்:

''உனக்கு ரொம்ப வலிக்கிறதோ?''

''வலிக்கத்தான் செய்கிறது. உனக்கோ?''

''எனக்குந்தான். ஒரேயடியாகக் காந்துகிறது'' என்று அவன் அழுதுகொண்டே சொன்னான்.

''எனக்குக் காந்தவில்லை, குத்துகிறது'' என்றேன்.

''வா, களிமண் பூசுவோம். எல்லாம் சரியாகிவிடும்'' என்று அவன் திடீரென யோசனை சொன்னான்.

''களிமண்ணா? நல்ல யோசனைதான் செய்தாய் போ!''

''ஆமாம்! களிமண் பூச வேண்டும், எனக்குத் தெரியும். அம்மாவை வயலில் குளவி கொட்டிவிட்டது. அப்போது அவள் அப்படித்தான் செய்தாள்.''

நாங்கள் முகத்தில் களிமண் பூசிக்கொண்டோம். ஆனால் அதனால் பயனில்லை. நெற்றியையும் கழுத்தையும் மாறி மாறிப் பிடித்தவாறு உட்கார்ந்திருந்தோம். நான் அகமதைப் பார்த்தேன். அவனை என்னால் அடையாளமே கண்டுகொள்ள முடியவில்லை. அவன் மூக்கு அப்படி வீங்கிப்போயிருந்தது.

''உன் மூக்கு உருளைக்கிழங்குபோல் ஆகிவிட்டது!'' என்றேன்.

''நீதான் உருளைக்கிழங்கு! தானே குற்றம் செய்துவிட்டு இப்போது சிரிக்கிறாயாக்கும். இந்தா, தொட்டுப் பார்'' என்று தன் மூக்கை நீட்டினான்.

ஆனால் அவன் மூக்கு என்ன கதிக்கு உள்ளாகியிருந்தது என் பது எனக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. எனக்கோ, புருவத்துக்கு நேர் மேலே முழைப்பு வரவர வீங்கிக்கொண்டு போயிற்று. ஆகவே நான் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்க முடிந்தது.

''என் ஒரு கண் மூடிவிட்டது. குருடன் ஆகிவிடுவேனோ என்னவோ! இப்போது என்ன செய்வது?'' என்று கிலி கொண் டேன்.

அகமது மூக்கைப் பிடித்துக்கொண்டு, ''பரவாயில்லை, ஒரு கண்ணோடு வாழ்க்கை நடத்த முடியும். நீ பார்ப்பதற்குக் கதைகளில் வரும் சூனியக்காரி போல் ஆகிவிட்டாய் என்பது தான் கஷ்டம். என்னைப் பார், மூச்சுவிட முடியவில்லை. இனி என்ன செய்வேன்?'' என்றான்.

ஆனால் எங்கள் தொல்லை இத்துடன் தீர்ந்துவிடவில்லை. முக்கியமான விஷயம், அப்பா அம்மாவுக்கு என்ன சமாதானம் சொல்லுவது என்று எங்களுக்கு விளங்கவில்லை.

''நாம் என்ன கந்தரகோளம் செய்திருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் நம் பாடு மோசமாகிவிடும். எப்படியாவது தப்பவேண்டும்.''

''எப்படி?'' என்றான் அகமது.

''சண்டை போட்டுக் கொண்டோம், அப்புறம் சமா தானம் ஆகிவிட்டோம் என்று சொல்லுவோமே. இது முதல் தடவை இல்லையே, ஆகவே நம்பிவிடுவார்கள்....''

''நல்லது'' என்று இசைந்தான் அகமது.

அவன் வீட்டுக்குப் போகப் பார்த்தான். நான் வெகு சிரமப்பட்டு மன்றாடி அவனை என்னுடன் இருக்கச் செய்தேன். என்னவானாலும் இரண்டு பேராகச் சமாளிப்பது அதிகச் சுளுவாயிருக்கும் அல்லவா?

சீக்கிரமே அம்மா வந்துவிட்டாள். நாங்கள் இருவரும் வாயிற்படியில் உட்கார்ந்து அவரவருக்கு வலித்த இடத்தைப் பொத்திக்கொண்டிருந்தோம். என் வீங்கிய கண்ணை அம்மா

உடனேயே கண்டுகொண்டாள். அப்புறம் அகமதின் வீங்கிய மூக்கைப் பார்த்தாள்.

''என்ன நேர்ந்தது உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''ஒன்றும் இல்லை. நாங்கள் சண்டை போட்டுக் கொண்டோம். சச்சரவும் அற்ப விஷயத்துக்காக மூண்டது. நான் இவனை மூக்கில் குத்தினேன், இவன் என் கண்ணில் அடித்தான். எதனுலோ, உடனே முழைத்துவிட்டது'' என்று கதை அளந்தேன்.

அம்மா நம்பிக்கை இல்லாமல் என்னைப் பார்த்தாள்.

''அது என்ன அற்ப விஷயம்?'' என்று அப்புறம் கேட்டாள்.

நான் அந்தக் கணமே ஒரு கதை கட்டினேன்.

''அட சர்வ சாதாரணமான விஷயம். ஈ மிருகம் அல்ல, பறவை, ஏனென்ருல் அது பறக்கிறது என்று நான் சொன்னேன். இவனே, ஈ மிருகம்தான் என்று பிடிவாதம் பிடித்தான். இதற்காகத்தான் சண்டை போட்டோம்.'' அம்மாவிடம் இப்படிச் சொல்லும் போதே அவள் உண்மையைக் கண்டுகொண்டு விட்டால் என்ன செய்வது என்று என் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. ''நீ நம்பாவிட்டால் அகமதைக் கேட்டுக் கொள்'' என்றேன்.

''எனக்கு என்னவோ நிஜமாகப் படவில்லை. எங்கே, பார்ப்போம்'' என்று அம்மா என் கண்ணைத் தடவிப் பார்த்தாள். ''அட புளுகுணி! உங்களைத் தேனீக்கள் கொட்டியிருக்கும், அப்படித்தானே? தேன் கூட்டில் கையை விட்டீர்கள், இல்லையா? ஊம், உள்ளதை ஒப்புக்கொள்.''

இப்போது எங்களுக்குத் தப்ப வழி இல்லாது போயிற்று.

''அம்மா, உனக்கு எப்படித் தெரிந்தது? ஆனுல் நாங்கள் தேன்கூட்டில் கைவிடவில்லை. பக்கத்திலே நின்று கொண்டு தேனீக்கள் பறப்பதைப் பார்த்தோம். அவையோ, காட்டு மிருகங்கள் போல எங்கள் மேல் பாய்ந்தன.... அம்மா, இந்தத் தேனீக்கள் அப்பாவைக் கொட்டுவதில்லையே, எங்களை மட்டும் ஏன் கொட்டின?''

''அவை கொட்டினது நல்லதுதான். கூட்டை நீங்கள் தொட்டிருக்கக்கூடாது. அப்பாவைஅவை தெரிந்துகொண்டிருக்கின்றன,

அவருக்குப் பழகி விட்டன, அதனுல்தான் கொட்டு வதில்லே. தேனீக்கள் மிகவும் புத்தியுள்ள பூச்சிகள்'' என்ருள் அம்மா.

''அவை அவ்வளவு புத்திசாலிகள் என்ருல் என்னிடமும் அவை பழகும்படிச் செய்யலாமோ?''

''இது எனக்குத் தெரியாது. அப்பா வந்ததும் அவரிடம் கேட்டுக்கொள்.''

ஆனுல் அப்பாவிடம் எதையும் பற்றிக் கேட்க நான் துணிய வில்லே. அவர் தேன்கூட்டைப் பார்த்து, பிய்ந்த தேனடையைக் கண்டுகொண்டு விடுவாரோ என்று பயந்தேன். அப்புறம் செம்மையாகக் கிடைக்குமே! இன்னும் அவருக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது. தேனீக்களிடம் எப்படிப் பழகவேண்டும் என்று அப்பா கற்றுக் கொடுக்க மாட்டாரா என்று எனக்கு ஒரே ஆசையாயிருக்கிறது.

ஆனுல் ஒரு சந்தேகம்: இந்தத் தேனீக்களேச் சீக்கிரத்தில் பழக்கிவிட முடியுமா? அவை பெருங் கோபத்துடன் ரீங்காரம் செய்கின்றன, வலிக்கும்படி கொட்டுகின்றனவே. அவை உண் மையாகவே காட்டு மிருங்கள்தான் போலிருக்கிறது.

த. லிஹத்தால்

மனவசிய நிபுணன்



கிளப்பின் பக்கத்தில் இருந்த பூங்காவில் ஸ்கேட்டிங் மைதானம் தலைக்கு நாளே திறக்கப்பட்டுவிட்டது. கேனுவும் கோல்யாவும் இன்று ஒன்றாக ஸ்கேட்டிங் மைதானத்துக்குப் போவதாகப் பேசிவைத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே கேனு கோல்யாவின் வீட்டுக்குப் போனான். கோல்யா அவனுக்காகக் கதவைத் திறந்தவன், கேனு முகமன் சொல்வதற்குள் அவன் கையைப் பிடித்து, ஒரு வார்த்தை பேசாமல், மேல் கோட்டைக் கழற்றக்கூட விடாமல் அறைக்குள் இழுத்துச் சென்றான். அங்கே கேனுவை நீள்சோபாவில் உட்கார வைத்து விட்டு, தான் எட்ட விலகி நின்றுகொண்டு கண்களை விசித்திரமாக உருட்டி விழித்தபடி கைகளை உயரே தூக்கி, மெதுவாகக் காற்றில் அசைத்து ஆட்டலானான். கேனுவுக்கு சோபாவில் இருப்பே கொள்ளவில்லை. சோபா உறை வெள்ளை வெளேறென்று இருந்தது. அவனோ, மேல் கோட்டைப் போட்டுக் கொண்டிருந்தான், அவனுடைய ரப்பர் ஜோடுகளோ சேறு படிந்திருந்தன. இந்த அழகில் கோல்யா வேறு தவளை போல விரல்களை அகல விரித்துக் கண்களை உண்டையாக உருட்டி விழித்துக்கொண்டிருந்தான்.

கேனுவுக்கு ஒழுங்கீனம் பிடிக்காது. தடித்த உதடுகளைக் கோபத்துடன் பிதுக்கினான்:

''நீ... நீ எதற்காக இப்படி?''

கோல்யா ஒன்றும் பதில் பேசாமல் தன் பயிற்சிகளைத் தொடர்ந்தான்.

''உனக்கு என்ன, பைத்தியம் பிடித்துவிட்டதா?'' என்றான் கேனு. அவனால் பொறுக்க முடியவில்லை. சோபாவிலிருந்து துள்ளிக் குதித்தான்.

கோல்யா அவன் தோள்களைப் பற்றிக் கொண்டான்.

''அமைதியாக உட்கார்ந்திரு! நான் உன்னை வசியம் செய்கிறேன்!''

முட்டாள்தனம் செய்வதை நிறுத்தும்படி கோல்யாவிடம் சொன்னான் கேனு. கோல்யாவோ, பதில் பேசாமல் தன் மேஜையிலிருந்து உருச்சிதைந்த பெரிய புத்தகம் ஒன்றை எடுத்தான்.

''இதைப் பார்த்தாயா?''

கேனு இந்த மாதிரிப் புத்தகங்களைப் பார்த்ததில்லை. பழைய, கசங்கிய புத்தகம் அது. மேலே ''டாக்டர் தார்த்தே'' என்று சிறு எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது. நடுவில் ''மனவசியப் பயிற்சிகள்'' என்று பெரிய எழுத்துக்களில் பொறித்திருந்தது.

''பார்த்தாயா. ஒரு மாமி எனக்கு இதைத் தந்தாள். கடைசிப் பகுதி இல்லை. நடுவிலும் சில பக்கங்கள் கிழிந்திருக்கின்றன. அதனால் மோசமில்லை. புத்தகம்—பிரமாதமாக்கும்!'' என்றான் கோல்யா.

''இதென்ன, உளவாளிகளைப் பற்றியதா? விஞ்ஞானக் கற்பனை நவீனமா?'' என்று கேட்டான் கேனு.

''உளவாளிகளாவது ஒன்றாவது! கற்பனையும் இல்லை, நவீனமும் இல்லை! எல்லாம் உள்ளது உள்ளபடியே. இதோ பார்ப்பாய். தன் சித்தம்போலவே மற்றவர்கள் சித்தத்திற்குக் கட்டளையிடவும் மனிதர்களை அடக்கி ஆளவும் உன்னால் முடியுமா?'' என்று கேனுவிடம் கேட்டான் கோல்யா.

கேனு கொஞ்சம் யோசனையில் ஆழ்ந்தான். சில வேளைகளில் அவன் தங்கை லியோலியாவுக்குக் கட்டளை இடுவது உண்டு. ''இந்தா, அந்தப் பந்தை எடுத்துக் கொடு. பெஞ்சுக்கு அடியில் உருண்டு போய்விட்டது'' என்பான், அல்லது, ''வீட்டுக்கு ஓடிப்போய் பழக்கூழ் வைத்த ரொட்டியை எடுத்து வா'' என்பான். லியோலியா எடுத்து வருவாள். ஆனால் எப்போதும் இப்படி நடப்பதில்லை. சில சமயங்களில் லியோலியா முரண்டு பிடிப்பாள். அப்போது கேனு அவளுக்கு முட்டியைக் காட்டிப் பயமுறுத்துவான். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் லியோலியா அம்மாவிடம் புகார் செய்ய ஓடிவிடுவாள். இல்லை. மற்றவர்களுடைய சித்தத்திற்குக் கட்டளையிட அவனால் முடியாது போலும். கேனு தலையை அசைத்தான்.

''என்னால் முடியுமே. இந்த டாக்டர் தார்த்தேயின் பயிற்சிகளைக் கற்றுக்கொண்டேன். இப்போது... உனக்கு நம்பிக்கைப்

படவில்லையா? நான் உன்னைத் தூங்கப் பண்ணுகிறேன், பண்ணட்டுமா?'' என்றான் கோல்யா.

கேனு தோள்களைக் குலுக்கினான், மூக்கால் சீழ்க்கை அடித்தான், ஆனால் இசைந்தான். கோல்யா அவனை மறுபடி சோபாவில் உட்கார்த்தினான். மீண்டும் கண்களை உருட்டி விழித்து, கைகளை வீசியாட்டி, ''தூங்கு! தூங்கு! துங்கு!'' என்று கிசு கிசுத்தான்.

ஆனால் கேனு உறங்கவில்லை. மேல்கோட்டைக் கழற்றாமலே உட்கார்ந்திருந்தபடியால் அவனுக்கு ஒரேயடியாக வியர்த்துக் கொட்டிற்று.

கடைசியில் மேல்கோட்டுப் பொத்தான்களைக் கழற்றிவிட்டு, ''இல்லை. நீ இந்த... அவர் பெயர் என்ன... தார்த்தேயின் பயிற்சிகளை இன்னும் நன்றாகக் கற்றுக் கொள்ளவில்லை போலிருக்கிறது'' என்றான் கேனு.

''விஷயம் அது அல்ல'' என்று மறுத்தான் கோல்யா. ''நீ ஏன் தூங்கவில்லை என்பது இப்போது எனக்குப் புரிகிறது. சிக்கல் என்ன என்றால் நீ திடசித்தம் உள்ளவன். இந்த மாதிரி ஆட்கள் (நல்ல வேளையாக அவர்கள் அரிதாகவே எதிர்ப்படுகிறார்கள்) மயக்கத்தில் ஆழ்வதில்லை. தாங்களே பிறரை வசியம் செய்யத் திறமை உள்ளவர்கள் இவர்கள். டாக்டர் தார்த்தேயின் புத்தகத்தில் கூட இதைப்பற்றி எழுதியிருக்கிறது'' என்று விவரித்தான்.

கோல்யா தன்னைத் திடசித்தம் உள்ளவன் என்று சொன்னது கேனுவுக்கு மிகவும் பிடித்திருந்தது. உள்ளதைச் சொன்னால், தான் மனவசிய நிபுணன் ஆக முடியும் என்று கேனு நினைத்ததே கிடையாது. தான் திடசித்தம் உள்ளவனா இல்லையா என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. உதாரணமாக, திடசித்தம் உள்ளவன் கட்டாயமாக அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும், உடற் பயிற்சி செய்ய வேண்டும், தினந்தோறும் பல் விளக்க வேண்டும், வீட்டுப் பாடங்களைச் செய்ய வேண்டும் என்று இளம் பயனீயர் குழுத் தலைவன் நிக்கீத்தா ஸோத்தவ்

திட்டவட்டமாக அழுத்திச் சொல்வது வழக்கம். அவன் எத்தனையோ தடவை இதைப்பற்றிப் பேசினான். ஆகவே நிக்கீத்தாவிடமிருந்து மட்டும் தப்பித்துக்கொள்ள முடிந்தால், தான் திடசித்தம் இல்லாதவன் என்று ஒப்புக்கொள்ள கேனா தயாராயிருந்தான். இப்போதோ, இதெல்லாம் வெறும் பிதற்றல் என்று ஆகிவிட்டது.

''ஆமாம், நீ இதில் திறமைசாலி ஆக முடியும். என் அனுபவத்தை நம்பு'' என்று நண்பனை அங்கீகாரத்துடன் பார்வையிட்டவாறு சொன்னான் கோல்யா.

கேனாவும் நம்பினான்.

கோல்யா நண்பனுக்குக் கொஞ்சம் கற்றுத் தருவது என்றும் அப்புறம் இருவருமாகச் சேர்ந்து எல்லோரையும் மனவசியம் செய்வது என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

''வா, இப்போது வேறு யாரையாவது வசியம் செய்து பார்ப்போம்'' என்று கோல்யா யோசனை சொன்னான்.

பொதுச் சமையலறையிலிருந்து வந்தது கோல்யாவின் அண்டை வீட்டுக்காரியின் குரல். முதல் வகுப்பு மாணவனான அவளுடைய மகன், தட்டிலிருந்த சூப்பைச் சாப்பிடுவதற்குப் பதிலாக, பாதி ஜாடி பழக்கூழைத் தின்று தீர்த்துவிட்டானாம். அதற்காக அவள் மகனைத் திட்டி நொறுக்கிக் கொண்டிருந்தாள்.

''இவளைத் தூங்கப் பண்ணினால் நன்றாயிருக்குமே, இப்படிக் கத்தாமல் இருப்பாள் அல்லவா?'' என்றான் கேனா.

ஆனால் தன் அண்டைவீட்டுக்காரி மிகவும் திடசித்தம் உள்ளவள் என்றும் தார்த்தே தாமே முயன்றால் கூட அவளை உறக்கத்தில் ஆழ்த்த முடியாது என்றும் கோல்யா சொல்லிவிட்டான்.

''வேறு யாரையாவது மயக்குவோம் வா'' என்றான்.

திறந்த கதவின் வழியே கோல்யாவின் பாட்டியை அவர்கள் கண்டார்கள். கோல்யாவின் உடற்பயிற்சிக் காற்சட்டையை நாய்க்குட்டி வேலிக் தற்செயலாகக் கிழித்துவிட்டது; பாட்டி சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி அதற்கு ஒட்டு

தைத்துக்கொண்டிருந்தாள். கோல்யா கண் ஜாடையால் பாட்டியைக் காட்டினுன். கேஞு தலையசைப்பால் சம்மதம் தெரிவித்தான். இருவரும் எழுந்து கதவருகே சென்ருர்கள். தணிந்த குரலில் பேசிக்கொண்டு சற்று நின்ருர்கள். மாலை ஆகிவிட்டது. அறைக்குள் வெளிச்சம் மங்கிவிட்டது. கேஞு விளக்கு ஸ்விட்சைப் போடப் போஞன். ஆஞல் இருட்டில் இன்னும் நன்ருக மனவசியம் செய்ய முடியும் என்று கோல்யா கிசுகிசுத்தான். பாட்டியின் சாய்வுநாற்காலிக்குப் பக்கவாட்டில் கதவின் பக்கம் நின்றுகொண்டு எதற்காகவோ மறுபடி காற்றில் கைகளை வீசி ஆட்டத் தொடங்கினுன்.

இதற்குப் ''பாஸ்'' என்று பெயர் என்று உரக்கக் கிசுகிசுத்தான்.

இதன் அர்த்தம் என்ன என்று கேட்க கேஞு வாயெடுத்தான், ஆஞல் கோல்யா ''இடைஞ்சல் பண்ணுதே'' என்று தலையசைப்பால் சைகை செய்யவே கேஞு பேசாதிருந்துவிட்டான்.

கோல்யா நிரம்பப் பாடுபட வேண்டிவந்தது. பாட்டி காற்சட்டையில் இன்னும் இரண்டு பெரிய ஒட்டுக்கள் போட்டாள். அப்புறம் அதைப் பார்வையிட்டாள். மேற்கொண்டு ஒட்டைகள் இல்லை என்று உறுதிப்பட்டவுடன் சிறு திண்டுப் பந்தில் ஊசியைச் செருகிவிட்டு நாற்காலி முதுகில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''வசியம் வேலை செய்கிறது'' என்று கிசுகிசுத்தான் கேஞு.

கோல்யா தன் மனவசிய நடவடிக்கைகளை இடை முறிக்காமலே, நண்பனுக்கு முட்டியைக் காட்டினுன். ஒருவனை முட்டியைக் காட்டி வசியம் செய்ய முடியுமா என்ற சந்தேகம் கேஞுவுக்கு உண்டாயிற்று. ஆஞல், கோல்யா மனவசியத்தில் பெரிய திறமை உள்ளவன் என்பது தெரிந்தது. பாட்டி விரைவிலேயே தூங்கிப் போஞள்.

''எப்படி நம் வேலை?'' என்று கேட்டான் கோல்யா.

பதிலுக்கு கேஞு அவன் கையை இறுகப் பற்றிக் குலுக்க மட்டுமே செய்தான்.

பாட்டி ஒரு மணி நேரம் உறங்கியிருப்பாள். அதற்குள் கோல்யாவின் தாயார் வேலையிலிருந்து திரும்பி வந்துவிட்டாள். அப்போது பாட்டி விழித்துக் கொண்டு சாப்பாடு பரிமாறத் தொடங்கினாள்.

''அடே, தூங்கிப் போய்விட்டேன்! கதகதப்பினால் போலிருக்கிறது'' என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டாள்.

பையன்களோ, ஒருவருக்கொருவர் கண் ஜாடை செய்து கொண்டார்கள். பாட்டியின் உறக்கத்துக்குக் காரணம் கதகதப்பு இல்லவே இல்லை என்பது அவர்களுக்குத்தான் தெரியுமே.

''இப்போது அம்மாவை வசியம் செய்து பார்க்கிறேன். நேற்று அலாரம் கெடியாரத்தின் பகுதிகளைக் கழற்றினேன். மடமட்டிக்கெடியாரம் வந்து வாய்த்தது.நான் எல்லாப் பகுதிகளையும் மறுபடி மாட்டிவிட்டேன். அப்படியே, முன் இருந்த மாதிரியே. ஆனாலும் அந்தச் சனி ஓட மாட்டேன் என்கிறது. இதற்காக அம்மா என்னை ஸ்கேட்டிங் மைதானத்துக்குப் போக விட மாட்டேன் என்று சொல்லியிருக்கிறாள். அவள் மனதை மாற்றுகிறேன் இப்போது'' என்று என் காதோடு சொன்னான் கோல்யா.

சாப்பாட்டின்போது கோல்யாவின் தாயார் என்னென்னவோ செய்திகள் சொன்னாள்.

பாட்டியையும் கோல்யாவையும் பார்த்து, ''கேளுங்கள்! நான் வேலை விஷயமாக நாளைக் காலை வெளியூர் போகிறேன். மூன்று நாட்களுக்குப் பிறகுதான் திரும்புவேன். கோல்யாவின் அப்பாவும் இப்போது வீட்டில் இல்லை. ஆகவே பாட்டியும் பேரனுமாக நீங்கள் இரண்டு பேர் மட்டுந்தாம் இருப்பீர்கள். இணக்கமாக இருக்கும்படி உங்களை ரொம்பக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றாள்.

தான் வருவதற்குள் டெலிபோன் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் கோல்யாவின் ரப்பர் ஜோடுகளைச் செப்பனிடக் கொடுக்க வேண்டும் என்றும் இன்னும் என்னவெல்

லாமோ சொல்லிக் கொண்டு போனாள் அவள். திடீரென்று அவள் பார்வை கோல்யாவின்மேல் விழுந்தது. அவன் தட்டின் எதிரே அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

''கோல்யா, நீ எதற்காக ஒன்றுமே சாப்பிடாமல் ஒரே ஏக்கத்துடன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? நான் சீக்கிரம் திரும்பிவிடுவேன், வருத்தப்படாதே. பாட்டி சொற்படி கேள், நன்றாகப் படி. பாடங்களை எல்லாம் செய்துவிட்டாயா? அப்படியானால் போனால் போகிறது. அலாரம் கடியாரத்தை நீ கெடுத்ததை மன்னித்துவிடுகிறேன். சாப்பாட்டுக்குப் பிறகு ஸ்கேட்டிங் மைதானம் போக உன்னை அனுமதிக்கிறேன்'' என்றாள்.

கேனா ஆச்சரியத்தால் வாயிலிருந்த கறிவடையை லபக்கென்று விழுங்கிவிட்டான். அது தொண்டையில் அடைத்துக் கொள்ளப் பார்த்தது. தன் நண்பன் பெரிய மனவசிய நிபுணன் என்பதில் இப்போது அவனுக்குச் சந்தேகமே இல்லை.

கோல்யாவின் வெற்றியால் அவர்களுக்கு உண்டான சந்தோஷத்தில் ஸ்கேட்டிங் மைதானத்துக்குப் போவதில்லை என்று கூடத் தீர்மானித்து விட்டார்கள். மனவசியம் பிரமாதமான விஷயம்! வீட்டில் பாட்டியையும் அம்மாவையும் மட்டுமே அல்ல, யாரை வேண்டுமானாலும் வசியம் செய்யலாமே. சினிமா டிக்கெட் பரிசோதகர்களை டிக்கெட் இல்லாமலே உள்ளே விடும்படி வசியம் செய்யலாம். மிட்டாய்க் கடை விற்பனை ஆட்களை மயக்கலாம். எல்லாவற்றையும் விட முக்கியமானது, பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களை வசியம் செய்துவிடலாம்.

''பாடங்களைச் செய்துவிட்டாயா?'' என்று கேட்டான் கோல்யா.

கேனா ஆம் என்று தலையை ஆட்டினான்.

''எல்லாவற்றையுமா? கணக்குப் பாடத்தைக் கூடவா?''

''ஆமாம், அது ரொம்ப லேசாயிற்றே. இதோ உனக்கு விளக்குகிறேன்'' என்றான் கேனா.

கணக்குப் பாடம் உண்மையிலேயே லேசாயிருந்தது.

கேணு முதல் கேள்வியைச் சொன்னதுமே, ''தெரியும்! தெரியும்!'' என்று கத்தினன் கோல்யா. ''இதோ நான் அதை எழுதிக்கொள்கிறேன். நல்லது. முதலில் வகுக்க வேண்டும், அப்புறம் பெருக்க வேண்டும். இப்போது கூட்ட வேண்டும். ஆகா, சபாஷ்! அடேடே, எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. சொல்லட்டுமா? நானும் நீயும் எல்லாப் பாடங்களையும் தயார் செய்வது அடிக்கடி ஏற்படுவதில்லை. ஆகவே நாளைக்கு ஆசிரியர்களை மனவசியம் செய்வோமே—நம்மிடம் கேள்விகள் கேட்கும்படி! இல்லாவிட்டால் வீணுகப் படிப்பது எதற்கு? நான் நன்ருகப் படித்திருக்கும்போது என்னை யாரும் கேள்விகள் கேட்பதில்லை. ஒரு நாள் பாடங்களைப் படிக்காவிட்டாலோ, 'கோல்யா, பதில் சொல்லு' என்று உடனே கேட்டுவிடுவார்கள். நாளைக்கு முதல் பாடம் என்ன?''

''வரலாறு. ஸெர்கேய் யெகோரவிச்'' என்ருன் கேணு.

''ஆகா, ரொம்ப நல்லது! கேட்கட்டும் கேள்விகள். அவர் கேள்விகள் கேட்டபிறகு பாடங்களை வேண்டுமென்றே படிக்காதிருக்கலாம். அப்புறம் மறுபடி நன்ருகப் படித்துவிட்டு அவரைக் கொஞ்சம் மனவசியம் செய்யலாம்.''

அப்படியே தீர்மானித்தார்கள்.

மறு நாள் கேணு டாக்டர் தார்த்தேயின் புத்தகத்தைப் பற்றி வகுப்பில் எல்லோருக்கும் விவரித்தான். கோல்யா போன்ற பிரமாதமான மனவசிய நிபுணன் தனது வகுப்பான ஐந்தாவது ''ஆ''வில் இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று பெருமைப்பட்டான்.

மாணவர்கள் கேணு சொன்னதை அப்படியே நம்பி விடவில்லைதான். பார்க்கப்போனுல் கேணு கூடக் கோல்யாவை உடனே நம்பிவிடவில்லையே. அவனுடைய பெரிய சக்தியைத் தன் கண்களால் கண்ட பிறகுதானே கேணுவுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

''பாட்டி ஒரே நொடியில் தூங்கிப் போனுள். குறட்டை கூட விட ஆரம்பித்தாள்.... உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

ஸெர்கேய் யெகோரவிச்சின் பாடம் தொடங்கட்டும். மூன்றே நிமிஷங்களில் உங்களுக்கு எல்லாம் நம்பிக்கைப்பட்டுவிடும்'' என்று கேனு வெற்றிக் குரலில் முழக்கினுன். அப்போது முதல் மணி அடித்தது.

வரலாற்று வகுப்புக்கள் மாணவர்களுக்குப் பிடித்திருந்தன. ஏனென்றுல் ஸெர்கேய் யெகோரவிச் எப்போதுமே மிக அருமையாக விவரிப்பார். ஆனுல் அவருடைய கேள்விகளுக்குப் பதில் சொல்வது லேசல்ல.

''நல்லது, வாருங்கள் உரையாடுவோம்'' என்று அவர் மாணவனிடம் சொல்வது வழக்கம். அப்போது அவர் கைகளைத் தேய்த்துக்கொள்வதைப் பார்த்தால் ஏதோ உண்மையாகவே இன்பமான உரையாடல் நடக்கப் போகிறது என்று தோன்றும். அப்புறமோ, ''மூன்ரும் தூத்மோஸ்* என்னென்ன படையெடுப்புக்கள் நடத்திஞன்?'' என்ரே,''ஹம்முராபி**ஆண்டது எத்தனை வருஷங்களுக்கு முன்னுல்?'' என்ரே தொடங்கிவிடுவார்.

ஸெர்கேய் யெகோரவிச்சுடன் உரையாடுவது கேனுவுக்கும் கோல்யாவுக்கும் அவ்வளவாகப் பிடிக்காது. ஆனுல் இப்போது எந்த ஹம்முராபியும் அவர்களைப் பயமுறுத்த முடியாது. எந்த மாதிரித் துரோகக் கேள்விகளும் மனவசியத்துக்கு எதிர் நிற்க முடியாது என்று அவர்கள் உறுதியாக நம்பினுர்கள்.

ஸெர்கேய் யெகோரவிச் அதற்குள் வகுப்புக்குள் வந்து, மாணவர்களுக்கு முகமன் கூறிவிட்டு வகுப்பைச் சுற்றிக் கண்ணேட்டியவாறே கைகளைத் தேய்த்துக்கொண்டார்.

கேனுவும் கோல்யாவும் அவரை விழுங்கிவிடுபவர்கள் போலப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கோல்யா சாய்வு மேஜைக்கு அடியில் சில மனவசியப்''பாஸ்கள்'' கூடச்செய்தான்.

---

* **மூன்ரும் தூத்மோஸ்** — கி. மு. பதினைந்தாம் நூற்ருண்டில் அரசு புரிந்த எகிப்திய அரசன்.

** **ஹம்முராபி** — கி. மு. பதினெட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த பாபிலோனிய அரசன்.

எல்லோரும் நிசப்தத்தில் ஆழ்ந்தார்கள். ஸெர்கேய் யெகோர விச் வகுப்புக்கு நடுவே நின்றபடியே திடீரென மெய்யாகவே உறங்கிவிடுவாரோ? மூடிய கண்களுடனேயே கேள்விகள் கேட் பாரோ, தெரியவில்லையே! கோல்யாவையோ, குறைந்தபட்சம் கேஞவையோ கூப்பிடுவார். ஆனால் ஸெர்கேய் யெகோரவிச் உறங்கவில்லை. மாருக அவருடைய தோற்றத்தில் உற்சாகமும் குதூகலமும் பொங்கின.

''நல்லது, வாருங்கள், கொஞ்சம் உரையாடுவோம்'' என்ருர்.

கேலிக் கிசுகிசுப்பு வகுப்பு முழுவதும் பரவிற்று. ஒருவன் ஹி-ஹி-ஹி என்று உரக்கவே நகைத்துவிட்டான். ஆனல் ஸெர் கேய் யெகோரவிச் ஆச்சரியத்துடன் தலையை நிமிர்த்தியதுமே எல்லோரும் மௌனமாகி விட்டார்கள்.

''லுத்மீலா சீரிக்கொவா!'' என்று கூப்பிட்டார் ஸெர்கேய் யெகோரவிச்.

கேஞவுக்கும் கோல்யாவுக்கும் வரலாற்றுப் பாடத்தில் அக்கறையே இல்லாது போயிற்று. மனவசியம் ஸெர்கேய் யெகோரவிச்சைப் பாதிக்காதது ஏன் என்பதைத் தெரிந்து கொள்ளவே அவர்கள் விடாது முயன்று கொண்டிருந்தார்கள். வகுப்பு முடிவதற்கான மணி அடித்ததும் எல்லோரும் இரு நண்பர்களையும் சூழ்ந்துகொண்டார்கள்.

''ம்ம்-ம், இது ஒன்றும் பாட்டியைத் தூங்கச் செய்வது போல லேசல்ல'' என்று நஞ்சு தோய்ந்த குரலில் சொன்ஞன் நிக்கீத்தா ஸோத்தவ்.

அவன் மேலே பேசுவதற்குள் கோல்யா குறுக்கிட்டான்.

''பொறு, நிக்கீத்தா. தூங்கப் பண்ணுவது அல்ல விஷயம். தூங்குவது கட்டாயம் அல்ல. சிக்கல் என்ன என்று எனக்குப் புரிகிறுற்போல் இருக்கிறது. கேஞ, ஸெர்கேய் யெகோரவிச்சை நீ மனவசியம் செய்தாயா?'' என்று நண்பனிடம் கேட்டான்.

''ஆமாம். அவர் என்னை அழைக்கும்படி வசியப்படுத்த முயன்றேன்'' என்று ஏக்கத்துடன் சொன்ஞன் கேன்கா.

''அதுதானே கேட்டேன்! அவர் என்னைக் கூப்பிடும்படி நான் வசியம் செய்ய முயன்றேன். என்ன நடந்தது என்று எண்ணிப் பார்க்கிறீர்களா? பாவம், ஸெர்கேய் யெகோரவிச்சின் மேல் இரண்டு சக்திமிக்க மனவசியக்காரர்கள் தாக்கு நடத்தியிருக்கிறோம். யாருக்குக் கீழ்ப்படிவது என்று வெகு நேரம்வரை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. ஒருவனிடமிருந்து மற்றவனிடமாக ஊசலாடினார், பின்பு....''

''அப்படியானால் சீரிக்கொவாவை அவர் எதற்காகக் கூப்பிட்டாராம்? தவிர அவளுக்குச் சிறப்பு மார்க்குகள் வேறு கொடுத்தாரே. ஒருவேளை அவளும் மனவசிய நிபுணியோ?'' என்று ஊசி நுழைத்தான் நிக்கீத்தா.

கோல்யாவோ, ''ஹ்ம்'' என்று அலட்சியமாக நொடித்தான்.

''எதற்காக?'' என்று திருப்பிக் கேட்டான். ''இந்தச் சீரிக்கொவா எங்கே உட்கார்கிறாளாம்?''

நிக்கீத்தாவுக்கு விளங்கவில்லை.

''எங்கேயாவது? வகுப்பில் தான்'' என்றான்.

''வகுப்பில் என்பதுதான் தெரிகிறதே. வகுப்பில் எந்த இடத்தில்?''

''எங்கே, எங்கே? ஆமாம், நான்காவது வரிசையில். எல்லாம் ஒன்றுதானே அல்லவா?''

''எல்லாம் ஒன்றுதான் என்றால் எல்லாரும் ஜன்னல் வழியே ஏறிக் குதிப்பார்களே'' என்று ருஷ்யப் பழமொழியைச் சாதுரியமாகக் கூறினான் கோல்யா.

''நீ எப்போதுமே ஜன்னல் வழியேதானே ஏறிக் குதிக்கிறாய்'' என்று குறுக்கிட்டாள் ரீத்தா அமெரீத்ஸ்கயா. ''போன வருஷம் கலீனா ல்வோவ்னாவுக்கு உடம்பு சரியாயில்லாத போது யெலேனா விளாதீமிரவ்னா அவளுடைய இடத்துக்கு வந்தாளே, அப்போது ஜன்னல் வழியே ஏறிக் குதித்தது யார்?''

''பழங் குப்பையைக் கிளற ஆரம்பித்து விட்டாயா?

இதற்கும் விஷயத்துக்கும் சம்பந்தமே இல்லை. முக்கியமானது என்ன? நான் எங்கே உட்கார்கிறேன்? முன் வரிசையில்.''

''நீ ஒரே துருதுருப்பை. அதனால்தான் உன்னை வேண்டுமென்றே முன் வரிசையில் உட்கார்த்தியிருக்கிறார்கள்'' என்று மறுபடி சூடு கொடுத்தாள் ரீத்தா.

ஆனால் கோல்யா கைகளை வீசியாட்டி அவளைப் புறக்கணித்துவிட்டான்.

''கேனு எங்கே உட்கார்கிறான்? பின் வரிசையில்!''

''ஆமாம், அதனால் என்ன?''

''உண்மைதான்!'' என்று திடீரெனக் கத்தினான் கேனு.

தங்கள் தோல்வியின் காரணம் இப்போது அவனுக்கும் விளங்கிவிட்டது.

''நீ முன்னால், நான் பின்னால், சீரிக்கொவா நடு வரிசையில். அதனால்தான் ஸெர்கேய் யெகோரவிச் அவளை அழைத்தார்.''

''அடுத்த பாடம் கணக்கு. நல்லது. நான் லீதியா பெத்ரோவ்னாவை மனவசியம் செய்யப் போகிறேன். நீ எனக்கு இடைஞ்சல் பண்ணாதே, தயவுசெய்து'' என்றான் கோல்யா.

''நீயே எதற்காகவாம்?'' என்று மறுத்தான் கேனு. ''நீ தான் வீட்டில் பாட்டியையும் அம்மாவையும் மனவசியம் செய்தாயிற்றே. நானோ, இன்னும் ஒருவரையும் வசியம் செய்ய வில்லை. இப்போது நானே பண்ணுகிறேனே வசியம். நேற்று அவ்வளவெல்லாம் தயார் செய்துகொண்டேனே, வெட்டியாகத் தானா?''

ஆசிரியையை யார் மனவசியம் செய்வது என்பது பற்றி நண்பர்கள் நெடு நேரம் வாதாடினார்கள். அப்புறம், தார்த்தேயின் புத்தகத்தை முதலில் தேடி எடுத்தவன் கோல்யாதான் என்பதை எண்ணி கேனு விட்டுக் கொடுத்தான்.

''சரி, போகிறது. நீயே வசியம் செய். நான் நாளைக்கு இன்னொரு தரம் கற்றுக்கொள்கிறேன்'' என்று பெருந்தன்மையுடன் சொன்னான்.

கேளு தன் பின் வரிசை இடத்தில் அமைதியாக உட்கார்ந் திருந்தான். வீட்டுப் பாடங்கள் சரி பார்க்கப்பட்ட போதுகூட அவன் கையை உயர்த்தவில்லை—கோல்யா மனவசியம் செய் வதில் குறுக்கிடக் கூடாது என்பதற்காக. லீதியா பெத்ரோவ்ஞ இதோ விடைகளைச் சரி பார்ப்பாள், பின்பு கோல்யாவைக் கட் டாயமாக அழைப்பாள், கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கு. ஏற்கனவே பல முறை அவள் அவனைப் பார்த்துவிட்டாள்.— இப்படி எண்ணமிட்டான் கேளு.

ஆனால் லீதியா பெத்ரோவ்னாவோ, யாரையுமே எதுவும் கேட்கவில்லை. தான் நோய்ப்பட்டிருந்த போது பாடத் திட்டத் தில் அவர்கள் கொஞ்சம் பின் தங்கிவிட்டதாகவும், அதனால் இன்று புதுப் பகுதியைக் கற்றுத்தரப் போவதாகவும் சொன்னாள்.

கேளு ஒரு சிறிது வாட்டம் அடைந்தான். ஆனால் கோல்யா மனம் தளரவில்லை. லீதியா பெத்ரோவ்னாவைப் பார்க்க வாக் காக இருக்கும்படி உட்கார்ந்து கொண்டு அவளை வசியம் செய்ய லானான் (வாய்க்குள்ளாகத் தான்): ''என்னைக் கேளுங்கள்! என்னைக் கேளுங்கள்! என்னைக் கேளுங்கள்!'' என்று.

லீதியா பெத்ரோவ்ஞ வெகு நேரம்வரை வசியத்துக்குக் கட்டுப்படவில்லை. புது விதியை அவள் விளக்கினாள். சில உதார ணக் கணக்குகளைக் கரும்பலகைமேல் போட்டுக் காட்டினாள். பின்பு, ''கோல்யா நேஸ்தெரவ், நீ ஓயாமல் மேஜைக்கு அடியில் ஏதோ செய்து கொண்டிருக்கிறாய். எங்கே, கரும்பலகை அருகே வந்து, நான் இப்போது விளக்கியதைத் திருப்பிச் சொல்'' என்றாள்.

மாணவர்கள் எல்லோரும் கல்லாய்ச் சமைந்துவிட்டார்கள். மனவசியத்துக்கு உள்ளான லீதியா பெத்ரோவ்ஞ கோல்யாவின் நாட்குறிப்புப் புத்தகத்தில் சிறப்பு மார்க்குகள் போடுவதை முன்கூட்டியே கற்பனை செய்துகொண்டான் கேளு. ஆனால் கோல்யாவின் வசிய மந்திரங்கள் அவள்மேல் பலமான பாதிப்பு ஏற்படுத்தவில்லை என்பது தெரிந்தது.

‘‘என்ன, பேசாமல் இருக்கிருய், கோல்யா? இப்போது தானே எல்லாவற்றையும் விளக்கினேன்? உனக்குப் புரியவில்லை யா என்ன?’’ என்று ஆச்சரியப்பட்டாள் ஆசிரியை. ‘‘நல்லது. பாடங்கள் முடிந்தபின் வகுப்பிலேயே இரு. நீ இவ்வளவு மந்த புத்தி என்ருல் உனக்கு இன்னெரு தரம் விளக்குகிறேன்’’ என்ருள்.

லீதியா பெத்ரோவ்ளு கோல்யாவுக்குச் சுழி போடவில்லை தான், என்ருலும் மனவசிய நிபுணன் என்ற அவனுடைய மதிப்பு வகுப்பில் வெகுவாகக் குறைந்து போயிற்று.

ஹ.கலீலவா

கடல் வண்ணத்துப் பூச்சிகள்



உல்தூஸ் தாத்தாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவர் கடலில் பெட்ரோலியம் எடுக்கும் தொழிலில் வேலை செய்துவந்தார். இன்று அவர் வீடு திரும்ப வேண்டிய நாள். ஆனால் புயல் கிளம்பி விட்டது. அந்த மாதிரி நாட்களில் கடலில் அலைகள் மூன்று மாடி வீடுகளைவிட உயரமாக எழும்புமாம், குளிர் காற்று வாள்போல் அறுக்குமாம், சாம்பல்நிற மேகங்கள் ஆகாயத்தைக் கனமாகப் போர்த்து மூடிவிடுமாம், அதனால் சுற்றிலும் ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாதாம்.

கடல் நடுவில் மக்கள் பெரிய நகரம் ஒன்றை அமைத்திருப்பதாக உல்தூஸ் தாத்தா சொல்லக் கேட்டிருந்தாள். அதில் வீதிகள் ரொம்ப ரொம்ப நீளமாம். அவற்றில் பெரிய பெரிய மாடி வீடுகள் உண்டாம். இந்த மாதிரி ஒரு வீட்டில் தாத்தா வசிக்கிறாராம். குடைவு கோபுரத்தில்* வேலை செய்யும் ஒரு வாரம் முழுவதும் அவர் அந்த வீட்டில் இருப்பார். அப்புறம் சொந்த வீட்டுக்குத் திரும்பி வருவார். இளைப்பாறிய பின் மறுபடி தம் கடல் நகரத்துக்குப் போய்விடுவார். உள்ளதைச் சொன்னால், கடலுக்கு நடுவில் உண்மையான நகரம் இருப்பதாக உல்தூஸ் ரொம்ப நம்பிவிடவில்லை. ''தாத்தா ஒருவேளை இதை எல்லாம் வெறுமே கதை போல இட்டுக்கட்டிச் சொல்லுகிறாரோ?'' என்று நினைத்தாள். தாத்தாவிடம் விவரமாக விசாரித்தாள்:

''தாத்தா, உன்னுடைய அந்த நகரத்திலே சினிமா உண்டா?''

''உண்டு'' என்றார் தாத்தா.

''கடை?''

''உண்டு.''

''நூலகம் கூட இருக்கிறதா?''

''நூலகமும் தான் இருக்கிறது.''

''மோட்டார்கள்?''

---

* குடைவு கோபுரம்—தரையைக் குடைந்து அதன் ஆழத்திலிருந்து பெட்ரோலியத்தை வெளியே இறைப்பதற்கான சாதன அமைப்பு.

''சந்தேகமில்லாமல். எங்கள் நகரத்தில் சவாரிக் கார்களும் லாரிகளும் நிறைய உண்டு.''

''மிருகக் காட்சிசாலையும் இருக்கிறதா உங்கள் நகரத்தில்?''

தாத்தா புன்சிரிப்புடன் தலையை அசைத்தார்.

''இல்லாததை இல்லை என்று ஒப்புக்கொண்டு விட வேண்டும். மிருகக் காட்சிசாலை இன்னும் அமைக்கப்படவில்லை. ஆனால் எங்கள் ஊரில் பறவைகள் ஏராளம். வேறு என்ன கேட்க விரும்புகிறாய், குழந்தாய்?''

இன்னும் என்ன கேட்கலாம் என்று உல்தூஸ் யோசனை செய்தாள். ஒரு கேள்வி அவளுக்குத் தோன்றியது.

''உங்கள் நகரத்தில் பூச்செடிகள் இருக்கின்றனவா?''

''நிச்சயமாக! பூச்செடிகள் வளரவில்லை என்றால் அதுவும் ஒரு நகரம் ஆகுமா? உனக்கு ஆசையாய் இருந்தால் ஒரு பூச்செண்டு கொண்டுவருகிறேன். கொண்டுவரட்டுமா?''

''கட்டாயம் கொண்டுவா. எனக்கு ரொம்ப ரொம்ப ஆசையாய் இருக்கிறது!''

இப்போது உல்தூஸ் தாத்தாவின் வரவை ஆவலே வடிவாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். காற்றோ, வேண்டுமென்றே போல வர வரப் பலத்தது. பாட்டி வெளியே பார்த்தாள், அறைக்குள் வந்தாள், மனச்சோர்வுடன் தலையை ஆட்டினாள்.

''இல்லை, நம் தாத்தா இன்றைக்கு வரமாட்டார் என்றே தோன்றுகிறது!'' என்றாள்.

குளிர் காலம் கழிந்தது. கதகதப்புள்ள இனிய பருவம் தொடங்கிற்று. வெயில் பூமியை இதமாக வருடிற்று.

அப்போது ஒரு தடவை தாத்தா வேலையிடத்திலிருந்து திரும்பிய சமயத்தில் பேத்திக்குச் சிவப்பு ரோஜாப் பூக்கள் கொண்டுவந்தார்.

''குறும்புக்காரி, எங்கள் பட்டணத்திலும் பூச்செடிகள் வளர்கின்றன என்பதை இப்போது நம்புகிறாயா?'' என்றார்.

உல்தூஸ் ரோஜா மலர்களைப் பூப் படிக்கத்தில் வைத்தாள். தாத்தாவோ, சில நாட்களுக்குப் பிறகு தம்முடைய

அற்புத நகரத்துக்கு மறுபடி போய்விட்டார். இந்தத் தடவை கடல் அமைதியாக இருந்தது. கடல் நீர் ஸ்படிகம்போல் தெளிந்திருந்தது. கும்மாளம் போடும் மீன் கூட்டங்கள்கூடக் கண்ணுக்குத் தெரிந்தன.

மரப் பாலவீதி வழியே தம் குடைவு கோபுரத்தை நோக்கி நடந்தார் தாத்தா. பாலவீதியின் இரு மருங்கிலும் பெரிய பெரிய மரத் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பல நிற மலர்ச் செடிகள் இருந்தன. செடிகளுக்கு மேலே வட்டமிட்டுப் பறந்தன பளிச்சிடும் வண்ணத்துப் பூச்சிகள். மாலையில் திரும்பியபோது தாத்தா ஒரு வண்ணத்துப் பூச்சியைப் பிடித்துக் கண்ணாடிப் பாத்திரத்தில் பத்திரமாக வைத்துக்கொண்டார்.

''என்ன, பெரியவரே, இந்தப் பூச்சி உமக்கு எதற்கு?'' என்று அவருடைய தோழர்கள் கேட்டார்கள்.

''பேத்திக்காக எடுத்துப் போகிறேன். நமது கடல் நகரத்தில் எந்த மாதிரி அழகான பூச்சிகள் இருக்கின்றன என்று பார்த்து மகிழட்டும்!'' என்றார் தாத்தா.

ஷு. பெய்ஷெனலீயெவ்

வெள்ளை ஒட்டகக் குட்டி



1. உஸ்மானும் அவன் தாத்தாவும்

உஸ்மான் சின்னவனும் அல்ல, பெரியவனும் அல்ல. அவனுக்கு ஐந்து வயது. அவன் பெரிய நகரத்தில் வசித்தான். தினந்தோறும் குழந்தைப் பள்ளிக்குப் போய்வந்தான். நகரத்திலிருந்து வெளியே எங்குமே அவன் போனது இல்லே. தாத்தா வீட்டுக்குக் கூடப் போனது கிடையாது. தாத்தாவும் பாட்டியும் வெகு தூரத்தில், உயர்ந்த மலேகளுக்கு நடுவே இருந்த குடியிருப்பில் வசித்துவந்தார்கள். கோடைகாலத்தில் ஜைலூ என்னும் வேனிற்கால மேய்ச்சல் நிலத்துக்கு அவர்கள் வருவார்கள். உஸ்மானின் தாத்தா குதிரை மந்தை மேய்ப்பர்.

தாத்தாவும் பாட்டியும் சில வேளேகளில் நகரத்துக்கு வருவார்கள்—பேரனேப் பார்ப்பதற்காக. அவர்கள் உஸ்மானுக்குத் தின்பண்டங்கள் கொண்டுவருவார்கள். தின்பண்டங்கள் கடையில் வாங்கியவை அல்ல. பாட்டியே தன் கைப்படத் தயாரித்தவை.

நகரத்துக்கு வெளியே எங்கோ, மலேகள் வானளாவ உயர்ந்து நிற்கின்றன. அவற்றுக்கு மேலே, சிறகுகளே அகல விரித்து ஒய்யாரமாகப் பறக்கின்றன கழுகுகள். மலேகளில் ஆழமான கணவாய்களும், கடக்கமுடியாத ஊசியிலே மரக் காடுகளும் உண்டு. இந்தக் காடுகளில் பலவித மிருகங்கள் திரிகின்றன. அங்கே குளிர்ந்த ஏரிகளும் தெள்ளத் தெளிந்த நீரோடைகளும் உள்ளன. பசும் புல் தரைகளில் செம்மறிகளும் வெள்ளாடுகளும் குதிரை மந்தைகளும் ஒட்டக மந்தைகளும் மேய்கின்றன. இந்த விவரங்கள் உஸ்மானுக்குத் தெரியும். இவை எல்லாம் உஸ்மானுக்கு ஏதோ மாயக் கதைபோலத் தோன்றும். இவை எல்லாமே ஜைலூ என்ற ஒரு வார்த்தையில் கலந்து ஒன்ருகிவிடும். அங்கே தாத்தா வசிக்கிருர். இங்கே நகரத்தில் இருப்பதைவிட அங்கே எவ்வளவோ இன்பமாயிருக்கும்.

''தாத்தா, என்னேயும் உன்னுடன் மலேக்கு அழைத்துப் போயேன். வெள்ளாட்டுக் குட்டிகளோடும் செம்மறிக்

குட்டிகளோடும் விளையாட எனக்கு ஆசையாய் இருக்கிறது'' என்று கெஞ்சினன் உஸ்மான்.

அப்புறம் அழைத்துப் போவதாகத் தாத்தா வாக்களித்தார்.

''இப்போது பனிக்காலம். குளிர் கடுமை. கோடைகாலம் வரட்டும், கட்டாயம் அழைத்துப்போகிறேன். உனக்காக ஒரு பரிசுகூட வைத்திருக்கிறேன்'' என்ருர்.

''என்ன பரிசு? சொல்லு, சீக்கிரம் சொல்லு!'' என்று அடக்க முடியாத ஆவலுடன் கேட்டான் உஸ்மான்.

அது ஒரு வெள்ளை ஒட்டகக்குட்டி என்றும் அதன் ரோமம் அன்னப் பட்சியின் தூவிபோல இருக்கும் என்றும் சொன்ஞர் தாத்தா.

ஒட்டகக்குட்டி ஆறு மாதங்களுக்கு முன் பிறந்தது. ஜனங்களின் வழக்கப்படி முதிய மேய்ப்பர் தம் பேரன் உஸ்மான் அதன் சொந்தக்காரன் என்று முன்கூட்டியே நிச்சயம் செய்துவிட்டார்.

''சொந்தக்காரன் இல்லாவிட்டால் மிருகத்துக்கு ஆக்கம் இராது. அது அழிந்துவிடும். நீ ஒட்டகக்குட்டியின் சொந்தக்காரன் ஆவாய், என் குழந்தாய். அதனுடன் விளையாடுவாய், அதை வளர்ப்பாய் '' என்ருர் தாத்தா.

மறு நாளே தாத்தாவும் பாட்டியும் நகரத்திலிருந்து தங்கள் கிராமத்துக்குப் போய்விட்டார்கள். பேரன் மனது நோகக்கூடாது என்பதற்காக, பகலில் அவன் வீட்டில் இல்லாத வேளையில் புறப்பட்டுப் போஞர்கள் அவர்கள்.

சாயங்காலம் குழந்தைப் பள்ளியிலிருந்து திரும்பி வந்த உஸ்மான், ''நான் தாத்தாவிடம் போவேன்! மலைக்குப் போவேன்'' என்று வீரிட்டு அழுதான்.

''இவனை என்ன செய்வது? இப்படி முரண்டு பிடிக்கிருனே'' என்ருள் அம்மா.

''கோடையில் இவனை ஜைலூவுக்கு அனுப்ப வேண்டியது தான். அங்கே இவன் உடம்பு தேறட்டும், வலுவாகட்டும்'' என்ருர் அப்பா.

பனிக்காலம் கழிந்தது. வசந்தமும் போய், நீண்ட நாள் எதிர்பார்த்த கோடைகாலம் வந்தது. நகரத்தில் வெக்கையும் புழுக்கமுமாக இருந்தது. அப்போதும் தாத்தா வந்த பாடில்லை.

இந்த நாட்களில் உஸ்மான் வர வர அதிகமாக முரண்டு பிடித்தான், ஜைலூவே நினைவாக இருந்தான்.

''தாத்தா ஏன் வரவில்லை? சொந்தக்காரன் இல்லாமல் ஒட்டகக் குட்டியால் வாழ முடியாதே'' என்று எண்ண மிட்டான்.

''தாத்தாவுக்குக் கடிதம் எழுதுவோம் வா'' என்றார் அப்பா.

அப்பா காகிதத்தையும் பேனாவையும் மைக்கூட்டையும் எடுத்து வந்தார். அவர்கள் கடிதம் எழுதினார்கள். உஸ்மான் பக்கத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இன்னும் எழுதத் தெரியாது.

ஆனால் கையெழுத்து உஸ்மான்தான் போட்டான். காகி தத்தின்மேல் கையை வைத்தான். அப்பா அதைச் சுற்றிப் பென் சிலால் கோடு இழுத்தார். ஒரு வகையான கையெழுத்து பதிந்து விட்டது.

அப்புறம் அப்பாவும் பிள்ளையும் வெளியே போய், கடிதத் தைத் தபால் பெட்டியில் போட்டார்கள். ஒரு மணி நேரத்திற் கெல்லாம் உஸ்மான் தாத்தாவை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டான்.

''அவர் ஏன் வரக் காணோம்? ஏன் வரக் காணோம்? நாம் தாம் அவருக்குக் கடிதம் எழுதிவிட்டோமே?'' என்று ஆச்சரியப் பட்டான்.

சாயங்காலம் கழிந்தது, அடுத்த நாள் கழிந்தது, இன்னும் மூன்று நாட்கள் வந்து போயின. அப்படியும் தாத்தா வரவில்லை.

ஒரு நாள் பொழுது விடியும் தறுவாயில், உஸ்மான் தன் மரக் கட்டிலில் படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த போது, யாரோ தன் பக்கம் குனிந்து கழுத்தில் கிச்சுக்கிச்சு மூட்டியது போல அவனுக்குத் தோன்றியது.

தான் சொப்பனம் காண்பதாக நினைத்தான் உஸ்மான். ஜைஹூ என்ற குடியிருப்பும் வெள்ளை ஒட்டகக்குட்டியும் மெய் யாகவே அவனுக்குக் கனவில் தோன்றின. ஒட்டகக்குட்டி மென் மயிர் அடர்ந்த விலாவை அவன் கன்னத்தோடு சேர்த்து அழுத் திற்று.

ஒட்டகக்குட்டியை இன்னும் நன்ருகப் பார்க்க உஸ்மா னுக்கு ஆசை உண்டாயிற்று. அதனுல்தான் போலும், அவன் கண்களைப் பாதி திறந்தான்.

''அடே என் கண்ணே! விழித்துக்கொண்டு விட்டாயா? இதோ பார், நான் உன்னை அழைத்துப் போக வந்திருக்கிறேன்'' என்று சொல்லி, பேரனைத் தூக்கி நிறுத்திஞர் தாத்தா.

உஸ்மான் கட்டிலிலிருந்து தாத்தாவின் மடிக்குத் தாவினுன்.

''ஆகாகா, தாத்தா, நீ வந்துவிட்டாயா?'' என்று சந் தோஷம் பொங்க ஆரவாரித்தான்.

''பாருங்கள், பாருங்கள், எனக்காகக் குழந்தை எப்படி ஏங்கிப் போயிருக்கிருன் என்று. நான்தான் வந்திருக்கிறேன், என் குஞ்சுப் பயலே, நான்தான்'' என்று கிளர்ச்சியுடன் சொன் ஞர் தாத்தா.

உஸ்மான் தாத்தாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினுன்.

''ஒட்டகக்குட்டிதான் கிச்சுக்கிச்சு மூட்டுகிறதாக்கும் என்று நினைத்தேன்'' என்ருன்.

''உன் ஒட்டகக்குட்டி பெரிதாகி விட்டது. தன் சொந்தக் காரனை எதிர்பார்க்கிறது. நீ அதன்மேல் ஏறிச் சவாரிகூடச் செய்யலாம்'' என்ருர் தாத்தா.

''அப்படியா? அது என்னைவிடச் சின்னது என்ருல் நான் அதன்மேல் எப்படி உட்காருவேனும்?'' என்று ஆச்சரியத் துடன் கேட்டான் உஸ்மான்.

''அது ஒட்டகக்குட்டி ஆயிற்றே, அதனுல் தான். இப் போது அது பெரியது. அதற்கு இரண்டாவது வயது நடக்கிறது.''

''என்னை ஏற்றிக்கொண்டு போக அது இசையுமா? நாம் இப்போதே புறப்படுவோமா?'' என்று விடாமல் கேட்டான் உஸ்மான்.

உஸ்மானுக்கு இப்போது தூக்கக்கலக்கம் அடியோடு போய்விட்டது. தாத்தாவின் மடிமேல் துள்ளினான். அப்புறம் அவர் தோள்கள்மேல் ஏறினான்.

''நாளைக்குப் புறப்படுவோம், குழந்தாய்! நாளைவரை பொறுத்துக்கொள்!'' என்றார் தாத்தா. ''இப்போது மூட்டையை அவிழ்ப்போம், பாட்டி உனக்கு என்ன அனுப்பியிருக்கிறாள் என்று பார்ப்போம்....''

2. ஜைலூ போகும் வழியில்

ஜைலூ போகும் வழி உஸ்மான் நினைத்ததுபோல் அவ்வளவு எளிதாக இல்லை. முதலில் அவர்கள் பஸ்ஸில் உட்கார்ந்து கூட்டுப் பண்ணைக் கிராமத்துக்குப் போகும் சாலையில் கடகடத்துக்கொண்டு சென்றார்கள். சாலை சமமில்லாமல் வளைந்து நெளிந்து போயிற்று. வழி நெடுக வெயில் பொசுக்கிற்று. பஸ்ஸுக்குள் வெப்பமும் புழுதியுமாக இருந்தது.

''தாத்தா, நம் ஊர் சீக்கிரம் வந்துவிடுமா?'' என்று சிணுங்கத் தொடங்கினான் உஸ்மான். உலுக்கிப்போட்டு ஒரே புழுக்கமாயிருந்த பஸ்ஸின் ஜன்னல் வழியே அவன் கண்டவை ஒன்றுமே மாயக் கதையை ஒத்திருக்கவில்லை.

கடைசியில் ஒரு விதமாகக் கிராமம் கண்ணுக்குத் தெரிந்தது. ஆனால் பயணம் இன்னும் முடியவில்லை என்று உஸ்மான் விசாரித்து அறிந்துகொண்டான். இன்னும் குதிரைச் சவாரி செய்ய வேண்டியிருந்தது. இது பஸ் பயணத்தைவிட எவ்வளவோ கவர்ச்சியாக இருந்தது.

தாத்தா உஸ்மானைச் சிறு குதிரை ஒன்றின் சேணத்தின் மேல் உட்கார வைத்தார். அது கட்டுக்குட்டான குதிரை.

அடர்ந்த பிடரியும், அனேமாகத் தரையைத் தொட்டுக் கொண்டிருந்த பெரிய வாலும் உள்ளது. குதிரை மேல் பேரனை உட்கார்த்திவிட்டுத் தாத்தா அவன் பின்னே உட்கார்ந்து, அவனை இறுக அணைத்துக் கொண்டார். குதிரை புறப்பட்டது.

உஸ்மான் அதற்கு முன் குதிரையின் பக்கத்தில்கூடப் போனதில்லை. இப்போதோ, நிஜக் குதிரைமேல் கம்பீரமாக அமர்ந்து, சேணத்தின் முன்வளைவை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தான். தான் உண்மையான குதிரை வீரன் என்று அவனுக்குத் தோன்றியது.

இரண்டு பக்கங்களிலும் இருந்தன தங்கநிறத் தானிய வயல்கள். எதிரே உயரமான மலை முகடுகள் நின்றன. பாதை கல்லும் கரடுமாக இருந்தது. அதன் ஓரங்களில் மலைச் சரிவுகள் மீது பிர் மரங்கள் வரவர அடிக்கடி காணப்படலாயின. அவை வளர்ச்சி குறைந்தவை. கோணல் அடிமரங்கள் உள்ளவை. பிர்ச் மரங்களும் ஆர்ச் மரங்களும் வளர்ந்திருந்தன. புதர்கள் செழிப்பாக அடர்ந்திருந்தன.

''என்ன, குஞ்சுப் பயலே, உனக்குத் திருப்திதானே?'' என்று கேட்டார் தாத்தா. அப்போது அவர்கள் குறுகலான மலைக்கணவாயில் புகுந்திருந்தார்கள்.

உஸ்மான் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவன் சந்தோஷமாய் இருப்பதை அவன் முகமே காட்டிற்று.

கணவாயில் நிழல் அடர்ந்து குளுகுளுவென்று இருந்தது. சில்லென்று வீசிய காற்று உஸ்மானின் சிவப்பேறிய முகத்தை இதமாக வருடிற்று. பாறுங்கற்களின் வழியே ஜாக்கிரதையாக அடிவைத்து நடந்த குதிரையின் லாடங்கள் கற்பாங்கான பாதையில் டக் டக்கென்று ஒலித்தன.

''ஆகாகா, அருமை!'' என்று பேரனை இறுக அணைத்துக் கொண்டு சொன்னார் தாத்தா.

நாலா பக்கமும் எவை எவையோ பட்சிகள் பாடின. மலை ஓடைகள் அவற்றுக்கு ஒத்துப் பாடின.

உஸ்மான் மேலே பார்த்தான். அங்கே பாறைகளுக்கும் மரங்களுக்கும் நடுவில் எட்டிப் பார்த்தது ஆழ்நீல வானம். இரண்டு பிரமாண்டமான பறவைகளை அவன் கண்டான். அவை காற்றில் அசையாது மிதப்பவை போல் தோன்றின. அவற்றில் ஒன்று திடீரென்று சிறகுகளை மடக்கி, பாறைகளுக்குப் பின்னால் எங்கேயோ எறிந்த கல் போன்று பாய்ந்துவிட்டது

''இவை கழுகுகள், குழந்தாய். இரை தேடி வட்டமிடுகின்றன'' என்று விளக்கினார் தாத்தா.

திடீரென்று தாத்தா பாடத் தொடங்கினார், ஆரம்பத்தில் தணிந்த குரலிலும் அப்புறம் உரக்கவும். அவருடைய நடுங்கும் குரல் கணவாயில் அதிர்ந்து ஒலித்தது:

> **விண்ணை முட்டும் தியான்-ஷான் முடிகள்—திடல்**
> **வெளிகளில் ஆறுகள் பாயும்.**
> **கண்ணுக்கினிது கிர்கீஸியா—அதன்**
> **காதல் மக்கள் இன்பம் உற்றார்.**

மலைகளும் தாத்தாவின் பாட்டைப் பாடுவதைக் கேட்டு, ''இது என்ன, தாத்தா?'' என்று வினவினான் உஸ்மான்.

''இது எதிரொலி, குஞ்சுப் பயலே. அதுவும் நம்மோடு சேர்ந்து பாடுகிறது'' என்று விளக்கினார் தாத்தா.

''ஆ-ஊ-ஊ!'' என்று பலமெல்லாம் கொண்டு கத்தினான் உஸ்மான்.

அவனைக் கோரணி செய்வதுபோல ''ஆ-ஊ-ஊ!'' என்று ஒலித்தது கணவாய்.

காட்டுரோஜாப் புதர்களும் பார்பெர்ரிப் புதர்களும் தென்பட்டன. மலை அசோகுப் பழக் குலைகள் அனேகமாக உஸ்மானின் தலைக்கு மேலே தொங்கின. சிவந்த பழங்களைப் பறிப்பதற்காக உஸ்மான் கைகளை நீட்டினான். ஆனால் அவை எட்டவில்லை.

தாத்தா பாட்டை நிறுத்திவிட்டு, ''ஜாக்கிரதை, விழுந்துவிடப் போகிறாய். சீக்கிரம் வழித் தங்குவோம். அப்போது பறித்துக்கொள்'' என்றார்.

உயர்ந்த பாறைகளைச் சுற்றிக்கொண்டு, பசுமையான மலைச் சரிவின் வழியே வளைந்து சென்ற ஒற்றையடிப் பாதையில் மேலே ஏறினார்கள். அங்கே அதிக வெளிச்சமாகவும் வெக்கையாகவும் இருந்தது. அசோக மரங்கள் வரவர இன்னும் நெருக்கமாக வளர்ந்திருந்தன. அதற்குள் உஸ்மான் சவாரிக்குப் பழகிவிட்டான். சேண விளிம்பை இப்போது ஒரு கையால் மட்டுமே பிடித்துக் கொண்டிருந்தான். மறு கையால் பழங்களைப் பறிக்கமுயன்றான். ஆனால் எப்போதாவதுதான் பறிக்கமுடிந்தது.

''குஞ்சுப் பயலுக்குத் தாகம் எடுத்துவிட்டதோ? '' என்று கேட்டு, பதிலுக்காகக் காத்திராமலே குதிரையை நிறுத்தினார் தாத்தா.

வேகமாகத் தரையில் குதித்தார். பின்பு உஸ்மானை இறக்கி விட்டு விட்டுப் பயணப் பையை எடுத்துக் கீழே வைத்தார். உஸ்மான் உடனேயே அசோகு மரத்தின் பக்கம் ஓடினான். உயர்ந்து அடர்ந்த புற்கள் அவன் கால்களைப் பின்னின. மரத்தை நெருங்கி, எல்லாவற்றிலும் தாழ இருந்த கிளையைப் பிடித்து வளைத்து, சாறு நிறைந்த, பெரிய பெரிய பழங்களைப் பறிக்கலானான்.

தாத்தா கடிவாளத்தைக் கழற்றி விட்டுக் குதிரையை மேய விட்டார்.

குதிரையின் சூடேறி வியர்வை படிந்த பிடரியைத் தடவி, ''நீயும் இளைப்பாறு'' என்றார்.

குதிரை திருப்தியுடன் தலையை ஆட்டி உதறியது, பின்பு இன்னும் பசுமை மாறாத மென்மையான புல்லை மேயத் தொடங்கிற்று.

தாத்தா பயணப் பையை அவிழ்த்து, பேரனை அருகே அழைத்தார்.

உஸ்மானிடம் ஒரு ஆப்பிளையும் மிட்டாயையும் நீட்டினார். ''இப்போதைக்கு இங்கேயே விளையாடிக்கொண்டு குதிரையையும் பார்த்துக்கொள். நான் போய் ருபார்ப் தண்டுகள் பறித்து வருகிறேன். சரிதானா?'' என்றார்.

''சரி'' என்று இசைந்தான் உஸ்மான். ஆனால் அதே மூச்சில், ''எனக்குத் தாகமாய் இருக்கிறது'' என்றான். உண்மையிலோ, தனியாய் இருக்க அவனுக்கு இஷ்டமில்லை.

''இதோ ருபார்ப் தண்டு கொண்டு வருகிறேன். அதைச் சவைத்தாயானால் தாகம் தணிந்துவிடும். ஒருவேளை உனக்குத் தனியாய் இருக்கப் பயமாக இருக்கிறதோ?'' என்றார் தாத்தா.

''இல்லை, இல்லை! நான் எதற்கும் பயப்படவில்லை'' என்று கத்தினான் உஸ்மான்.

''அப்படியானால் நல்லது!''

பஞ்சு வைத்துத் தைத்த நீண்ட மேலங்கி விளிம்புகளைத் தூக்கி இடை வாரின் இடுக்கில் செருகிக்கொண்டார் தாத்தா. பின்பு எதிர்ப்பக்கம் நிழல் அடர்ந்த மலை மேட்டை நோக்கிச் சிரமமில்லாமல் நடந்தார். உஸ்மான் ஆப்பிள் பழத்தைத் தின்று முடிப்பதற்குள் தாத்தாவைக் காணோம்.மேலே அடர்ந்த புதர்களில் எங்கோ அவர் மறைந்து விட்டார்.

உஸ்மான் சுற்று முற்றும் பார்த்தான். குதிரை அடர்ந்த புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. நீண்ட வெண்சாம்பல் நிற வாலை அது சற்றைக்கு ஒரு தரம் ஆட்டிற்று. அக்கம் பக்கத்தில் ஒருவருமே இல்லை. உஸ்மானுக்கு என்னவோ போல் இருந்தது. அவன் மிட்டாயை எறிந்துவிட்டு, ''தாத்தா! எங்கே இருக்கிறாய், தாத்தா?'' என்று வீரிட்டான்.

தாத்தா பதில் குரல் கொடுக்கவில்லை.

அப்போது உஸ்மான் மலை மேட்டின் மேல் தொற்றி ஏற ஆரம்பித்தான். விழுந்தான், எழுந்திருந்தான், தாத்தா சற்று முன் மறைந்த புதரின் பக்கமாக மறுபடி ஏறி நடந்தான்.

''தாத்தா!''

திடீரென்று உஸ்மான் பேசாமல் நின்றுவிட்டான். அவனுக்கு நேர் எதிரே, சிறு குவியல் ஒன்றின் பக்கத்தில், பின்கால்கள் மேல் உட்கார்ந்திருந்தது ஏதோ ஒரு பருத்த பிராணி. பழுப்புப் பூனைக்குட்டி போல இருந்தது அது. உஸ்மானுக்கு அது பெரியதாகவும் பயமூட்டுவதாகவும் தோன்றிற்று.

தனக்கு முன் சிறுவன் நிற்கக் கண்ட அந்தப் பிராணி கலவரம் அடைந்து கீச்சிட்டது.

அந்தக் கணமே உஸ்மான் இடத்தை விட்டு நகர்ந்து, பெருங் கூச்சலுடன் திரும்பிப் பாய்ந்து ஓடினன்.

கண்ணீர் புரையேற, ஓடும்போதே இடறி விழுந்தவாறு, ''தாத்தா! தாத்தா! எனக்குப் பயமாய் இருக்கிறது, பயமாய் இருக்கிறது! இங்கே வா! எங்கே இருக்கிருய் நீ?'' என்று கத்தினன்.

அவனுடைய கூச்சலைக் கேட்டுத் தாத்தா ஓடி வந்தார்.

''என்ன நேர்ந்தது, குழந்தாய்? ஏதேனும் பாம்பு கடித்து விட்டதா? இல்லாவிட்டால் குதிரைதான் உதைத்து விட்டதோ? சொல்லு சீக்கிரம்!''

தாத்தாவும் பேரன்போலவே பயந்துவிட்டார்.

''அதோ அங்கே, காட்டு மிருகம்... மிருகம்... பயங்கரமானது....'' என்று உரக்க அழுது கொண்டே விளக்கினன் உஸ்மான். ''ஓநாய்... கரடி... பயங்கரமானது... எனக்கு அதனிடம் பயமாய் இருக்கிறது'' என்ருன்.

தாத்தா உஸ்மானைத் தூக்கிக்கொண்டார்.

''ஊம், அழுகையை நிறுத்து, சமாதானம் ஆகு. நான்தான் உன்னோடு இருக்கிறேனே.... எனக்குக் காட்டு, பார்ப்போம், எங்கே இந்தப் பிராணியைக் கண்டாய் என்று.''

உஸ்மான் குவியலின் பக்கம் கையைக் காட்டினன். அங்கே இப்போது எந்தப் பிராணியையும் காணேம்.

தாத்தா புன்னகை செய்தார்.

''அட, பயந்தாங்கொள்ளி! இதுவாவது, கரடியாவது? இது மலை எலி. ரொம்ப ரொம்பச் சின்ன மலை எலி. உன்னைக் கண்டு பயந்து அதுவே வளைக்குள் பதுங்கிவிட்டது பார். இந்தா, இதை வாங்கிக்கொள்'' என்று ருபார்ப் தண்டை நீட்டினர்.

பேரனின் கையைப் பிடித்துக்கொண்டு மலை எலியின் வளை இருந்த குவியலை நெருங்கினர் தாத்தா.

''அந்தக் கேடுகெட்ட கரடி இதற்கு உள்ளே இருந்துதான் வெளியே வந்ததோ?'' என்று கேட்டார்.

''ஆம்-ஆம்'' என்று இழுத்தான் உஸ்மான். அப்புறம் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

தாத்தா வளையைக் காலால் இடித்தார். பேரனை விரலால் அச்சுறுத்தினார்.

''அடாடா, அடாடா! நீயும் இந்த மலை எலியும் எப் பேர்ப்பட்ட வீரர்கள் என்பதைப் பார்த்துவிட்டேன்! ஒருவரை ஒருவர் கண்டு மிரண்டுவிட்டீர்கள்'' என்றார்.

அப்புறம் உஸ்மானால் புன்சிரிப்பை அடக்க முடியவில்லை.

சில நிமிடங்களில் தாத்தாவும் உஸ்மானும் குதிரை அருகே திரும்பி வந்தார்கள். அதற்குக் கடிவாளம் பூட்டி மேலே பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

இப்போது அவர்களுடைய பாதை மலைத்தொடரின் ஊடாகச் சென்றது. அங்கே அசோகுகளோ, அடர்ந்த பிர் மரங்களோ, தனித்தனி விருட்சங்களோ இல்லை. அரிதாகவே கண்ணுக்குத் தெரிந்த ஒற்றையடிப் பாதை வழியே ஓசை யில்லாமல் நடந்தது குதிரை.

''தாத்தா, ஊர் சீக்கிரம் வந்துவிடுமா?'' என்று ஓயாமல் நச்சரித்தான் உஸ்மான்.

''சீக்கிரம், சீக்கிரம், குஞ்சுப் பயலே!''

உஸ்மானுக்குத் தாலாட்டுவதுபோல் இருந்தது, அவன் தலை ஒரு பக்கம் சாய்ந்தது. தாத்தா அவனைத் தூக்கி இன்னும் சௌகரியமாக உட்கார்த்திவிட்டு, குதிரையை முடுக்கினார். பொழுது சாய வெகு நேரம் இல்லை. வேகமாகப் போவது அவசியமாயிருந்தது.

உஸ்மான் தாத்தாவின் மார்போடு ஒண்டிக் கொண்டு தூங்கி வழிந்தான்.

பாதை சிறிய, பெரிய பாறைகளைச் சுற்றி வளைத்துக் கொண்டு செங்குத்தாக இறங்கியது. காற்று வரவர அதிகக் குளிராயிற்று. சவாரி செய்தவர்களுக்கு மூச்சு விடுவது முன்னை

விட லேசாயிருந்தது. உண்மையில் சவாரி செய்தவர்களில் ஒருவன் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தான். மலைத் தொடரின் ஊடாகச் சென்ற பாதையில் குதிரை இறங்கத் தொடங்கியதை அவன் காணவில்லை. மலைச் சரிவில் மேய்ந்து கொண்டிருந்த குதிரைக் கூட்டங்களையும் ஒட்டகக் கூட்டங்களையுமோ, ஆட்டு மந்தைகளையோ அவன் பார்க்கவில்லை.

பள்ளத்தாக்கில், ஒரு குன்றின் அடிவாரத்தில் தென்பட்டன நமுதாத் துணிக் கூடாரங்கள்.

''ஆயிற்று, ஜைலூ வந்துவிட்டது!'' என்று தமக்குத் தாமே மெதுவாகச் சொல்லிக் கொண்டார் தாத்தா. பிறகு, பேரனின் தூக்கத்தைக் கலைத்துவிடாமல் இருப்பதற்காக, தணிந்த குரலில் பாட்டை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பாடிஞர். இப்போது வார்த்தைகள் இல்லாமல் வெறும் மெட்டை மட்டுமே முணுமுணுத்தார் என்பதுதான் வித்தியாசம்.

பாட்டி அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். கைகளைக் கட்டிக்கொண்டு கூடாரத்தின் வாயிலில் நின்ருள் அவள்.

சேணத்தின் மேல் தூங்கிக்கொண்டிருந்த உஸ்மானைக் கண்டதுமே அவள் ''அட என் கொழுகொழு கன்றே! அட என் பாவமே! எப்படி வெளிறி, இளைத்துத் துரும்பாய் இருக்கிருய் நீ! களைத்துப் போய்விட்டான், அப்பாவிக் கண்ணு. பரவாயில்லை! இங்கே சீக்கிரமே உன் உடம்பு தேறிவிடும், முகத்தில் ரோஜாச் சிவப்பு வந்துவிடும்!'' என்று பொரிந்து கொட்டிஞள்.

தாத்தா குதிரையை நிறுத்திஞர். ''சரிதான், சரிதான்! போதும், பேரனை வாங்கிக் கொள். அவனை எழுப்பிவிடாதே'' என்று அதிருப்தியுடன் முணுமுணுத்தார்.

உறங்கிக்கொண்டிருந்த உஸ்மானைப் பாட்டி கையில் வாங்கிக்கொண்டாள்.

''உனக்கு இப்படி உடைகள் மாட்டியது யார்? ஏதோ அத்தரை வேறு தெளித்திருக்கிருர்களே. ஒரே பட்டணவாசி, அயலான்'' என்று முணுமுணுத்தபடி பேரனைக் கூடாரத்துக்குள் எடுத்துப் போஞள். ''ஊம், நிம்மதியாக உறங்கு, என்

கண்ணே. இளைப்பாறு. விடிந்த பிறகு விளையாடலாம்'' என்று கொஞ்சலாக மொழிந்தாள்.

உஸ்மானை மிருதுவான படுக்கையில் கிடத்திவிட்டுக் கிழவி தன் கணவரிடம் போனாள்.

''இந்தா, நம் உஸ்மானுடைய ஒட்டகக் குட்டியைப் பிடித்துக் கட்டி வைப்பதுதானே. சொந்தக்காரன் வந்து விட்டான் என்று அது தெரிந்துகொள்ளட்டுமே'' என்று அவளிடம் சொன்னார் தாத்தா.

3. முதல் காலை

கூடாரம் வீடு அல்ல, ஜைலூ நகரமும் அல்ல. ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு மேய்ச்சலுக்காகப் போகும்போது கூடாரத்தைச் சுருட்டி ஒட்டகத்தின் மேல் சுமத்தி எடுத்துச் செல்வது வழக்கம். ஆகவே அதில் கட்டில்களோ மேஜையோ நாற்காலிகளோ மின்சார வசதியோ கிடையாது. ஜைலூவில் குழந்தைப் பள்ளியோ சினிமா தியேட்டரோ, நாடக மன்றமோ இல்லை. கடைகூட அங்கே கிடையாது. மிட்டாயும் பிஸ்கோத்தும் வாங்குவதற்கு இருபது, முப்பது கிலோமீட்டர் பயணம் செய்து பண்பாட்டுக் கேந்திரம் போக வேண்டும். அங்கே இயங்கும் கடை — அதாவது லாரியில் சாமான்களைக் கொண்டுவந்து விற்கும் கடை—உண்டு.

கூடாரச் சுவர் ஓரமாக ஒரு சிவப்புப் பெட்டி—கிராமபோனும் இசைத்தட்டுகளும்—இருந்தது உண்மையே. ஆனால் நகர வசதிகள் எல்லாவற்றுக்கும் அது மாற்று ஆகுமா?

''பேரப்பிள்ளை ஊருக்காக ஏங்குகிறானோ? நம் சாப்பாடு அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ?'' என்று கவலைப் பட்டார்கள் தாத்தாவும் பாட்டியும்.

தலைக்கு நாள் செய்த களைப்பூட்டும் பயணத்துக்குப் பிறகு உஸ்மான் அனேகமாக மதியச் சாப்பாட்டு வேளை வரை

தூங்கினான். நகரத்தில் அவன் இவ்வளவு நேரம் இப்படி அயர்ந்து உறங்கியதே கிடையாது. கோடையில் அங்கே ஒரே இறுக்கமாக இருக்கும். இரவில் உஸ்மான் துப்பட்டியைக் கூட அகற்றி விடுவான். இங்கே கூடாரத்திலோ, பஞ்சு வைத்துத் தைத்த போர்வை போர்த்துக்கொண்டு உறங்கினான்....

உறங்கி விழித்ததும் உஸ்மான் கூடாரத்தை ஆவலுடன் நோட்டமிட்டான். முந்திய நாள் அதை நன்றாகப் பார்க்கவே இல்லை அவன். கம்புகள் மேல்நோக்கி நீண்டிருந்தன. ஜன்னல் போல் இருந்த துவாரத்தின் பக்கத்தில் விட்டத்தின் மேல் அவை சந்தித்தன. இப்போது அந்த ஜன்னல் திறந்திருந்தது. தெள்ளிய நீல வானம் அதன் வழியே தெரிந்தது.

கூடாரத்தின் நடுவே, தரை மேல் வராட்டிகள் கனன்று கொண்டிருந்தன. கணப்பின் மேலே மூன்றுகால் ஸ்டாண்டில் தொங்கிக் கொண்டிருந்தது சிறு பாத்திரம். அதிலிருந்து இறைச்சியின் நறுமணம் வந்தது.

உஸ்மான் போர்வைக்கு அடியிலிருந்து வெளியே வந்து பனியனும் கச்சமும் மட்டுமே அணிந்த நிலையில் கூடாரத்தின் உள்ளே சுற்றி நடந்தான். அது மிகவும் விசாலமாகவே இருந்தது.

வாயிலுக்கு வலப்புறம் கூடாரச் சுவர்கள் மேல் பாத்திரங் கள் தொங்கின. கூடாரத்தின் இந்தப் பாதியில் பாட்டி ஆட்சி நடத்தினாள் என்பது தெரிந்தது.

ஒரு பெரிய சிவப்புக் கலயத்தை எட்டித் தொட்டான் உஸ்மான். அது தோலால் செய்யப்பட்டு அழகிய சித்திர வேலை யால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

உஸ்மான் கலயத்தைத் தொட்டான். அதற்குள் எதுவோ களகளத்தது.

''என்ன அது?'' என்று அறிய உஸ்மான் ஆவல் கொண்டான்.

அப்போது பாட்டி கூடாரத்துக்குள் வந்தாள். அவள் கை களில் நூற்புக் கதிரும் ஒட்டக ரோம உருண்டையும் இருந்தன.

''என் கண்ணே! உனக்குப் பசித்து விட்டதா? தாகமாக

இருக்கிறதா? சாயங்காலத்திலிருந்து ஒன்றுமே சாப்பிட வில்லையே நீ!'' என்று பரிவுடன் சொல்லிக்கொண்டு உஸ்மானைச் சுற்றி ஆலை பாய்ந்தாள்.

கலயத்தைச் சுவரிலிருந்து கழற்றித் தரை மேல் வைத் தாள்.

''இப்போது சொல்லு, உன் அப்பாவும் அம்மாவும் எப்படி இருக்கிறார்கள்? உன்னைச் சீக்கிரம் திரும்பி வரும்படி சொன்னார்களோ?'' என்று கேட்டாள்.

உஸ்மான் கொஞ்சம் பயந்துகூடப் போய் விட்டான். ''இல்லை, இல்லை! அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை!'' என்று கூறிவிட்டு, சிவப்புக் கலயத்தைத் தொட்டு, ''இது என்ன?'' என்று வினவினான்.

பாட்டி உஸ்மானின் நெற்றியில் முத்தமிட்டு, புன்னகை யுடன் சொன்னாள்:

''அட என் கண்ணே, உன்னை வைத்துக்கொண்டு என்ன செய்வேன் நான்! ஒன்றுமே தெரியாதவனாய் இருக்கிறாயே! இந்தப் பாத்திரத்துக்கு ''க்யோக்யோர்'' என்று பெயர். இதில் இருப்பது ''குமீஸ்'', அதாவது புளிக்க வைத்த குதிரைப் பால். உன் தாத்தா உனக்காகக் குதிரைப் பண்ணையிலிருந்து கொண்டுவந்தார். குமீஸ் இனிப்பாக, ருசியாக இருக்க வேண் டும் என்பதற்காக நான் கலயத்தில் சர்க்கரை போட்டிருக்கி றேன். உன் அப்பாவும் சின்ன வயதில் குமீஸ் குடித்து, பலசாலி யாகவும் ஆரோக்கியம் உள்ளவனாகவும் வளர்ந்தான். தாத்தா வும் அப்படித்தான்!''

''நானும் குமீஸ் குடிப்பேன்! நானும் அப்பாவையும் தாத்தாவையும் போல வளர ஆசைப்படுகிறேன்'' என்றான் உஸ்மான்.

பாட்டி பெட்டியிலிருந்து ஐந்து கோப்பைகளை எடுத்து வரிசையாக வைத்தாள்.

''இதோ பார், குழந்தாய். இந்த மூன்று கோப்பைகளையும் உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எனக்குமாக நான்

குடிக்கிறேன். மீதி இரண்டு கோப்பைகளையும் தாத்தாவுக்கும் உனக்குமாக நீ குடி. சரிதானா?''

''கட்டாயம், கட்டாயம்!'' என்று சந்தோஷ மிகுதியால் உஸ்மான் துள்ளினான்.''ஒட்டகக் குட்டிக்காகவும் குடிக்கிறேன். குடிக்கலாமா? எங்கே அது, என் ஒட்டகக்குட்டி?'' என்றான்.

''அது மந்தையில் இருக்கிறது.சீக்கிரம் காண்பாய் அதை'' என்று சொன்னாள் பாட்டி.

வரிசை ஓரத்தில் இருந்த குமீஸ் நிறைந்த கோப்பையை எடுத்துக் குடித்தாள். அப்புறம் மறு ஓரத்தில் இருந்த குவளை யை எடுத்து உஸ்மானிடம் நீட்டினாள்.

ஆனால் உஸ்மான் தலையை அசைத்தான்.

''நான் இன்னும் பல்விளக்கி முகங்கை கழுவிக் கொள்ள வில்லையே. சோப்பும் பற்பசையும் பிரஷும் எங்கே?'' என்று கேட்டான்.

பாட்டி ஆச்சரியப்பட்டாள்.

''முகங்கை கழுவிக்கொள்வதா? சோப்பா? என் கண்ணே, தாயார் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கும் போதே உமாய் தேவன் குழந்தையின் முகத்தைச் சுத்தப்படுத்துவான் என்பது உனக்குத் தெரியாதா? அதனால்தான் எல்லாக் குழந்தைகளும் படுக்கைவிட்டு எழுந்திருக்கும் போதே துப்புரவாய் இருக் கிறார்கள். நீ குமீஸ் குடி! வேடிக்கைப் பேர்வழிகள் நீங்கள், நகரவாசிகள்! ஒன்றுமே தெரியாதவர்கள்!'' என்றாள்.

உஸ்மான் பாட்டி சொன்னதைப் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் நிறுத்தியதும், ''சோப்பு, பற்பசை, பிரஷ் எல்லாம் தாத்தாவின் பையில் இருக்கின்றன.அம்மாஅதில் தான் அவைகளை வைத்தாள்'' என்று நினைவுபடுத்திக் கொண் டான்.

உள்ளதைச் சொல்வதானால் பாட்டி சொன்னது ஒன்றுமே உஸ்மானுக்கு விளங்கவில்லை. சின்னஞ் சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுடைய முகங்களைச் சுத்தப்படுத்தும் உமாய் என்ற கற்பனைத் தேவனைப் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது.

ஆகவே அவன் பையிலிருந்து சோப்புப் பெட்டியையும் பச்சை உறையிலிருந்த பல் விளக்கும் பிரஷையும் பற்பசையையும் எடுத்துக்கொண்டு வெளியே போனான்.

குவளையில் ஊற்றியிருந்த குமிஸைக் குடித்துவிட்டுத் துவாலையை எடுத்துக்கொண்டு பேரன் பின்னே விடுவிடு வென்று நடந்தாள் பாட்டி.

கூடாரத்துக்கு வெளியே வந்ததுமே உஸ்மான் எல்லாவற்றையும் மறந்துவிட்டான். பசுமையான புல்வெளி அவன் முன்னே நெடுகப் பரந்திருந்தது. தொலைவில் தெரிந்தன மலைகள். பளிச்சிடும் மஞ்சள், இள நீல நிறப் பூக்கள் அடர்ந்த சிறு குன்றின் அடிவாரத்தை ஒட்டினாற் போல, கலகலவென்ற ஒலியுடன் குமிழியிட்டுப் பாய்ந்தது சிற்றாறு. அதன் தண்ணீர் எவ்வளவு தெளிவானது, சுத்தமானது என்பதைத் தூரத்திலிருந்தே காண முடிந்தது. ஆற்றின் அடித்தளத்தில் இருந்த கற்கள் பளிச்சிட்டன.

''நானே'' என்று கத்தி, சரிவில் இறங்கி ஆற்றை நோக்கி ஓடினான் உஸ்மான்.

விஷயம் என்ன என்று பாட்டி நிதானிப்பதற்குள் பேரன் ஆற்றை நெருங்கிவிட்டான். சோப்பையும் பற்பசையையும் மழமழப்பான கல் மேல் வைத்துவிட்டு அவன் நீருக்கு மேலாகக் குனிந்து பல் விளக்கத் தொடங்கினான்.

துவாலையும் கையுமாகப் பாட்டி ஆற்றை ஓடி நெருங்குவதற்குள் உஸ்மான் முகங்கை கழுவிக்கொண்டுவிட்டதோடு மேலெல்லாம் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும் விட்டான். அவனுடைய பனியனும் கச்சமும் முன்புறத்தில் சொட்டச் சொட்ட நனைந்திருந்தன—அவன் ஆற்றில் முங்கி எழுந்தது போல.

''அட சொன்ன பேச்சைக் கேளாத பயலே! என்ன செய்து விட்டாய்!'' என்று அங்கலாய்த்தவாறே பேரன் உடம்பைத் துவட்டினாள் பாட்டி. ''இது நகரம் என்று நினைத்தாயா? இங்கே இப்படி எல்லாம் செய்யக்கூடாது. யாருடைய கண்ணாவது

பட்டு வைக்கப் போகிறது. ஊம், போவோம் வா. வேகமாகப் போய்விடுவோம். தாத்தா உன் வெள்ளை ஒட்டகக்குட்டியைச் சீக்கிரம் ஓட்டி வருவார்'' என்றாள்.

பாட்டி சொன்னதில் இந்தக் கடைசி வாக்கியம் மட்டுமே உஸ்மானுக்குப் புரிந்தது. திமிறிக்கொண்டு கூடாரத்தை நோக்கித் திரும்பி ஓடினான்.

கூடாரம் வெறுமையாக இருந்தது. தாத்தா இன்னும் திரும்பிவரவில்லை என்பது தெரிந்தது.

''நானே கோப்பையில் குமீஸ் ஊற்றிக் கொள்கிறேன். பாட்டி சந்தோஷப்படுவாள்'' என்று நினைத்தான் உஸ்மான்.

பாட்டி கலயத்தைச் சுவற்றில் மாட்ட நேரமில்லாமையால் தரையில் வைத்திருந்தாள். உஸ்மான் அதை எடுத்துக் கோப் பையின் பக்கம் கொண்டுபோனான். திடீரென்று கலயம் அவன் பிடியிலிருந்து வழுகி விழுந்துவிட்டது. கோப்பை ஒரு புறம் துள்ளி விழுந்தது. குமீஸ் மென்மயிர்த் தோல் விரிப்பின்மேல் பெருகிற்று.

உஸ்மான் ஒரேயடியாகப் பதறிப்போய், கலயத்தை நிமிர்த்தி வைக்காமலே நின்றான். கலயத்திலிருந்தோ, அகன்ற தாரையாகக் கொட்டியது குமீஸ்.

அப்போது கூடாரத்துக்குள் வந்த பாட்டி, ''அட, குட்டிப் பிசாசே!'' என்று கத்தினாள். பின்பு கனிவுடன், ''போகிறது, பயப்படாதே, என் கண்ணே, பயப்படாதே. நான் விரலால் கூட உன்னைத் தீண்ட மாட்டேன். குமீஸை நீ கொட்டியிருக்கக் கூடாது. அது பாவம். ஆண்டவன் உன்னை மன்னிக்க மாட்டான்'' என்றாள்.

கோப்பையைப் பிடித்துக்கொண்டு, தரையில் கொட்டி யிருந்த குமீஸை எப்படியோ ஒரு விதமாக வழித்து அடுக்கில் விட்டாள். தரை விரிப்பை வெயிலில் காயப்போட நேர்ந்தது.

''பாட்டீ, என்னை மன்னித்துக்கொள். நான் இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்'' என்றான் உஸ்மான். அவன் விழிகளில் கண்ணீர் பளிச்சிட்டது.

பாட்டியின் நெஞ்சு விண்டுவிட்டது.

''ஐயோ, என் கண்ணே! நான் மன்னித்துவிடுகிறேன். உன்னை மன்னிக்காவிட்டால் வேறு யாரை மன்னிப்பேன்? வா அப்பா, சாப்பிடலாம்!'' என்று கனிந்தாள்.

பல நிறத் துணித் துண்டுகளை ஒட்டுப் போட்டுத் தைத்த மெத்தையில் உட்கார்ந்து அவர்கள் சாப்பிட ஆரம்பித்தார்கள். உண்மையில் உஸ்மானுக்குக் கடும் பசி. சூடான இறைச்சியை இப்போது மனநிறைவுடன் சாப்பிட்டான். அப்புறம், கலயத்தில் மிஞ்சியிருந்த குமீஸைக் கோப்பையில் ஊற்றி அவனுக்குக் கொடுத்தாள் பாட்டி.

''எப்படி, ருசியாய் இருக்கிறதா?''

நல்ல பால் போல இருந்த இனிப்பான குமீஸைப் பருகிவிட்டு, ''ருசியாய் இருக்கிறது'' என்று ஒப்புக்கொண்டான் உஸ்மான்.

4. எதிர்பாரா விபத்து

எங்கோ தொலைவிலிருந்து வந்தது அறிமுகமான குரல்:

''ஊ-ஊ, கிழவீ! பயலைக் கூட்டிக்கொண்டு சீக்கிரம் எதிர்கொள்ள வா!''

பாட்டி இடத்தை விட்டு எழுந்திருப்பதற்குள் உஸ்மான் தாத்தாவின் குரலை இனம் தெரிந்துகொண்டு துள்ளி எழுந்து கூடாரத்துக்கு வெளியே பாய்ந்தான்.

''ஒட்டகக்குட்டி, ஒட்டகக்குட்டி! என் வெள்ளை ஒட்டகக் குட்டி!'' என்று ஆரவாரித்தான்.

ஒட்டக மந்தை உண்மையாகவே மலைச் சரிவில் இறங்கி வந்துகொண்டிருந்தது.

''ஊ-ஊ! சின்னக் கண்ணூ! திரும்பிப் போய்விடு! கூடாரத்துக்குத் திரும்பிவிடு'' என்று பேரனைப் பார்த்துக் கத்தினார் தாத்தா. மந்தைக்குப் பின்னால் குதிரைமேல் வந்துகொண்டிருந்தார் அவர்.

தாத்தாவுக்குப் பின்னே கடிவாளம் பூட்டப்பட்டு வந்து கொண்டிருந்தது வெள்ளை ஒட்டகம். ஆ, சந்தேகம் இல்லாமல் இது வெள்ளை ஒட்டகக்குட்டியின் தாய்தான்! அதோ வருகிறது ஒட்டகக்குட்டி. சின்னஞ் சிறியது, நீண்ட கால்களும் அடர்ந்த ரோமமும் உள்ளது. ஒரு சமயம் தாய்க்கு முன்னே ஓடுவதும் மறு சமயம் அதற்குக் கொஞ்சம் பின் தங்குவதுமாகத் தாய் ஒட்டகத்தின் பக்கத்தில் துள்ளிப் பாய்ந்தது அது.

தாத்தாவின் சொற்களோ, ஒரேயடியாகக் கிலியடித்துப் போய் வீரிட்டபடி அவனைத் தொடர்ந்து ஓடிவந்த பாட்டியின் கூக்குரலோ உஸ்மானின் காதில் படவில்லை. அவன் ஒட்டக மந்தையை எதிர்கொண்டு பாய்ந்தோடினான்.

''நில்லு, கண்ணே, நில்லு!'' என்று கத்தினார் தாத்தா.

உஸ்மான் நிற்கவில்லை.

பிரமாண்டமான கரும்பழுப்பு ஒட்டகம் ஒன்று தன்னை நோக்கி ஓடி வருவதை உஸ்மான் திடீரென்று கண்டான். ஒட்டகத்தைப் பயமுறுத்தி விரட்டுவதற்காக உஸ்மான் ஒரு கல்லை எடுத்தான். ஆனால் ஒட்டகமோ, தலையைத் தாழ்த்திக்கொண்டு, பற்கள் நிறைந்த பயங்கரமான வாயை ஆவெனத் திறந்து, நேரே சிறுவன் முகத்தில் துப்பிவிட்டது.

உஸ்மான் கூக்குரலிட்டுத் தரையில் விழுந்தான். அவன் கண்களில் கொடிய எரிச்சல் உண்டாயிற்று.

தாத்தா குதிரையைப் பாய்ச்சலில் விரட்டிக்கொண்டு பக்கத்தில் வந்தார்.

''அட உருப்படாத மிருகமே. எங்கள் குழந்தையைக் கொன்றுவிட்டாயே!'' என்று அழாக் குறையாகக் கத்தினார். அங்கவடிகளில் எம்பி நின்று ஒட்டகத்தைச் சுருக்குச் சாட்டையால் பலங்கொண்டமட்டும் ஓங்கி விளாறினார். இந்தச் சுருக்குச் சாட்டை, நுனியில் சுருக்குக் கயிறு பொருத்திய நீண்ட கழி. சுருக்குக் கயிற்றை வீசி மாட்டிக் குதிரையைப் பிடிப்பது வழக்கம்.

தாத்தா சேணத்திலிருந்து குதித்து, பேரன் பக்கம் குனிந்தார்.

''உனக்கு என்ன நேர்ந்தது, என் கண்ணே? உயிரோடு இருக்கிருயா? ஏதாவது சொல்லேன் என்னிடம்! சொல்லேன்!'' என்று கண்ணீருக்கிடையில் கெஞ்சினுர்.

பாட்டி ஓடோடி வந்தாள். பேரனைக் கண்டதும் அவள் ஓவென்று அலறி, கைகளை உயரே வீசி, உணர்வற்று விழுந் தாள்....

இன்றுடன் மூன்று நாட்களாக உஸ்மான் கூடாரத்திலேயே படுத்திருந்தான். அவன் இன்னும் கண் திறக்கவில்லை. நல்ல காய்ச்சல். உடம்பு நெருப்பாய்க் கொதித்தது.

''கவலைப்பட வேண்டாம்! உடம்பு குணமாகி வருகிறது. காயங்களோ எலும்பு முறிவுகளோ இல்லை. பையன் ரொம்பப் பயந்துபோய்விட்டான், அவ்வளவுதான்'' என்ருர் மருத்துவர்.

மருத்துவர் குதிரையேறி வந்தார். தாத்தாதாம் பண் பாட்டுக் கேந்திரத்துக்குப் போய் அவரை அழைத்து வந்திருந் தார்.

உஸ்மான் சுர வேகத்தில் பிதற்றினுன். பயங்கரமான ஒட்டகத்தைப் பற்றி ஏதோ முணுமுணுத்தான், துள்ளி எழுந் தான், கத்தினுன், பிறகு மறுபடி தூங்கிவிட்டான்.

மேய்ப்பர்களும் அவர்களுடைய மனைவி மக்களும் கூடா ரத்தின் பக்கத்தில் கூட்டமாக நெரிந்தார்கள்.

''பையனுக்கு நல்ல காற்று வேண்டும்'' என்று யோசனை சொன்னுர் மருத்துவர்.

தாத்தா போர்வையில் உஸ்மானைச் சுருட்டி மூடிக் கூடாரத்துக்கு வெளியே எடுத்துச் சென்ருர். பேரனை ஆற்றின் கரைக்கு எடுத்துப் போய், பாறைமேல் உட்கார்ந்து நீண்ட பெருமூச்சு விட்டார்.

பாட்டி மருத்துவரை நம்பாமல், எந்த விதத்திலாவது பேரனுக்கு உதவி செய்ய முயன்ருள். ஈயத்துண்டைக் கொழுப் புடன் சுட வைத்துத் தரையில் விட்டாள். அது ஆறியதும் பாட்டி அதை உஸ்மானின் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டாள்.

''நம் குழந்தையின் அதிர்ஷ்டத்திற்காக இது. ஆண்டவன் காப்பாற்றுவான்....'' என்ருள்.

இதே மாதிரி ஈயத்துண்டை ஒட்டகக்குட்டியின் வாலிலும் கட்டினுள்—''அதன்மேல் யாரேனும் கண் போட்டுவிடக் கூடாது என்பதற்காக.''

தாத்தாவுக்கு இதைப் பொறுக்க முடியவில்லை.

''அட, உன் கட்டுக்கதைகளை விடு என்கிறேன்! நம் உஸ்மான் சீக்கிரம் குணமடைந்துவிடுவான் என்று மருத்துவர் சொல்லியிருக்கிருரே'' என்ருர்.

மெய்யாகவே அடுத்த நாள் உஸ்மானின் காய்ச்சல் தணிந்துவிட்டது. அவன் பிதற்றுவதை நிறுத்தினுன், கண்களைத் திறந்தான்.

''பார்த்தாயா, நான்தான் சொன்னேனே! மருத்துவர் கூறியது சரியே. குழந்தைக்கு உடம்பு நேராகிவருகிறது'' என்று புன்னகை செய்தார் தாத்தா.

பாட்டிக்கும் சந்தோஷம். அவள் கணவனின் பேச்சை மறுக்கவில்லை. ஆனுல் தன்னுடைய ரட்சைதான் பேரனைக் காப்பாற்றியது என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டாள். ஒன்றும் செய்வதற்கில்லை. அவள் பாட்டி ஆயிற்றே.

5. சிறு நண்பர்கள்

''பூ-ஊ-ஊ பூஊ, பூஊ-ஊ'' என்ற கத்தல் பக்கத்தில் எங்கோ கேட்டது.

உஸ்மான் கண்களைத் திறந்து, தலையணையிலிருந்து தலையை நிமிர்த்தினுன்.

என்ன இது? குழந்தையின் தேம்பல் போன்ற இந்தக் குரல் யாருடையது?

உஸ்மான் உற்றுக் கேட்டான்.

மறுபடி அதே குரல்:

''பூ-ஊ-ஊ-பூ-ஊஊ!...''

எங்கோ தொலைவில் கேட்டது வேறொரு குரல். கட்டைக் குரல்:

''பா-ஆஆ-பா-ஆஆ.''

அப்புறம் இரண்டு குரல்களும் ஒன்று கலந்தன:

''பூ-ஊ-பா...பா-ஆஆ-பூ-ஊ-ஊ....''

உஸ்மான் படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்தான். கூடாரம் வெறுமையாக இருந்தது. இந்த நாட்களில் முதல் தடவையாகத் தாத்தா அதிகாலையிலேயே மறுபடி மந்தைக்குப் போய் விட்டார்.

பாட்டி வழக்கம்போலக் கூடாரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து நூற்புக் கதிரில் கம்பளி நூற்றுக்கொண்டிருந்தாள். உஸ்மான் வெறுங்கால்களுடன் வாயில் அருகே போய் வெளியே எட்டிப் பார்த்தான்.

''நீயா, என் கண்ணே!'' என்று நூற்புக் கதிரை வைத்து விட்டுக் கேட்டாள் பாட்டி.

மெலிந்து வெளிறிப் போயிருந்த உஸ்மானை மடியில் உட்கார்த்திக்கொண்டு தன் பஞ்சு மேலங்கியால் அவனை மூடிப் போர்த்தினாள்.

புரியாத குரல்கள் கூடாரத்தின் எதிர்ப் புறத்திலிருந்து வருவதை இப்போது உஸ்மான் தெரிந்துகொண்டான்.

''பாட்டீ, அங்கே கத்துவது யார்?''

''உன்னுடைய ஒட்டகக்குட்டிதான். தனக்குப் பசிக்கிறது என்று அம்மாவிடம் புகார் செய்கிறது. தாய் ஒட்டகமோ, ''பொறு, பொறு! நான் உனக்கு இன்னும் பால் தயாரிக்கவில்லை'' என்கிறது.

''ஆகாகா!'' என்று வாய் விட்டுச் சிரித்தான் உஸ்மான். ''எனக்கு அதைப் பார்க்க வேண்டும்போல இருக்கிறது, பாட்டீ! அதை எனக்குக் காட்டேன். அதற்காக ஏங்கிப் போய் விட்டேன்'' என்றான்.

பாட்டி பேரனுக்கு மகிழ்ச்சியூட்ட முயன்றாள்.

''ஒட்டகக்குட்டி உனக்காக ஏங்கிப் போயிருக்கிறது. உனக்கு உடம்பு சரியாகிவிட்டது என்று அதற்குத் தெரிந்து விட்டது. இப்போது உன்னைப் பாராட்டிப் பாட்டு பாடுகிறது'' என்றாள்.

''தாய் ஒட்டகம் என்னை ஒன்றும் செய்யாதே?'' என்று திடீரெனக் கவலையுடன் கேட்டான் உஸ்மான்.

''ஒன்றும் செய்யாது, என் கண்ணே. பயப்படாதே! நீ பார்த்தாயே, பெரிய ஒட்டகங்கள், அவை மலைக்குப் போய் விட்டன. சின்னதை இதோ காட்டுகிறேன்.''

பாட்டி உஸ்மானைக் கூடாரத்துக்குள் எடுத்துப் போய், சுவரின் பக்கத்தில் உட்கார்த்தினாள்.

நமுதாத் துணியைக் கொஞ்சம் விலக்கி, ''பார், கண்ணே, இங்கே பார்!'' என்றாள்.

உஸ்மான் இடுக்கு வழியே பார்த்தான். ஒட்டகக்குட்டியைக் கண்டான். கூடாரத்தின் பக்கத்தில் கம்பத்தில் கட்டப் பட்டு, அருகிலேயே நின்றது அது. மெய்யாகவே ஒட்டகக்குட்டி இன்னமும் சின்னஞ் சிறியது. ஒடிசல் கால்கள், கூர்மையாகத் துருத்திக்கொண்டிருந்த இரண்டு திமில்கள், சிறு தலை, குட்டை வால் — எல்லாமே வெண்மையான குறுந் தூவியால் மூடப் பட்டிருந்தன....

பொறுமை இன்றிக் கால்களை மாற்றி மாற்றி வைத்தவாறு ஒட்டகக்குட்டி தாயின் பக்கம் ஓரப் பார்வையாகப் பார்த்து, ''பூ-ஊ-பூஊஊ'' என்று தொடர்ந்து தேம்பிற்று.

ஒட்டகக்குட்டி அனேகமாக மனிதக் குழந்தைபோலவே, ''பால் கொடு-ஊ'' என்று கத்துவது மாதிரி இப்போது உஸ்மானுக்குத் தோன்றியது.

கொஞ்ச தூரத்தில் மலைச் சரிவில் மெதுவாக, கம்பீரமாக நடந்தபடி மேய்ந்து கொண்டிருந்தது ஒட்டகக்குட்டியின் தாய் —பெரிய வெள்ளை ஒட்டகம்.

சற்றைக்கு ஒரு தரம் அது தலையை நிமிர்த்து, மகனின் பக்கம் திருப்பி, ''பா-ஆஆ... பா-ஆஆ'' என்று தேற்றியது.

ஒட்டகக்குட்டி மேல் உஸ்மானுக்கு இரக்கம் உண்டா யிற்று.

''பாட்டீ, அதை அவிழ்த்துவிடு. அது பால் குடிக்கட்டும். நான் அதனிடம் போகலாமா?'' என்று கேட்டான்.

பாட்டி பேரனைத் தரையில் இறக்கி விட்டாள்.

''நீ பயப்பட மாட்டாயே? பயத்தினால் உன் இருதயம் வெளியே துள்ளி வந்து விடாதே? நல்லது, போய் ஜோடுகளை மாட்டிக்கொள்'' என்றாள். அவள் குரலில் கவலை தொனித் தது.

உஸ்மான் ஜோடுகளை எடுத்து விரைவாகக் கால்களில் மாட்டிக் கொண்டான்.

''இப்போது எனக்குப் பயமாயில்லை, பாட்டீ! பயமாகவே இல்லை, நிஜமாக! வெள்ளை ஒட்டகக்குட்டி என் தோழன் ஆயிற்றே. அது என்னைத் தாண்டிக் குதித்தாலுங்கூடப் பயப்படமாட்டேன்'' என்றான்.

ஒரு நிமிடத்திற்கெல்லாம் உஸ்மான் ஒட்டகக்குட்டியின் பக்கத்தில் நின்றான். ஆனாலும் தன் சிறிய தோழனுடன் எப்படிப் பேசுவது என்று தெரியாமல் திகைத்தான். ஒட்டகக்குட்டிக்கு மனித பாஷை புரியாதே!

ஒருவேளை புரியுமோ? இதோ ஒட்டகக்குட்டி மண்டியிட்டு, முயல்போலப் பின்னங்கால்களை மடித்து உட்கார்ந்து, உஸ் மானை மோந்து பார்க்கத் தொடங்கிற்று. ஒட்டகக்குட்டிக்கு நீட்டிய கழுத்து, உதடுகள் இரு பிளவானவை—எல்லாம் முயல் போலவே.

உஸ்மான் ஒட்டகக்குட்டியைத் தடவிக்கொடுத்தான். அதன் தலையோடு கன்னத்தை அழுத்திக்கொண்டான். ஒட்டகக் குட்டி எதிர்க்கவில்லை. மனிதன் கொஞ்சி வருடுவது அதற்கு இன்பமாக இருந்தது போலும். அல்லது, உஸ்மான் தன் சொந்தக்காரன் என்று கண்டுகொண்டுதான் அது எதிர்க்க விரும்பவில்லையோ?

ஆனால் உஸ்மான் இரண்டு கைகளாலும் ஒட்டகக்குட்டியின் கழுத்தைக் கட்டிக்கொண்டானோ இல்லையோ, அது தலையைக் குலுக்கியது.

''பூ-ஊஊ-பூ-ஊஊ'' என்று உஸ்மானின் முகத்துக்கு நேரே கத்திற்று. அதன் வெதுவெதுப்பான மூச்சு முகத்தில் வீசி அடித்தது. ஒட்டகக் குட்டியிடமிருந்து பால் மணமும் காட்டு வெள்ளுள்ளி நெடியும் வீசின.

''இதோ வெள்ளுள்ளிப் பூண்டு பிடுங்கித் தருகிறேன் உனக்கு, வேண்டுமா?'' என்று சந்தோஷம் பொங்கக் கூவினான் உஸ்மான். ஒட்டகக்குட்டி வேண்டுவது என்ன என்று தான் புரிந்துகொண்டு விட்டதாக அவனுக்குத் தோன்றியது. ஆனால் அது திடீரென்று துள்ளி எழுந்தது. உஸ்மான் அதன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு தொங்கினான்.

பாவம், ஒட்டகக்குட்டி தன் பலத்தைச் சரியாக மதிப்பிடவில்லை. உஸ்மான் அதைவிட வளர்த்தியில் சின்னவன்தான், என்றாலும் கனமானவன். நீண்ட மெல்லிய கால்கள் தள்ளாட, ஒட்டகக்குட்டி சொந்தக்காரனுடன் தடாலென்று தரையில் விழுந்துவிட்டது.

பாட்டி அந்தக் கணமே ஓடி வந்துவிட்டாள். பேரனைத் தூக்கி நிறுத்தினாள்.

''இதோ பார், ஜாக்கிரதையாக இரு, குழந்தாய். என்னவானாலும் இது மிருகம் ஆயிற்றே'' என்று எச்சரித்தாள்.

ஆனால் உஸ்மான் வீறுப்பாகப் பேசினான்.

''அட நீ என்ன, பாட்டீ! ஒட்டகக்குட்டி என் பேச்சைக் கேட்கிறது, எல்லாவற்றையும் புரிந்துகொள்கிறதே'' என்றான்.

வெள்ளை ஒட்டகக் குட்டியுடன் உஸ்மானின் நட்பு இந்த மாதிரி ஆரம்பித்தது. உஸ்மானுக்கு ஐந்து வயது. ஒட்டகக்குட்டிக்கோ, வயது ஒன்றுதான். ஆனாலும் அவர்கள் குதூகலமாக

விளையாடுவதற்கோ, குறும்புத்தனம் செய்வதற்கோகூட இந்த வயது வித்தியாசம் தடையாக இல்லை. அவர்கள் விளையாடும் போது இருவரில் இளையவன் யார் பெரியவன் யார் என்பது தெரிவதில்லை.

தாய் ஒட்டகம் தன் மகனை உஸ்மானின் பொறுப்பில் முழுவதும் நம்பி ஒப்படைத்தது. கூடாரத்திற்குச் சிறிது தூரத்தில் அது காலை முதல் மாலைவரை அமைதியாக மேய்ந்தது. ஒட்டகக் குட்டியையோ உஸ்மானையோ அது கண்ணெடுத்தும் பார்ப்பது இல்லை.

ஒட்டகக்குட்டி தன் வழக்கப்படி ''பூ-ஊஊ-பூ-ஊஊ'' என்று நீட்டி முழக்கும் போது மட்டுமே தாய் அதன் பக்கம் தலையைத் திருப்பும்.

''பா-ஆஆ! பொறு ! என் மடியில் பால் இன்னும் சுரக்கவில்லை'' என்று அது பதில் குரல் கொடுக்கும்.

ஒட்டகக்குட்டியை வேறு தீனிக்குப் பழக்கப்படுத்த உஸ்மான் முயன்று பார்த்தான். ஆனால் அவன் முயற்சி பலிக்கவில்லை. சர்க்கரையோ, ரொட்டியோ, குமீஸோ எதுவுமே ஒட்டகக் குட்டிக்கு ஏற்கவில்லை.

''எனக்குத் தெரியுமே. உனக்கு எது பிடிக்கும் என்று எனக்குத் தெரியுமே'' என்று சிரித்தான் உஸ்மான்.

காட்டமுள்ள காட்டு வெள்ளுள்ளிப் பூண்டைப் பிடுங்கி ஒட்டகக்குட்டியிடம் நீட்டினான்.

''இந்தா, தின்னு! இது உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்றான்.

ஒட்டகக்குட்டி தலையைச் சாய்த்து, உஸ்மானின் அங்கையிலிருந்து பூண்டை ஜாக்கிரதையாகக் கவ்விக் கொண்டது.

''எப்படி, ருசியாய் இருக்கிறதா?''

ஒட்டகக்குட்டி வெள்ளுள்ளியை உற்சாகமாகச் சவைத்தது. பின்பு இன்னும் வேண்டும் என்று தலையை நீட்டிற்று.

உள்ளிப் பூண்டுகள் எல்லாவற்றையும் தின்று உஸ்மானின் உள்ளங்கையைச் சுரசுரப்பான நாக்கினுல் நக்கிய பிறகு ஒட்டகக்குட்டி திருப்தியுடன் தலையை ஆட்டியது.

''பூ-ஊஊ-ஊஊ! இன்னும் வேண்டும்!'' என்று கேட்டது.

''வேடிக்கையான பிராணி நீ! இனிப்புப் பண்டம் பிடிக்கவில்லை உனக்கு, காரப் பண்டமோ, பிடிக்கிறது!'' என்று ஆச்சரியப்பட்டான் உஸ்மான்.

இன்னும் ஒரு குத்து உள்ளிப்பூண்டு பிடுங்கிக் கொண்டு வந்தான். ஆனுல் அதை ஒட்டகக்குட்டிக்குக் கொடுப்பதற்கு முன் அதைக் கட்டு அவிழ்த்துவிட்டு, தன் பின்னே வரும்படி ஆசை காட்டி அழைத்தான்.

''வா, வா!''

உஸ்மானின் கையில் வெள்ளுள்ளிப் பூண்டுகளைக் கண்டதும் ஒட்டகக்குட்டி கால்களை அகல வைத்து அவன் பின்னே போயிற்று. உஸ்மான் ஓட்டம் பிடித்தான். ஒட்டகக்குட்டியும் பின்னே ஓடிற்று. வெள்ளுள்ளிப் பூண்டுகள் தழைத்து மண்டிய குன்றின்மேல் ஏறத் தொடங்கினுன் உஸ்மான். ஒட்டகக் குட்டியும் விடாது தொடர்ந்தது. இப்போது அதுவும் ஓட முயன்றது. சொந்தக்காரன் கையில் அவ்வளவு சுவையான பண்டம் இருக்கும்போது அவனிடமிருந்து பின் தங்கக் கூடாது, அல்லவா?

பாட்டி நூற்புக்கதிரும் கையுமாகக் கூடாரத்தின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ஆனுல் அவள் நூற்கவில்லை. குழந்தைகளின் விளையாட்டையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அப்போது தாத்தா கூடாரத்தின் அருகில் வந்தார்.

''என்ன, கிழவீ! நம் சிறுவர்கள் விளையாடுகிறுர்களா? சினேகம் ஆகிவிட்டார்களா?''

''விளையாடுகிறுர்கள். இதோ சாப்பிட உட்காரலாம்'' என்றுள் பாட்டி.

‘‘நம் பையன் ரொம்ப நாட்களாக அழவே இல்லை, அல்லவா? ஏன் என்று பார்த்தேன். இப்போதுதான் புரிந்தது விஷயம்’’ என்று சொன்னார் தாத்தா.

குதிரை மேலிருந்து இறங்கி, புன்னகை செய்தார். பேரனும் பெரியவன் ஆனதும் மேய்ப்பன் ஆகலாம் என்று அவர் நினைத்தார் போலும். அதற்கென்ன! எதுவும் நடக்கலாந் தானே! உஸ்மான் நகரத்தில் வளர்கிறான் என்பது ஒன்றும் முக்கியம் இல்லையே!

வி. திராகூன்ஸ்க்கிய்

ஸர்க்கஸ் சிறுமி

ஒரு தடவை எங்கள் வகுப்பு மாணவர்கள் எல்லாருமாக ஸர்க்கஸ் பார்க்கப் போனோம். அங்கே போகும்போது எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஏனென்றால் எனக்கு இதோ எட்டு வயது ஆக இருந்தது, ஆனால் நான் ஒரே ஒரு தரம்தான் ஸர்க்கஸ் போயிருந்தேன், அதுவும் வெகு காலத்துக்கு முன்னால். அல்யோனுவுக்கு ஆறு வயதுதான், அதற்குள் அவள் முழுசாக மூன்று தரம் ஸர்க்கஸ் பார்த்துவிட்டாள். எனக்கு இதனால் மிகுந்த மனத்தாங்கல். இப்போதோ, வகுப்பு மாணவர்கள் எல்லோருடனும் சேர்ந்து நான் ஸர்க்கஸ் பார்க்க வந்திருந்தேன். இப்பொழுது நான் பெரியவன் ஆகிவிட்டேன், இந்தத் தடவை எல்லாவற்றையும் சரியான விதத்தில் பார்ப்பேன். இது எவ்வளவு நல்லது என்று நினைத்தேன். முதல் தடவை பார்த்தபோதோ நான் சின்னவன், ஸர்க்கஸ் என்றால் என்ன என்று நான் புரிந்து கொள்ளவில்லை. அப்போது கரணவேலைக் காரர்கள் அரங்குக்கு வந்து, ஒருவன் இன்னொருவன் தலைமேல் தொற்றி ஏறியதும் நான் ஒரேயடியாகக் கடகடவென்று சிரித்தேன். ஏனென்றால் அவர்கள் வேண்டுமென்றே, சிரிப்பூட்டுவதற்காகவே அப்படிச் செய்வதாக நினைத்தேன். வீட்டில் வயதுவந்த மாமாக்கள் ஒருவர்மேல் ஒருவர் தொற்றி ஏறி நான் பார்த்ததே கிடையாதே. வெளியிலும் ஒருவரும் இப்படிச் செய்வதில்லை. ஆகவே வாய்விட்டு உரக்க நகைத்தேன். கரண வித்தைக்காரர்கள் தங்கள் லாகவத்தை இதன்மூலம் காட்டுகிறார்கள் என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அந்தத் தடவை இன்னொரு விஷயம் என்ன என்றால் அப்போது வாத்தியக் கோஷ்டியை நான் இடைவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். டமாரம் அடிப்பவரும் குழல் வாத்தியங்கள் இசைப்பவர்களும் எப்படி வாசிக்கிறார்கள் என்பதையே கவனித்துக்கொண்டிருந்தேன். இயக்குநர் என்னவோ பிரம்பை ஆட்டிக்கொண்டிருந்தார், ஆனால் கோஷ்டியில் ஒருவரும் அவர் பக்கம் பார்க்கவே இல்லை, எல்லோரும் அவர் அவருக்குத் தோன்றியபடி வாசித்துக்கொண்டிருந்தார்கள். எனக்கு இது மிகவும் பிடித்திருந்தது. ஆனால்

இந்த வாத்தியக்காரர்களை நான் பார்த்துக் கொண்டிருந்த போதே அரங்கத்தின் நடுவில் ஸர்க்கஸ்காரர்கள் வித்தை காட்டினார்கள். நான் அவர்களைப் பார்க்கவில்லை. ரசமான நிகழ்ச்சிகளைக் கவனிக்காமலே விட்டுவிட்டேன். அந்தக் காலத்தில் நான் இன்னும் ஒரே அசடாக இருந்தேன்.

ஆக, இப்போது வகுப்பு மாணவர்கள் எல்லாரோடும் நான் ஸர்க்கஸுக்கு வந்தேன். அங்கே ஏதோ தனி வகை மணம் வீசிற்று. பளிச்சிடும் வண்ணப் படங்கள் சுவர்களில் தொங்கின. எங்கும் பிரகாசமாக இருந்தது. நடுவில் அழகிய கம்பளம் விரித்திருந்தது. விட்டம் வெகு உயரே இருந்தது. அங்கே பளபளக்கும் பலவித ஊஞ்சல்கள் மாட்டியிருந்தன. இவை எல்லாமே எனக்கு எடுத்த எடுப்பிலேயே பிடித்துப்போய்விட்டன. அந்தச் சமயத்தில் வாத்தியங்கள் இசைத்தன. எல்லோரும் பரபரப்புடன் அவரவர் இடங்களில் உட்கார்ந்தார்கள். அப்புறம் ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிடத் தொடங்கினார்கள். திடீரென்று சிவப்புப் படுதாவுக்குப் பின்னிருந்து யாரோ ஆட்கள் பெருங் கூட்டமாக அரங்குக்கு வந்தார்கள். எல்லோரும் மிக அழகான உடைகள்—மஞ்சள் கோடுகள் போட்ட சிவப்பு உடுப்புக்கள்—அணிந்திருந்தார்கள். திரையின் இரண்டு ஓரங்களிலும் அவர்கள் வரிசையாக நின்றார்கள். கறுப்பு உடை அணிந்த அவர்களுடைய தலைவன் அவர்களுக்கு நடுவில் நடந்தான். அவன் ஏதோ உரக்கக் கத்தினான். என்ன என்று அவ்வளவாகப் புரியவில்லை. வாத்தியங்கள் வேக வேகமாக, பலமாக முழங்கின. செப்படி வித்தைக்காரன் அரங்கத்துக்குத் துள்ளி வந்தான். அவ்வளவுதான், ஒரே வேடிக்கை தொடங்கிவிட்டது! அவன் ஒரு பத்து அல்லது நூறு உருண்டைகளை மேலே எறிந்து மறுபடி பிடித்தான். பிறகு கோடிட்ட பந்து ஒன்றை எடுத்து விளையாட ஆரம்பித்தான்.... தலையாலும் பிடரியாலும் நெற்றியாலும் அதை அடித்தான், முதுகில் உருட்டினான், குதிகாலால் உயரே வீசினான். பந்து காந்தத்தால் கவரப்பட்டதுபோல அவன் உடம்பு முழுவதிலும் உருண்டது. இது மிகவும் நேர்த்தி

யாய் இருந்தது. திடீரென்று செப்படி வித்தைக்காரன் பந்தை எங்கள் பக்கம் வீசினான். அவ்வளவுதான், ஒரே குழப்பம் தொடங்கிவிட்டது. நான் பந்தைப் பிடித்து வலேரியிடம் எறிந்தேன். வலேரிய் மீஷாவிடம் வீசினான். மீஷா முன்பின் யோசியாமல் வாத்தியக் கோஷ்டி இயக்குநரைக் குறி பார்த்து அதை எறிந்துவிட்டான். பந்து அவர்மேல் படாமல் டமாரத்தில் 'பம்' என்று தாக்கிற்று! டமாரம் அடிப்பவன் கோபங்கொண்டு பந்தைச் செப்படி வித்தைக்காரனிடம் திரும்ப வீசினான். பந்தோ, அரங்கம் வரை போகவில்லை, ஓர் அழகிய மாமியின் கொண்டையில் பட்டென்று தாக்கிற்று. மாமியின் கொண்டை கலைந்து, சப்பையாகி விட்டது. எங்கள் எல்லோருக்கும் சிரித்துச் சிரித்து வயிறு அறுந்து போய்விட்டது.

செப்படி வித்தைக்காரன் திரைக்குப்பின் ஓடிவிட்டான். அப்புறமும் வெகுநேரம் வரை எங்கள் கொம்மாளம் அடங்கவில்லை. அப்போது பிரமாண்டமான நீலக் கோளம் ஒன்று அரங்கில் உருண்டது. அறிவிப்பு செய்யும் மாமா நடுவே வந்து புரியாத குரலில் ஏதோ கத்தினார். ஒன்றுமே விளங்கவில்லை. வாத்தியக் கோஷ்டி ஏதோ குதூகலமான மெட்டை இசைத்தது. இந்தத் தடவை முன்போலத் துரித கதியில் வாசிக்கவில்லை.

அரங்கில் திடீரென்று பிரவேசித்தாள் சிறு பெண் ஒருத்தி. இவ்வளவு சின்ன, இவ்வளவு அழகான பெண்ணை அதற்குமுன் நான் கண்டதே இல்லை. அவளுக்கு ஆழ்ந்த நீலக் கண்கள். அவற்றைச் சுற்றிலும் நீண்ட இமை மயிர்கள். வெள்ளிபோல் பளபளக்கும் கவுனும் மெல்லிய மேலங்கியும் அணிந்திருந்தாள் அவள். அவளுடைய கைகள் நீளமானவை. பறவை சிறகடிப்பது போல அவற்றை ஆட்டி, பிரமாண்டமான கோளத்தின்மேல் துள்ளி ஏறினாள் சிறுமி. அவளுக்காகவே அது உருட்டிவிடப்பட்டிருந்தது. கோளத்தின்மேல் அவள் நின்றாள். அப்புறம் திடீரென்று அதிலிருந்து துள்ளிக் குதிக்கப் பார்ப்பவள் போல ஓடினாள். ஆனால் கோளம் அவள் பாதங்களுக்கு அடியில் சுழன்று உருண்டது. அவள் அதன்மேல் ஓடுவது போன்ற பாவனையுடன்

அரங்கில் சுற்றிவந்தாள். அந்தமாதிரிப் பெண்ணை நான் பார்த்ததே இல்லை. மற்ற எல்லாப் பெண்களும் சாதாரணமானவர்கள். இவளோ, தனி மாதிரி. சம தரையில் போல அந்தக் கோளத்தின்மேல் தன் சிறு கால்களால் அவள் ஓடினாள். நீலக் கோளம் அவளைத் தன்மேல் ஏற்றிச் சென்றது. நேராக முன்னேயும், பின்னேயும், இடமாகவும், எப்படி வேண்டுமானாலும் அதன் மேல் சவாரி செய்ய அவளுக்கு முடிந்தது! நீரில் மிதப்பதுபோல அதன் மேல் ஓடியபோது அவள் குதூகலம் பொங்கச் சிரித்தாள். அவள் ஏதோ கதையில் வரும் பெண் போல எனக்குத் தோன்றினாள். அவ்வளவு சின்னவளாக, இனியவளாக, அசாதாரணமானவளாக இருந்தாள் அவள். நடுவில் அவள் கோளத்தை நிறுத்தினாள். ஒருவன் பலவிதச் சலங்கைகளை அவளிடம் கொடுத்தான். அவள் அவற்றைத் தன் கால்களிலும் கைகளிலும் மாட்டிக் கொண்டு, நடனம் ஆடுபவள் போலக் கோளத்தின் மேல் மெதுவாகச் சுற்றிவந்தாள். வாத்தியக்குழு மெல்லென இசைத்தது. பெண்ணின் நீளக் கைகளில் தங்கச் சலங்கைகள் லேசாகக் கிணுகிணுத்தது கேட்டது. இது எல்லாமே ஏதோ கதைபோல் இருந்தது. அப்போது விளக்குகள் அணைக்கப்பட்டன. அந்தப் பெண்ணால் இருட்டில் பளிச்சிடவும் முடியும் என்பது அப்போது தெரிந்தது. ஆடை மின்ன, சலங்கைகள் கலீர் கலீரென்று ஒலிக்க அவள் மெதுவாக நீந்துபவள் போல் வட்டமிட்டாள். இதுவும் ஒரே ஆச்சரியமாக இருந்தது. அந்த மாதிரி எதையும் நான் என் ஆயுள் முழுவதிலும் பார்த்ததே இல்லை.

விளக்குகள் மறுபடி போடப்பட்டதும் எல்லோரும் கை தட்டி, ''ஆகாகா, பிரமாதம்'' என்று ஆரவாரித்தார்கள். நானும் ''ஆகாகா, பிரமாதம்'' என்று கத்தினேன். அந்தப் பெண் கோளத்தின் மேலிருந்து குதித்து, எங்களுக்குப் பக்கமாக முன்னே ஓடி வந்தாள். ஓடுகிற ஓட்டத்திலேயே மின்னல் போலக் கரணம் அடித்தாள், ஒரு தரம், இரண்டு தரம். இப்படியே கரணம் அடித்தபடி முன்னேறினாள். இதோ அவள் அரங்கு விளிம்பில் மோதி மண்டையை உடைத்துக்கொள்ளப் போ

கிருள் என்று எனக்குத் தோன்றியது. எனக்கு ஒரே பயம் உண் டாகிவிட்டது. நான் துள்ளி எழுந்து நின்றேன். அவளைத் தாங்கிப் பிடித்துக் காப்பாற்றுவதற்காக அவளிடம் ஓடப் பார்த்தேன். அதற்குள் அந்தப் பெண் சட்டென்று அடித்த சிலை போல நின்று விட்டாள். நீண்ட கைகளை இரு பக்கமும் வீசினுள். வாத்திய இசை அடங்கிவிட்டது. அவள் நின்று புன்னகை செய்தாள். எல்லாரும் முழு பலத்துடனும் கைதட்டினுர்கள், கால்களால் கூடத் தொப்புத் தொப்பென்று அடித்தார்கள். அந்தக் கணத் தில் அச்சிறுமி என்னைப் பார்த்தாள். நான் அவளைப் பார்த்ததை அவள் கண்டு கொண்டாள் என்பதை நான் கண்டேன். அவள் என்னைப் பார்த்ததை நான் கண்டுகொண்டேன் என்பதையும் அவள் கண்டுகொண்டாள். அவள் என் பக்கம் கையை ஆட்டி, புன்னகை செய்தாள். அவள் என் பக்கம் மட்டுமே கையை ஆட் டிப் புன்னகை செய்தாள். எனக்கு மறுபடி அவளிடம் ஓட ஆசை உண்டாயிற்று. அவள் பக்கம் கைகளை நீட்டினேன். அவள் தன் கையை முத்தமிட்டு எங்கள் எல்லோரையும் நோக்கி வீசினுள். அப்புறம், எல்லா வித்தைக்காரர்களும் போன அதே சிவப்புத் திரைக்குப் பின் ஓடிவிட்டாள். பிறகு கோமாளி சேவலுடன் அரங்குக்கு வந்து தும்மவும் விழவும் தலைப்பட்டான். ஆனுல் என் மனம் அவனுடைய கோமாளிக் கூத்தை ரசிக்கவில்லை. பெரிய கோளத்தின் மேல் வித்தை காட்டிய சிறு பெண்ணைப் பற்றியே நான் ஓயாமல் நினைத்துக்கொண்டிருந்தேன். ''அவள் எவ்வளவு அற்புதமான பெண்! என்னைப் பார்த்து அவள் எப் படிக் கையை வீசி ஆட்டினுள், புன்னகை செய்தாள்'' என்று மறுபடி மறுபடி எண்ணினேன். மேற்கொண்டு வேறு எதையும் பார்க்க எனக்கு மனமில்லை. சிவந்த மூக்கும் தானுமாக இருந்த இந்த மட்டிக் கோமாளியைப் பார்க்காமல் இருப்பதற்காகக் கண்களை இறுக மூடிக் கொண்டேன். நீலக் கோளத்தின்மேல் நின்ற சிறுமி இன்னமும் இடைவிடாமல் எனக்கு முன் காட்சி தந்து கொண்டிருந்தாள். ஆனுல் இந்தக் கோமாளி அந்தக் காட்சி யைக் கெடுத்தான். அதனுல்தான் எனக்கு அவன்மேல் ஆத்திரம்.

அப்புறம் இடைவேளை அறிவிக்கப்பட்டது. எல்லோரும் சிற்றுண்டிச் சாலைக்குக் குளிர் பானங்கள் சாப்பிடப் போனார்கள். நானோ, சந்தடி செய்யாமல் கீழே இறங்கி, வித்தைக் காரர்கள் வெளியே வந்த திரையின் பக்கம் போனேன். அந்தப் பெண்ணை இன்னொரு தரம் பார்க்க எனக்கு ஆசையாய் இருந்தது. ஆகவே திரையின் பக்கத்தில் நின்று அவள் வருகிறாளா என்று பார்த்தேன். ஆனால் அவள் வரவில்லை.

இடைவேளைக்குப் பிறகு சிங்கங்கள் அரங்குக்கு வந்தன. பழக்குபவன் அவற்றை ஓயாமல் வாலைப் பிடித்து இழுத்த வண்ணமாய் இருந்தான்—அவை சிங்கங்கள் அல்ல, செத்த பூனைகள் என்பதுபோல. இது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் அவற்றை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்தில் உட்கார வைத்தான். அல்லது அவற்றைத் தரையில் படுக்கச் செய்து, தரை விரிப்பின்மேல் நடப்பதுபோல அவற்றின் மேல் அடி வைத்து நடந்தான். ''அட நிம்மதியாகப் படுத்திருக்க விட மாட்டோம் என்கிறார்களே'' என்பதுபோல் இருந்தது அவற்றின் முகத் தோற்றம். எனக்கு இது ரசிக்கவே இல்லை. ஏனென்றால், அசல் சிங்கம் எல்லையில்லாத சமவெளிகளில் காட்டு எருமையை விரட்டி வேட்டையாட வேண்டும், பயங்கர கர்ஜனையால் அக்கம் பக்கமெல்லாம் அதிரச் செய்து ஜனங்களுக்குத் திகில் ஊட்ட வேண்டும். இல்லாவிட்டால் அது சிங்கமே இல்லை. அதை என்ன சொல்லுவது என்று எனக்கே தெரியவில்லை.

ஸர்க்கஸ் முடிந்து நாங்கள் வீட்டுக்குப் போனபோது நான் கோளத்தின் மேல் வித்தை காட்டிய பெண்ணைப் பற்றியே வழி நெடுக எண்ணமிட்டேன்.

ராத்திரி அப்பா கேட்டார்:

''ஊம், எப்படி? ஸர்க்கஸ் பிடித்திருந்ததா?'' என்று.

நான் சொன்னேன்:

''அப்பா! அங்கே ஸர்க்கஸில் ஒரு பெண் இருக்கிறாள். அவள் நீலக் கோளத்தின் மேல் நடனம் ஆடுகிறாள். அருமையான பெண். எல்லாரையும்விட மேல்! அவள் என்னைப்

பார்த்துப் புன்னகை செய்தாள், கையை வீசி ஆட்டிஞள். என்னை மட்டுமே பார்த்து, சத்தியமாய்ச் சொல்லுகிறேன்! தெரிந்ததா, அப்பா? வரும் ஞாயிற்றுக்கிழமை ஸர்க்கஸுக்குப் போவோம்! நான் அவளை உனக்குக் காட்டுகிறேன்!''

''அதற்கென்ன, கட்டாயம் போவோம். எனக்கு ஸர்க்கஸ் என்ருல் உயிர்!'' என்ருர் அப்பா.

அம்மா எங்கள் இருவரையும் காணுதது கண்டவள் போல நோக்கிஞள்.

...ஆக அந்த வாரம் தொடங்கிற்று, நீண்டுகொண்டே போயிற்று. நான் சாப்பிட்டேன், படித்தேன், உறங்கினேன், விழித்தேன், விளையாடினேன், சண்டைகூடப் போட்டேன். ஆனுலும் எப்போதடா இந்த ஞாயிற்றுக் கிழமை வரும், அப்பாவுடன் ஸர்க்கஸுக்குப் போகலாம், அந்தப் பெண்ணைப் பார்க்கலாம் என்றே ஓயாமல் எண்ணிக்கொண்டிருந்தேன். அந்தப் பெண்ணை நான் அப்பாவுக்குக் காட்டுவேன், ஒருவேளை அப்பா அவளை நம் வீட்டுக்கு வரும்படி அழைப்பார். நான் அவளுக்கு பிரௌனிங் கைத்துப்பாக்கி பரிசு அளிப்பேன், எல்லாப் பாய்களையும் விரித்துச் செல்லும் கப்பலின் படம் வரைந்து கொடுப்பேன் — இப்படித் திட்டமிட்டேன்.

ஆனல் ஞாயிற்றுக்கிழமை அப்பாவால் வர முடியவில்லை. தோழர்கள் அவரைப் பார்க்க வந்தார்கள். எவையோ திட்ட வரைவுகளை வைத்துக்கொண்டு அவர்கள் ஏதோ சர்ச்சை செய்தார்கள், கூப்பாடு போட்டார்கள், சிகரெட்டுகள் புகைத்தார்கள், தேநீர் குடித்தார்கள், வெகு நேரம் வரை உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் போன பிறகு அம்மாவுக்குத் தலைவலி எடுத்துவிட்டது. அறையை நாங்கள் துப்புரவு செய்தபோது அப்பா சொன்ஞர்:

''அடுத்த ஞாயிற்றுக்கிழமை. ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.''

மறு ஞாயிற்றுக்கிழமையை நான் ஒரே ஆவலுடன் எதிர்பார்த்தேன். எப்படித்தான் இன்ஞெரு வாரம் கழித்தேஞே,

எனக்கே நினைவில்லை. அப்பா தம் சொல்லை நிறைவேற்றினார். என்னை அழைத்துக்கொண்டு ஸர்க்கஸுக்குப் போனார். இரண்டாவது வரிசைக்கு டிக்கெட்டுகள் வாங்கினார். அரங்குக்கு அவ்வளவு கிட்டத்தில் நாங்கள் உட்கார்ந்ததில் எனக்கு ஒரே சந்தோஷம். நிகழ்ச்சிகள் தொடங்கின. கோளத்தின் மேல் வித்தை செய்யும் சிறுமி எப்போது வருவாள் என்று நான் எதிர் பார்க்கலானேன். ஆனால் அறிவிப்பாளன் வேறு எத்தனையோ வித்தைக்காரர்களை அறிவித்துக்கொண்டு போனான். அவர்கள் வந்து என்னென்னவோ வித்தைகள் காட்டினார்கள். ஆனால் அந்தப் பெண் மட்டும் வரக்காணோம். நான், பொறுக்க முடியாமல் துடித்தேன். வெள்ளிப் பளபளப்பு கவுனும் மெல்லிய மேலங்கியும் அணிந்த அந்தப் பெண் எவ்வளவு அசாதாரணமானவள், அவள் நீலக் கோளத்தின் மேல் எவ்வளவு லாகவமாக ஓடுகிறாள் என்பதை அப்பா பார்க்க வேண்டும் என்று எனக்கு ஒரே ஆசையாய் இருந்தது. ஒவ்வொரு தடவையும் அறிவிப்பாளன் வந்ததும், ''இதோ அவளை அறிவிக்கப் போகிறான்!'' என்று அப்பா காதில் கிசுகிசுப்பேன்.

அவனோ, வேண்டுமென்றே போல வேறு யாரையாவது அறிவிப்பான். எனக்கு அவன்மேல் வெறுப்புகூட உண்டாகிவிட்டது.

''அட இவன் நாசமாய்ப்போக! இது உப்பு சப்பில்லாத நிகழ்ச்சி! வெறும் சக்கை!'' என்று நான் ஓயாமல் அப்பாவிடம் சொல்லுவேன்.

அப்பாவோ, என்னைப் பார்க்காமலே, ''இடைஞ்சல் பண்ணாதே. இது ரொம்ப ரசமான நிகழ்ச்சி! அருமையானது!'' என்றார்.

''இந்த நிகழ்ச்சி அப்பாவுக்கு ரசமாயிருக்கிறது என்றால் ஸர்க்கஸை அவர் நன்றாகப் புரிந்துகொள்ளவில்லை என்று ஆகிறது. கோளத்தின் மேல் வித்தை காட்டும் பெண்ணைப் பார்த்ததும் இவர் என்ன சொல்லுகிறாரோ, பார்க்கலாம். இருக்கையிலிருந்து ஆறடி துள்ளிக் குதிப்பார்''—இப்படி நினைத்துக் கொண்டேன்.

அதற்குள் அறிவிப்பாளன் வந்து ''இடைவேளை!'' என்று உரக்கக் கத்திஞன்.

என்ஞல் என் காதுகளையே நம்ப முடியவில்லை? இடைவேளையா? ஏன்? பிற்பகுதியில் சிங்கங்கள் மட்டுந்தானே வரும்! கோளத்தின் மேல் வித்தை காட்டும் பெண் எங்கே? எங்கே அவள்? அவள் ஏன் அரங்குக்கு வரவில்லை? அவளுக்கு உடம்பு சரியாய் இல்லையோ ஒருவேளை? விழுந்துவிட்டாளோ? மூளை அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டதோ?

''அப்பா, வாருங்கள் போவோம். அந்தப் பெண்ணுக்கு என்ன நேர்ந்தது என்று விசாரிப்போம்!'' என்றேன்.

''ஆமாம். உன் சமநிலை வித்தைக்காரி எங்கே? ஏஞே அவளைக் காஞேமே? வா, போய் நிகழ்ச்சிக் குறிப்பு வாங்கிப் பார்போம்!'' என்று சொன்ஞர் அப்பா.

அப்பா குதூகலமும் மனநிறைவும் உள்ளவராகக் காணப் பட்டார். நாலா பக்கமும் கண்ஞேட்டிஞர். வாய்விட்டுச் சிரித்தார்.

''ஆகா, எனக்குப் பிடித்திருக்கிறது.... ஸர்க்கஸ் என்ருல் எனக்கு ஒரே ஆசை! இந்த மணமே எனக்குப் பிரியமானது.... போதை தரும் மணம்'' என்று மகிழ்ந்தார்.

நாங்கள் இடை வழிக்குப் போஞேம். அங்கே கூட்டம் நெரிந்தது. மிட்டாய்களும் பிஸ்கோத்துக்களும் விற்கப்பட்டுக் கொண்டிருந்தன. பலவிதப் புலி முகங்களின் நிழல் படங்கள் சுவர்கள்மீது மாட்டப்பட்டிருந்தன. சற்று நேரம் இங்கும் அங்கும் நடந்தபின் கடைசியில் டிக்கட் பரிசோதகியைக் கண் டோம். அவளிடம் நிகழ்ச்சிக் குறிப்புகள் இருந்தன. அப்பா ஒரு நிகழ்ச்சிக் குறிப்பை அவளிடமிருந்து வாங்கிப் பார்க்கலாஞர். என்ஞல் பொறுக்க முடியவில்லை.

''கோளத்தின்மேல் வித்தை காட்டுவாளே, சின்னப் பெண், அவளுடைய நிகழ்ச்சி எப்போது நடக்கும்? தயவுசெய்து சொல் லுங்களேன்'' என்று டிக்கட் பரிசோதகியிடம் கேட்டேன்.

''எந்தப் பெண்?'' என்று பதில் கேள்வி போட்டாள் அவள்.

''கோளத்தின்மேல் சமநிலே வித்தை காட்டும் தா. வரன்த்ஸோவாவின் பெயர் நிகழ்ச்சிக் குறிப்பில் இருக்கிறதே. அவள் எங்கே?'' என்ருர் அப்பா.

நான் பேசாமல் நின்றேன்.

''ஆ, தான்யா வரன்த்ஸோவாவைப் பற்றிக் கேட்கிறீர்களா? அவள் போய்விட்டாள். ஆமாம், போய்விட்டாள். இப்படித் தாமதமாக வந்திருக்கிறீர்களே, ஏன்?'' என்று சொன்னுள் டிக்கட் பரிசோதகி.

நான் பேசாமல் நின்றேன்.

''இரண்டு வாரங்களாக நாங்கள் நிம்மதி இல்லாமல் தவிக்கிருேம். கோளத்தின் மேல் வித்தை காட்டும் தான்யா வரன்த்ஸோவாவைப் பார்க்க ஆசைப்பட்டோம். அவளேக் காணும்'' என்ருர் அப்பா.

''அவள்தான் போய்விட்டாள் என்கிறேனே.... தாயார் தகப்பஞரோடு.... அவளுடைய பெற்ருேர் 'வெண்கல மனிதர்கள்'. நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே, இல்லேயா? ரொம்ப வருத்தம். நேற்றுத்தான் புறப்பட்டுப் போஞர்கள்'' என்று சொன்னுள் டிக்கட் பரிசோதகி.

''பார்த்தாயா, அப்பா?'' என்று குறை சொல்லத் தொடங்கினேன்.

''அவள் போய்விடுவாள் என்று எனக்குத் தெரியாது. எவ்வளவு வருத்தந்தரும் விஷயம்.... அட கடவுளே! ஊம், இப்போது ஒன்றும் செய்வதற்கில்லே'' என்ருர் அப்பா.

''நீங்கள் சொன்னது நிச்சயமான தகவல்தானே?'' என்று பரிசோதகியிடம் கேட்டேன்.

''ஆமாம்.''

''அவர்கள் எங்கே போஞர்கள், தெரியாதோ?'' என்று கேட்டேன்.

''விளாதிவஸ்தோக்'' என்ருள் பரிசோதகி.

அடேயப்பா, அங்கேயா! ரொம்ப தூரம் ஆயிற்றே. விளாதிவஸ்தோக். எனக்குத் தெரியும், சோவியத் யூனியனின்

தேசப்படத்தின் கோடியில், மாஸ்கோவுக்கு வலப் புறம் இருக்கிறது அது.

''எவ்வளவு தூரம்!'' என்றேன்.

டிக்கட் பரிசோதகி திடீரென்று பரபரத்தாள்.

''நல்லது, போங்கள். போங்கள் இடத்துக்கு. இதோ விளக்குகளை அணைத்துவிடுவார்கள்'' என்றாள்.

''போவோம் வா தெனீஸ்! இப்போது சிங்கங்கள் வரும்! அடர்ந்த பிடரியும் பயங்கர கர்ஜனையுமாக! பார்க்கப் போவோம் வேகமாக!'' என்று அப்பாவும் அவசரப்படுத்தினர்.

''வீட்டுக்குப் போவோம், அப்பா'' என்றேன்.

''நல்ல தொல்லைதான் போ'' என்றார் அப்பா.

டிக்கட் பரிசோதகி சிரித்தாள். ஆனால் நாங்கள் உடுப்பறைக்குப் போனோம். நான் எங்கள் எண் தகட்டைக் கொடுத்தேன். மேல்கோட்டுகளையும் தொப்பிகளையும் வாங்கிப் போட்டுக் கொண்டு நாங்கள் ஸர்க்கஸிலிருந்து வெளியேறினோம். உலாச்சாலை வழியே நடந்தோம். வெகு நேரம் நடந்த பின் நான் சொன்னேன்:

''விளாதிவஸ்தோக் தேசப்படத்தின் மறு கோடியில் இருக்கிறது. ரெயிலில் போவதானால் முழுதாக ஒரு வாரத்திற்கு மேல் பயணம் செய்ய வேண்டி வரும்....''

அப்பா பேசாதிருந்தார். அவர் நினைவு வேறு எங்கோ இருந்தது போலும். நாங்கள் இன்னும் கொஞ்ச தூரம் நடந்தோம். திடீரென்று எனக்கு விமானத்தின் நினைவு வந்தது.

'' 'தூ-104' விமானத்தில் சில மணி நேரத்தில் அங்கே போய்விடலாம்!'' என்றேன்.

அப்போதும் அப்பா பதில் பேசவில்லை. என் கையை இறுகப் பிடித்துக்கொண்டு மௌனமாக நடந்தார். நாங்கள் கோர்க்கிய் தெருவை அடைந்ததும், ''ஐஸ்கிரீம் கடைக்குப் போவோம் வா. ஆளுக்கு இரண்டு கிண்ணம் வாங்கிச் சாப்பிடலாம். ஊம்?'' என்றார்.

''எனக்கு வேண்டும்போல் இல்லை, அப்பா'' என்றேன் நான்.

''அங்கே 'கஹெறத்தீன்ஸ்க்காயா' என்று ஒரு பானம் கிடைக்கும். அதைவிட மேலான பானம் உலகத்திலேயே இல்லை'' என்ருர் அப்பா.

''வேண்டும்போல் இல்லை, அப்பா'' என்று சொல்லி விட்டேன்.

அவர் என்னை வற்புறுத்தவில்லை. நடையை விரைவுபடுத்திஞர், என் கையைக் கெட்டியாகப் பிடித்து அழுத்திஞர். எனக்கு வலிக்கக்கூடச் செய்தது. அவர் விடுவிடுவென்று நடந்தார். அவரோடு நடப்பதே எனக்குச் சிரமமாய் இருந்தது. எதற்காக அவ்வளவு வேகமாய் நடந்தார் அவர்? என்னுடன் அவர் ஏன் பேசவில்லை? அவரை ஏறிட்டுப் பார்க்க எனக்கு ஆசை உண்டாயிற்று. தலையை நிமிர்த்தினேன். அவர் முகம் மிக ஆழ்ந்த தோற்றமும் ஏக்கமும் கொண்டிருந்தது.

அ. அபூ-பக்கர்

கலைஞனின் மகள்



மலையின் சாய்வான சரிவில் கடுமையான வரிசைகளாக நின்றன கல்லறை முகப்புப் பாளங்கள். இந்த இடுகாட்டு நினைவுச் சின்னங்கள் பல தலைமுறைகளின் இரகசியங்களைப் பாது காத்து வைத்திருந்தன. ஆனால் பிறப்பு, இறப்புத் தேதிகளைத் தவிர வேறு எந்த விவரமும் அவற்றில் பொறிக்கப்படவில்லை.

இடுகாடு புனிதத் தலம். மலைவாசிகள் அதன் அமைதியைப் பரிவுடன் காத்தனர். காட்டுப் பழமரங்கள் எவராலும் தொடப் படாமல் இங்கே தழைத்து வளர்ந்தன. முந்திரிப் பழங்களின் அளவே கொண்ட ஆப்பிள்கள் காய்த்துக் குலுங்கிய காட்டு ஆப்பிள் மரத்தின் பின் மறைந்திருந்தது கும்மட்ட முகடு வேய்ந்த சிறு வீடு. கும்மட்டத்தின் உச்சியில் ஒரு கோளம் வைக்கப்பட்டிருந்தது. ஜன்னல்களுக்குப் பதிலாக முக்கோணத் துவாரங்கள். கதவு பழங்காலத்தது, செதுக்கு வேலைப்பாடு உள்ளது. ஷேக் ஹாஜி இபன்-பம்மாத் என்ற துறவியின் சமாதி அது.

சாதாரணச் சீட்டித் துணி உடை அணிந்த ஒரு சிறுமி ஷேக்கின் சமாதிக்குப் பின்னே மறைந்தாள். அவள் பெயர் குல்தூம். வயது பதினொன்றுதான், ஆனால் பார்வைக்கு இன்னும் பெரியவளாகத் தோன்றினாள். சிறுமி விம்மி அழுது கொண்டு, கண்ணீரைத் தேய்த்து முகமெல்லாம் பூசிக்கொண்டு நின்றாள். பெரிய கராக்குல் தொப்பிகள் அணிந்தவர்கள் அவளுடைய தகப்பனார், குபச்சீ கிராமத்தின் செதுக்குச் சித்திரக் கலைஞர், பஹ்ரூதை அடக்கம் செய்து கொண்டிருந்தார்கள். சிறுமி அடிக்கடி அந்தத் திக்கில் பார்வையைச் செலுத்திய வண்ண மாய் இருந்தாள். தங்கள் காலஞ்சென்ற நண்பனுக்கு இறுதிக் கடன் செலுத்த வந்திருந்த கலைஞர்கள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பஹ்ரூத் தம் குடும்பத்தின் ஒரே ஆடவர். அவர் திடீரென இறந்துபோனார். அவருடைய மனைவி பிக்கா வும் புதல்வி குல்தூமும் அனாதைகள் ஆகிவிட்டார்கள்.

இறுதிச் சடங்கு முடிந்தது. ஒரு முதியவர் சம்பிரதாயப்படி குரானின் சில பகுதிகளை ராகத்துடன் படித்தார். அப்புறம்

எல்லாரும் அவரவர் இடங்களிலிருந்து எழுந்து, அதிகப்படி வார்த்தையால் நிசப்தத்தைக் குலைக்க விரும்பாதவர்கள் போல மௌனமாகக் கலைந்து சென்றார்கள்.

குல்தூம் தனித்திருந்தாள். அவள் தகப்பனாரின் புதை யிடத்துக்குப் பாய்ந்துபோய், இன்னும் ஈரமாயிருந்த குளிர்ந்த தரையைத் தழுவிக் கொண்டு கதறியழுதாள்.

வெகு நேரம் கழித்தே அவள் அழுகை ஓய்ந்து களைத்துச் சோர்ந்து கிராமம் திரும்பினாள். வீடு ஆட்களால் நிறைந் திருந்தது. விதவைக்குத் தேறுதல் சொல்ல வந்திருந்தார்கள் கிராமத்தார். பலருடைய விழிகளில் கண்ணீர் பளிச்சிட்டது. பஹ்மூத் தேர்ந்த செதுக்குச் சித்திரக் கலைஞராக மட்டும் அல்ல, உளமார்ந்த நல்லியல்பு கொண்டவராகவும் இருந்தார்.

ஆனால் இறந்தவர் வீட்டில் குழுமியிருந்தவர்களில் ஒரு வராவது குல்தூமைக் கவனிக்கவில்லை. ஒருவராவது அவளுக்கு ஒரு வார்த்தைகூடத் தேறுதல் சொல்லவில்லை. வயதுவந்த மனி தனின் இதயத்தில் உள்ளதுபோன்று அவ்வளவே பெருந்துயரம் குல்தூமின் சிறு இதயத்திலும் இருக்க முடியும் என்றே ஒருவரும் நினைக்கவில்லை போலும். தான் தனியானவள் என்ற உணர்வு இதனால் சிறுமியின் மனத்தில் இன்னும் கடுமையாக உறைத்தது. அவள் தகப்பனாரின் வெறுமையான சிற்பக்கூடத்துக்குள் போய், கதவைச் சாத்திக் கொண்டு, துயரம் தாங்க முடியாமல் மென் மையான கரடித் தோல்மேல் உட்கார்ந்தாள். தகப்பனார் சிற்று ளியால் வேலை செய்கையில் இங்கேதான் அவர் காலருகே அவள் ஒண்டிக் கொள்வது வழக்கம். தகப்பனார் அவளுக்குக் கதைகள் சொல்லுவார். தந்தைக்கு ஒத்தாசை செய்ய மகள் எப்போதும் ஆயத்தமாயிருந்தாள். அவர் செதுக்கு வேலையை முடித்ததுமே கலைப் பொருளைத் துப்புரவு செய்து அதற்கு மெருகு கொடுப் பாள் குல்தூம்.

''நீ என்ன செய்கிறாய்?... இங்கே ஏன் செதுக்குகிறாய், அங்கே ஏன் செதுக்கவில்லை?... வெள்ளிக் கம்பி உனக்கு எதற் காக?'' என்று சில வேளைகளில் கேள்வி மேல் கேள்வி போடுவாள்.

அவளுக்கு ஆயிரம் சந்தேகங்கள் கிளம்பும். தகப்பனுர் அவளுடைய கேள்விகளுக்குப் பொறுமையாக விடைகள் அளிப் பார், ஒவ்வொரு அற்ப விஷயத்தையும் விளக்க முயல்வார். ஆனல் தாயார் குறுக்கிடுவாள்.

''நீ அப்பாவின் வேலைக்கு இடைஞ்சல் செய்கிருய். உனக்கு இது தெரிந்து ஆக வேண்டியது என்ன? நீ ஆண்பிள்ளை இல்லை யே. பொற்கொல்லன் வேலை பெண்களுக்கு ஏற்றது அல்ல'' என்று அவள் அடிக்கடி சொல்லுவாள்.

''இவ்வளவு அழகான கலை பெண்களுக்கு ஏன் ஏற்றதில்லை?'' என்று புரியாமல் திகைப்பாள் குல்தூம்.

உண்மைதான். குபச்சீ கிராமத்தில் ஒரு பெண்கூடப் பொற்கொல்லர் வேலை செய்வதில்லை.

இப்போது, துக்கத்தால் மனம் இடிந்துபோன குல்தூம் இதையெல்லாம் பற்றிச் சிந்தித்தாள். அப்புறம் சிற்பக்கூடத் தின் தரையில் விரித்திருந்த கரடித்தோல் மேல் படுத்து உறங்கி விட்டாள்.

அதிகாலையில் கம்மியர்களைக் கூட்டுறவுச் சங்கத் தொழில் நிலையத்துக்கு அழைப்பதற்கான மணி அடித்தது. பிக்கா வழக் கப்படி துள்ளி எழுந்தாள். அப்புறந்தான் அவளுக்கு நினைவு வந்தது, அவர்கள் வீட்டிலிருந்து வேலைக்குப் போவதற்கு இப்போது ஒருவரும் இல்லை என்பது.

வழக்கமாக விருந்தாளிகளை வரவேற்பதற்கான அறையில் கடிகாரம் ஏழு மணி அடித்தது. பள்ளிக்கூடம் போக ஆயத்தம் செய்ய நேரம் ஆகிவிட்டது.

''உடம்பெல்லாம் ஒரே தளர்ச்சி!'' என்ருள் பிக்கா.

''நீ படுத்திரு, அம்மா. நானே தேநீர் தயாரிக்கிறேன்'' என்ருள் குல்தூம்.

''நீ அகாலத்தில் எங்களை விட்டுப் போய்விட்டாய், பஹ்மூத்!'' என்று மறுபடி அழத் தொடங்கிளுள் பிக்கா.

குல்தூம் முகம் சுளித்தாள்.

''கண்ணீரால் அப்பாவை மீட்டும் உயிர்ப்பிக்க முடியும் என்றால் நானும் உன்னோடு சேர்ந்து அழுதிருப்பேன், அம்மா. இனி நாம் பிழைப்பு நடத்துவது எப்படி?'' என்றாள்.

பிக்கா தலையை ஆட்டினாள்.

''ஆமாம், என் சின்னக் கண்ணே, என் சமர்த்து மகளே! அப்பாவின் பெட்டியை எடுத்து வா'' என்று மகளை ஏவினாள்.

குல்தூம் தகப்பனாரின் சிற்பக்கூடத்துக்குப் போனாள். சிற்றுளிகள், சிறு சுத்தியல்கள், இடுக்கிகள் முதலிய கருவிகளைப் பார்வையிட்டுப் பெரு மூச்சு விட்டாள். தகப்பனார் தாம் செய்த நகைகளை வைத்திருந்த பெட்டியைத் தேடி எடுத்துத் தாயாரிடம் கொண்டு கொடுத்தாள். பெட்டியில் சில வெள்ளி விரல் காப்புகளும் கண்ணாடிப் ''போலி இரத்தினக் கற்கள்'' பதித்த தங்க முலாம் பூசிய மோதிரங்களும் மூன்று ஜோடி கம்மல்களும் மட்டுமே இருந்தன.

பிக்கா பெட்டியில் இருந்தவற்றைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''இவை நமக்குக் கொஞ்ச நாட்களுக்குத்தான் போதும்'' என்று சிந்தனையுடன் சொன்னாள்.

''அப்புறம் என்ன செய்வது?'' என்று கேட்டாள் மகள்.

தாயார் அவள் பக்கம் திரும்பி, ''ஒருவேளை, அப்பாவின் கருவிகளை விற்போமா? நீ மட்டும் ஆண் குழந்தையாய் இருந்தால், எல்லாக் கருவிகளையும் உனக்காகப் பாதுகாத்து வைத்திருப்பேன்.''

குல்தூம் கலவரத்துடன் தாயாரை நோக்கினாள். அவளுக்கு இந்தச் சொற்கள் பிடிக்கவில்லை.

''அம்மா, கருவிகளை விற்காதிருப்போம். இவை அப்பாவின் நினைவுச் சின்னங்கள் ஆயிற்றே!'' என்று பணிவுடன் கெஞ்சினாள்.

இதற்கு ஒரு வருடம் கழிந்துவிட்டது. குல்தூம் நான்காம் வகுப்பிலிருந்து தேறி ஐந்தாம் வகுப்புக்குப் போய்விட்டாள்.

பள்ளிக்கூடத்தில் பட வரைவு வகுப்பு. குல்தூம் கரும் பலகை அருகே நின்றாள். குபச்சீச் சித்திரக் கோலம் வரையும்

படி ஆசிரியர் அவளிடம் சொன்னார். செதுக்குச் சித்திரக் கலைஞர்கள் மூன்று வகையான பட வரைவுகளைக் கையாளுவது வழக்கம் என்பது குபச்சீயில் எல்லோருக்கும் தெரிந்ததே. ஒன்று ''மர்ஹராய்'' எனப்படுவது. இதன் அர்த்தம் ''அடர்ந்த புதர்''. பூக்களும் இலைகளும் சிக்கலாகப் பின்னியது இந்தப் படம். பூக்கள் இல்லாத நீள்வட்ட வடிவானது ''தூத்தா''. சித்திர வேலையின் நடுவில் முத்திரை போல அமைந்தது ''ஷம்கா''.

இவற்றில் குல்தூம் எதைத் தெரிந்தெடுப்பாள்? சந்தேகம் இல்லாமல் ''தூத்தா'' சுளுவானது. நேரான தண்டு வரைந்து, அதிலிருந்து சுருண்டு செல்லும் சிறு கிளைகளையும் அவற்றில் சிற்றிலைகளையும் தீட்ட வேண்டும், அவ்வளவுதான்.

குல்தூம் வரையத் தொடங்கியதும் மாணவர்கள் கரும் பலகையை உற்றுப் பார்க்கலானார்கள். அவள் வரைய வரைய அவர்களுடைய ஆச்சரியம் அதிகமாயிற்று. எல்லாவற்றிலும் சிக்கலான ''மர்ஹராய்'' படத்தைக் குல்தூம் அனுயாசமாக, தங்கு தடையின்றி வரைந்தாள். தூப்சீ ஆசான் என்னும் புகழ் பெற்ற குபச்சீக் கலைஞரின் நேர்த்தியான சித்திரக் கோலத்தை வியப்பூட்டும் துல்லியத்துடன் வரைந்து விட்டாள் அவள்.

வகுப்பு முடிந்ததும் சக மாணவன் மனுப் குல்தூமிடம் வந்தான்.

''நீ கேட்ட சாமானைக் கொண்டுவந்திருக்கிறேன்.''

''நன்றி.''

மனுப் கொண்டுவந்திருந்தது சிகரெட்டுப் பெட்டி. குல்தூம் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்து, சிகரெட்டுப் பெட்டி மேலிருந்த சித்திரக் கோலத்தை விரைவாகப் பெயர்த்து வரைந்து கொண்டாள்.

''இது உனக்கு எதற்காக என்பது எனக்குப் புரியவில்லை. எத்தனை சித்திரக் கோலங்களை நீ பெயர்த்து வரைந்து கொண்டிருக்கிறாய்!'' என்று விளங்காமை தோன்றத் தோள்களைக் குலுக்கினான் மனுப்.

''கற்றுக்கொள்கிறேன்'' என்று புன்னகை செய்தாள் குல்தூம்.

தேர்ந்த கலைஞர்கள் வரைந்த சித்திரக் கோலங்களில் குல்தூம் வெகு காலமாகவே அக்கறை காட்டி வந்தாள். ஒரு கலைஞரின் கைவேலைக்கும் வேறு கலைஞரின் வரைவுக்கும் உள்ள நுட்பமான வேறுபாடுகளை இப்போது அவளால் பிரித்துக் காண முடிந்தது. வரைவதற்கு அவ்வளவாக நேரம் கிடைப்பதில்லை அவளுக்கு. அவளுடைய தாயார் ஓயாமல் நோய்ப்பட்டாள். பள்ளிப் படிப்போடு கூடவே வீட்டைத் துப்புரவு செய்வது, சமைப்பது, பால் கறப்பது, எல்லாவற்றையும் குல்தூம் தான் சமாளிக்க வேண்டியிருந்தது.

தகப்பனார் காலமான பிறகு சிறுமி குல்தூம் மாறிப்போய் விட்டாள். முன்பும் அவள் வளவளவென்று பேசுவதில்லைதான். இப்போதோ, அவள் வாயிலிருந்து வார்த்தை கிளம்புவதே அரிதாகிவிட்டது. முன்பு குல்தூம் இருட்டைக் கண்டு அஞ்சினாள், அவள் தனியாக இருப்பதே அரிதுதான். ஒன்று, தகப்பனாருடன் அவருடைய சிற்பக்கூடத்தில் உட்கார்ந்திருப்பாள், இல்லாவிட்டால் தாயாருக்கு வீட்டுக் காரியத்தில் ஒத்தாசை செய்வாள். இப்போதோ, வீட்டு வேலைகளை எல்லாம் முடித்த பின் விருந்தினருக்கான முன்னறைக்குப் போய்விடுவாள். அங்கேயே தூங்குவாள். ஆரம்பத்தில் தாயார் இதனால் கவலைப்பட்டாள். ஒரு தடவை சாவித் துளை வழியாக அறைக்குள் பார்க்கவும் செய்தாள். ஆனால் விசேஷமாக எதுவும் அவளுக்குத் தென்படவில்லை. குல்தூம் வீட்டுப் பாடங்களைச் செய்தாள், அப்புறம் படுக்கையில் படுத்துக்கொண்டு விளக்கை அணைத்துவிட்டாள்.

ஆனால் முற்றிலும் வியப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று தொடங்கியது. காலஞ்சென்ற பஹ்ரூதின் நகைப்பெட்டி மாயச் சக்தி உள்ளதுபோலத் தோன்றலாயிற்று. திங்கட்கிழமையன்று பிக்கா அந்தப் பெட்டியிலிருந்து ஒரு ஜோடிக் கம்மல்களை எடுத்துக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொடுப்பாள். மறு வாரம் பார்க்கும்போது அதே பெட்டியில் புதிய கம்மல்களோ மோதிரமோ இருக்கும். இந்த மாயத்தைப் பற்றி பிக்கா ஒருவரிடமும் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. சொன்னால் சைத்தான்கள்

குடும்பத்துக்கு உதவுவதை நிறுத்திவிடுவார்களோ என்று பயந்தாள். இது சைத்தான்களின் வேலைதான் என்பதில் மட்டும் அவளுக்குச் சந்தேகமே ஏற்படவில்லை.

''மாய'' நகைப்பெட்டி தாயாரையும் பெண்ணையும் காப்பாற்றி வந்தது. கிராமத்தின் எல்லாக் குடும்பத்தாரையும் போலவே அவர்களும் வசந்த காலத்தில் வீட்டைச் செப்பனிட முடிந்தது.

மே தின விழாவுக்கு முன்பு, கூட்டுறவுச் சங்க அலுவலகம் சிறந்த செதுக்குச் சித்திரப் போட்டி ஒன்றை அறிவித்தது. பரிசு பெறும் பொருள்கள் வெகுவாக மதிக்கப்படும். அவை கிராமப் பொருட்காட்சிசாலையில் கட்டாயமாக வைக்கப்படும். மனுபின் தகப்பனார் கூட்டுறவுச் சங்கத் தலைவர். ஆகவே இந்தப் போட்டியைப் பற்றி விவரமாகத் தெரிந்து சொல்லும்படி குல்தூம் அவனைக் கேட்டுக்கொண்டாள்.

''உனக்கு இது எதற்காக?'' என்று ஆச்சரியப்பட்டான் மனுப்.

''வேண்டும்!'' என்று பிடிவாதமாகத் தலையை ஆட்டினாள் குல்தூம்.

''எதற்காக என்று அப்பா என்னைக் கேட்டால் என்ன சொல்வது?''

''உனக்கு இது புரியவில்லையா என்ன? நமது பள்ளிச் செய்தித்தாளுக்காக வேண்டும் இந்த விவரம். அப்படியே சொல்லு.''

மனுப் குல்தூம் சொன்னபடியே செய்தான். பள்ளிச் செய்தித்தாளிலும் இந்தப் போட்டி பற்றிய குறிப்பு வெளியாயிற்று.

மீண்டும் நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறந்தன.

ஒரு நாள் குல்தூம் வீட்டிலிருந்து வழக்கத்துக்கு முன்னரே புறப்பட்டாள். பள்ளிக்கூடம் போகும் வழியில் புகழ்பெற்ற கலைஞர் தூப்சி ஆசானின் வீட்டுக்குள் சென்றாள்.

முதிய செதுக்குச் சித்திரக் கலைஞருக்குப் பணிவாக வணக்கம் தெரிவித்தபின், அழகிய சித்திர வேலை செய்த வெள்ளிக் கங்கணம் ஒன்றை அவரிடம் நீட்டினாள்.

''அப்பாவின் நகைப்பெட்டியில் இதைக் கண்டெடுத்தேன். இதைப் போட்டிக்குக் கொடுக்கலாமா?'' என்ருள்.

தூப்சி ஆசான் அந்த நகையைக் கூர்ந்து நோட்டமிட்டார். பிறகு குல்தூமைத் துருவி ஆராய்பவர்போல உற்றுப் பார்த்தார்.

''இது பஹ்மூத் ஆசானின் கைவேலை அல்ல, மகளே'' என்ருர்.

''அப்படியா? ஒருவேளை அவ்வளவு நன்ருகச் செய்யப்படவில்லையோ, முரட்டு வேலையோ? சித்திரக் கோலம் அழகாய் இல்லையோ?'' என்று கேட்கும்போதே குல்தூம் முகஞ்சிவந்தாள்.

முதிய கலைஞர் தலை அசைத்தார்.

''இதைச் செய்த கலைஞர் தேர்ச்சி உள்ளவர், சின்னப் பெண்ணே. உன் தகப்பனுரை நான் நன்ருக அறிந்திருந்தேன். அவருடைய வலது கையில் இரண்டு விரல்கள் குறைவு, போரில் அவற்றை இழந்துவிட்டார். ஆயிரம் பொருள்களுக்கு நடுவில் அவருடைய கைவேலையை என்னல் சட்டெனக் கண்டுகொள்ள முடியும்'' என்ருர்.

மூக்குக் கண்ணுடிக்கு மேலாகக் குல்தூம் மீது பார்வை செலுத்திஞர் தூப்சி ஆசான். அவள் மன வருத்தமும் கிளர்ச்சியும் அடைந்திருப்பதைக் கண்டார். கவுனின் கழுத்துப் பட்டை விளிம்பைத் தடுமாற்றத்துடன் விரல்களால் நெருடிக்கொண்டிருந்தாள் அவள்.

''இந்தக் கங்கணத்தில் சிறந்த கலைஞனின் கைவேலை தென்படுகிறது. நீ இதை வைத்துவிட்டுப் போகலாம்'' என்ருர் தூப்சி ஆசான்.

மன மகிழ்ச்சியால் குல்தூமின் முகம் சிவப்பேறியது.

''வணக்கம். நான் போய்வருகிறேன். இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்துக்கு நேரமாகி விடும்'' என்ருள்.

தூப்சி ஆசானே, அவள் கொண்டு வந்த கங்கணத்தைக் கூர்ந்து பார்த்தவாறு இன்னும் வெகு நேரம் உட்கார்ந்திருந்தார்.

''வரிகள் எவ்வளவு நேராக, நுட்பமாக இருக்கின்றன! பூக்கள் உயிருள்ளவை போல இருக்கின்றன, என்னோடு பேசுகின்றன. மற்றக் கலைஞர்களுக்குக் கட்டாயம் காட்ட வேண்டும்'' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார். பின்பு மனைவியிடம் ''நான் காலை ஆகாரம் சாப்பிடப் போவதில்லை. அவசரமாக வேலைக்குப் போக வேண்டும்!'' என்று உரக்கச் சொன்னார்.

கங்கணத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

போட்டியில் பரிசு பெற்ற பொருள்களில் வெள்ளிக் கங்கணமும் இருந்தது. ''செய்தவர் யார் என்று தெரியவில்லை'' என்ற குறிப்புடன் அது காட்சிச்சாலையில் வைக்கப்பட்டது.

இதற்குச் சற்று பின்னர் நடந்தது பின்வரும் நிகழ்ச்சி.

...ஒரு நாள் நடு நிசிக்குப் பிறகு, தூப்சி ஆசானின் வீட்டில் கிராம முதியவர்கள் வழக்கம் போலக் கூடினார்கள். திடீரென்று குதிரைக் குளம்பொலி கேட்டது. பாய்ந்து வந்த குதிரைமேல் சேணங்கூட இல்லாமல் உட்கார்ந்து மேய்ச்சல் தரையிலிருந்து வந்தான் மனுப். அவன் சட்டெனத் தரையில் குதித்து, ''ஷேக்கின் சமாதியில் மறுபடி விளக்கு எரிகிறது'' என்று மூச்சு திணறச் சொன்னான்.

''இதற்காகவா குதிரையை இப்படி விரட்டினாய்?'' என்று கூட்டுறவுச் சங்கத் தலைவரும் அவனுடைய தந்தையுமான ஹஸான் கேட்டார்.

''இந்தத் தகவல் உங்கள் அக்கறைக்கு உரியதாய் இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம்'' என்று சமாதானம் கூறினான் மனுப். ''ஏதோ ஒரு பயங்கர மிருகம் உள்ளே ஓடியதைப் பையன்கள் பார்த்தார்களாம்'' என்றான்.

''ஷேக்கின் சமாதிக்கு உள்ளே போய் அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும்'' என்று தயக்கத்துடன் சொன்னார் தூப்சி ஆசான்.

கிழவர்களின் முகங்களில் கவலை படர்ந்தது.

''ஆமாம். ஷேக்கின் கல்லறை பற்றிய இந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேளை வந்துவிட்டது. அங்கே விளக்கு எரிவதாக இதற்கு முன்பும் நான் கேள்விப்பட்டேன். போவோமா, நல்லவர்களே?'' என்று கேட்டார் தலைவர் ஹஸான்.

''துறவியின் ஆன்மாவுக்கு இடைஞ்சல் செய்வானேன்?'' என்று தமக்குத் தாமே போல முணுமுணுத்துக் கொண்டார் முதிய கலைஞர் அலீ ஆசான்.

''போகலாம், வாருங்கள்'' என்று தீர்மானமாகக் கூறி, முக்கி முனகிக் கொண்டு விரிப்பிலிருந்து எழுந்தார் தூப்சி ஆசான்.

* * *

கற்பாங்கான தரைமேல் கொந்தளித்துப் பாய்ந்த ஆற்றின் முழக்கம் கீழே கணவாயிலிருந்து வந்தது. மஜுப் இடுகாட்டின் வாயிலில் குதிரையை நிறுத்திவிட்டுத் தகப்பனாரின் கையைப் பிடித்துக்கொண்டான். அவன் காலடியிலிருந்து பறந்தது இரவுப் பறவை. மஜுப் திகிலால் அனேகமாகக் கூச்சலிடப் பார்த்தான்.

அதோ தெரிந்தது ஷேக்கின் சமாதி. ஆம், முக்கோணத் துவாரத்தின் வழியே சந்தேகமில்லாமல் வெளிச்சம் தென்பட்டது.

தூப்சி ஆசான் உடன் வந்தவர்களை விட்டுவிட்டு உற்றுக் கேட்டார்.

சிறு சுத்தியல் விட்டு விட்டு அடிக்கும் ஓசை கல்லறைக்கு உள்ளே இருந்து தெளிவாகக் காதில் பட்டது.

தூப்சி ஆசான் கற்சுவரில் இருந்த இடுக்கோடு ஒண்டியபடி உள்ளே என்ன நடக்கிறது என்று கூர்ந்து பார்த்தார்.

மெழுகுவத்தியின் மங்கிய வெளிச்சத்தில் ஒரு பெண் கரடித்தோல் மேல் உட்கார்ந்திருப்பதை அவர் கண்டார். அவள் கையில் வெள்ளி மின்னியது. அவள் வேலை செய்துகொண்டிருந்

தாள். அந்தப் பெண் வேறு யாரும் அல்ல, காலஞ்சென்ற பஹ்ரூதின் மகள் குல்தூம்தான்.

தூப்சி ஆசான் வெகு நேரம் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

''உஷ்ஷ்... தாயாருக்கு இடைஞ்சலாய் இருக்க வேண்டாம் என்று இங்கே வேலை செய்கிருள்'' என்று அப்புறம் சொன்னுர்.

எல்லோரும் சந்தடி செய்யாமல் திரும்பிப் போய் விட்டார்கள்.

மறு நாள் காலையில் தூப்சி ஆசான் பொருட்காட்சிசாலைக்குப் போனுர். அங்கே குபச்சீ கிராமத்தின் சிறந்த கலைஞர்கள் செய்த பொருள்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த அழகிய கங்கணத்தின் பக்கத்தில் ''செய்தவர் யார் என்று தெரியவில்லை'' என எழுதப்பட்ட குறிப்பு இருந்தது. தூப்சி ஆசான் அதை அகற்றிவிட்டு ''மாணவி குல்தூம் செய்தது'' என்ற குறிப்பை வைத்தார்.



வி. கிராப்பீவின்

மழையில் மின்னிய விண்மீன்கள்

மழை வெகு நேரமாகப் பெய்துகொண்டிருந்தது.

தெரு விளக்குகளின் பிரதிபிம்பங்கள் வாணலியில் முட்டையின் மஞ்சள் கருக்கள் போலத் தார் ரோடில் பெருகிப் பரவின.

மரங்களும் வீடுகளும் சுற்றுச் சுவர்களும் பத்திரிகைப் பெட்டிக் கடைகளும் சிறு சதுக்கத்தின் நுழைவாயிலில் சுண்ணச் சாந்திஞல் அமைத்திருந்த கொம்பு ஊதுபவர்களின் உருவச் சிலைகளும் இந்த மாதிரிப் பருவ நிலைக்குப் பழகிப்போயிருந் தன. அவை தொப்பலாக நனைந்து விட்டிருந்தன. இனி எவ் வளவு நனைந்தாலும் அவற்றுக்கு ஒன்றுதான். அவை தம் தம் வேலையில் தொடர்ந்து ஈடுபட்டன. மரங்கள் கிளைகளை அசைத் தன. சுற்றுச் சுவர்கள் மாஸ்கோ ஸர்க்கஸ் வந்துவிட்டதை அறிவிக்கும் நனைந்த விளம்பரங்களைத் தாங்கி நின்றன. வீடு களின் முன் கதவுகள் திறந்து திறந்து மூடிக்கொண்டன. அவற் றின் ஜன்னல்கள் பல நிற ஒளி காட்டின. கொம்பு ஊதுபவர் கள் கொம்புகளை உதட்டருகே வைத்துக்கொண்டு, ஏதேனும் நேர்ந்தால் ஊதத் தயாராக நின்ருர்கள்.

பத்திரிகைப் பெட்டிக் கடைகள் மட்டுமே எதுவும் செய்யாதிருந்தன. அவை மூடியிருந்தன. அவற்றின் இருண்ட கண்ணுடிகள் மனத்தாங்கலுடன் பளபளத்தன.

டிராம் வண்டிகளுக்கோ மழை பிடித்திருந்தது. மழையால் கழுவப்பட்ட டிராம் வண்டிகள் அப்போதுதான் தொழிற்சாலை யிலிருந்து வந்தவை போலப் பளிச்சிடும் சிவப்பு விலாக்களுடன் திகழ்ந்தன. அவை தனி உற்சாகத்துடன் நகரில் ஓடின, களி பொங்க மணி அடித்தன, கம்பிகளின் ஒவ்வோர் இணைப்பிலும் மரகதப் பொறிகளைச் சிதறின. அவை பொறிகள்கூட இல்லை, பச்சைத் தழல் துண்டுகள். டிராம் வண்டிகளின் நனைந்த முகடு கள் மேலும் பளிச்சிடும் தார் ரோடுமீதும் சிதறிச் சீறின அவை.

கொம்பு ஊதுபவர்களின் சுண்ணச் சாந்துச் சிலைகள் காவல் புரிந்த சிறு சதுக்கத்துக்கு வந்து நின்றது மூன்று பெட்டிகள்

கொண்ட டிராம் வண்டி. பயணிகள் சிலரே இருந்தார்கள். பின் பெட்டியில் இருந்த கண்டக்டர் மாது, மோவாயை மார் பின் மேல் வைத்தவாறு தூங்கி வழிந்தாள்.அவள் அனுபவம் மிக்க கண்டக்டர். உறங்கும் போதும் அவளுடைய கடுமையான தோற்றம் அப்படியே இருந்தது. பளிச்சிடும் பூட்டும் நீல டிக்கட் சுருள்களும் கொண்ட பை அவள் மார்புமீது தொங்கியது. பக்கப் பார்வைக்கு, அவள் அந்தப் பையை நோக்குவது போலத் தோன்றியது.

பெட்டிக்குள் ஒரு பையன் வந்ததுமே அவள் விழித்துக் கொண்டாள்.

''டிக்கட் வாங்கிக்கொள்! சீக்கிரம்....''

பையன் சட்டைப் பையில் கையை விட்டான். அப்புறம் காற்சட்டைப் பைகளில் துருவித் தேடினான். டிராம் வண்டிக் கட்டணமான மூன்று கொப்பேக்குகள் அவனுக்குக் கிடைக்க வில்லை. அவன் இறங்குவதற்காக மௌனமாகத் திரும்பினான்.

''இந்தா, நில்லு....''

கண்டக்டர் மாதின் தூக்கக் கலக்கம் அடியோடு போய் விட்டது. அவள் பையனைப் பார்வையிட்டு, அவன் நெடு நேரம் மழையில் அலைந்திருக்கிறான் என்று கண்டுகொண்டாள். அவன் தலைமயிர் நீண்ட கற்றைகளாக ஒட்டிக் கொண்டிருந்தது. மெல்லிய பின்னல் போலக் கழுத்தோடு அப்பியிருந்தது. பின்ன லிலிருந்து சொட்டிய துளிகள் மழையால் உப்பிய சட்டையின் கழுத்துப் பட்டைக்குள் வழிந்துகொண்டிருந்தன. ஜோடுகளுக் குள் தண்ணீர் சளப்பிட்டது என்று சொல்லவே வேண்டியதில்லை.

''இந்தா நில்லு! அடேயப்பா, பெருமிதத்தைப் பாரேன்! ராத்திரி வேளையில் எங்கே போகிறாய்?'' என்று கத்தினாள் கண்டக்டர்.

''ஸர்க்கஸுக்கு'' என்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான் பையன். அவன்வரையில் எல்லாம் ஒன்று தான். இந்த டிராம் ஸர்க்கஸ் வழியாகப் போகுமா என்பதுகூட அவனுக்குச் சரியாக நினைவில்லை.

கண்டக்டர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே டிக்கட் கிழித்தாள்.

''இந்தா, வாங்கிக்கொள். இல்லாவிட்டால் பரிசோதகரிடம் மாட்டிக்கொள்வாய்....''

பையன் ஈர விரல்களால் டிக்கட்டை வாங்கிக்கொண்டான். அவன் நன்றி சொல்லவில்லை. மறந்து விட்டானோ, அல்லது விரும்பவில்லையோ, தெரியவில்லை. அவன் நின்று, வெளியே மழை அடித்துப் பெய்வதைக் கண்களைச் சுரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். மழைக்கு அவன் அஞ்சவில்லை. அவன் டிராமில் ஏறியது வீட்டை விட்டு வெகு தொலைவில் போவதற்காகத் தான்.

எங்கே? எங்கே வேண்டுமானாலும். மனத்தாங்கல் அவனை விரட்டியது.

டிராம் மேலே சென்றது.

கண்டக்டர் மறுபடி மோவாயை மார்புமேல் சாய்த்துக் கொண்டாள். நீல டிக்கட் சுருள்கள் கொண்ட பையை அவள் நோட்டமிடுவதுபோல மறுபடி தோன்றலாயிற்று.

டிராம் விளக்குகளின் வெளிச்சம் நடுங்கிற்று. மழை வேளையில் விளக்குகள் எப்போதுமே மங்கலாகத்தான் எரியும். கடைகளின் குறிப்பலகை விளக்குகளின் பச்சை, சிவப்பு ஒளி பட்டு டிராமின் நனைந்த கண்ணடிகள் வழியே பலநிறப் புள்ளிகள் விரைந்து பெருகின. அந்தக் காட்சி அழகாய் இருந்தது, ஆனால் பையன் பல நிறப் புள்ளிகளைப்பற்றி நினைக்கவே இல்லை. பையன் கண்களைச் சுரித்தவாறு இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உதட்டோரங்கள் தொங்கின. அவன் மனமோ, முற்றிலும் வேறு விஷயத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

பிறகு அவனுக்கு உட்கார விருப்பம் உண்டாயிற்று. தான் களைத்துவிட்டதை அவன் உணர்ந்தான். மனத்தாங்கல் உள்ளவன் சீக்கிரம் களைப்படைவது சகஜம். நனைந்து கனக்கும் சட்டையைவிடப் பல மடங்கு வலுவாகத் தோள்களை அழுத்தும்

மனத்தாங்கல். சட்டையை வேண்டுமானால் கழற்றிப் பிழிந்து கொள்ளலாம். மனத்தாங்கலை என்ன செய்வது?

பையன் டிராமில் போக நிச்சயித்தான். டிராம் போய்க் கொண்டிருக்கும் வரை அதில் சவாரி செய்வது என்று முடிவு செய்தான். அப்புறம் என்ன ஆகும் என்பது அவனுக்கே தெரிய வில்லை.

வண்டியில் காலி இடங்கள் நிறைய இருந்தன. ஆனால் பெரியவர்களின் பக்கத்தில் உட்காரப் பையன் விரும்பவில்லை. அவர்கள் கோபத்துடன் உதட்டைக் கடிப்பார்கள், முகஞ் சுளிப்பார்கள், தொப்பலாக நனைந்த பையனிடமிருந்து விலகி அப்பால் நகர்ந்து கொள்வார்கள்.

ஒரு பெஞ்சில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்தாள் ஒரு சிறுமி.

அவளுடைய பின் கழுத்தில் வெளிர் மயிர்ச் சுருள்களும், நுனியில் கலைந்த சிறு பின்னல்களும் தெரிந்தன. சாம்பல் நிறத் தலைமுடி மடக்கிவிடப்பட்டிருந்தது. மழைத்துளிகள் அதன் மேல் கரும் புள்ளிகள் இட்டிருந்தன.

பையன் அந்த பெஞ்சின் பக்கத்தில் போய், சுளித்த முகத் துடன் சிறுமியை லேசாகப் பார்வையிட்டான். அவளும் அழை யாது வந்த நனைந்த பையனைப் பார்ப்பதற்காக ஜன்னல் பக்கத்திலிருந்து திரும்பினாள். எதிர்பாராமையால் பையன் அவளுக்கு ''வணக்கம்'' என்று அனேகமாகச் சொல்லத் தெரிந் தான்.

அவள் அறிமுகமான பெண்.

அப்படி நிரம்ப அறிமுகமானவள் அல்லதான். பையனுக்கு அவளைத் தெரியும். அவளுக்கு அவனை ஒருகால் தெரியாது போலும்.

இலையுதிர் காலத்திலும் குளிர்காலத்திலும் வசந்தகாலத் திலும் அவன் அனேகமாக நாள்தோறும் அவளைச் சந்தித்திருந் தான்.

அவன் இருபத்து ஒன்றுவது பள்ளிக்கூடத்தில் படித்தான். அவள் முப்பத்து இரண்டாவது பள்ளிக்கூடத்தில் படித்தாள் போலும். அவளும் ஆறும் வகுப்பு மாணவிதான் என்று பட்டது. குறைந்த பட்சம் இருவருடைய வகுப்புக்களும் ஒரே சமயத்தில் முடிந்தன. பையன் ஸதோவயா வீதி வழியே வீடு திரும்புவான், அவள் சேகவ் வீதி வழியாகத் திரும்புவாள். பியர்வமாய்ஸ்க் காயா வீதியில் இருவரும் சந்திப்பார்கள்.

பையன் ஆரம்பத்தில் அவளைக் கவனிக்கவில்லை. சாதாரணப் பெண் அவள். அடிக்கடி சந்தித்ததாலும், சுருண்டு படுத்த பூனையை ஒத்த கறுப்பு மென்மயிர்த் தோல் தொப்பியை அவள் அணிந்திருந்த காரணத்தாலுமே அவளை அவன் நினைவில் வைத் திருந்தான். அவள் வேகமாக நடக்கையில் அந்தப் பெரிய தொப்பி அவள் நெற்றிமேல் ஊர்வது பார்க்க வேடிக்கையாய் இருக்கும். அவளோ, அனேகமாக எப்போதுமே அவசரப்படு வாள். லேசாக முன்னே சாய்ந்தவாறு விடுவிடுவென்று நடந்த படியே தன் தோழிகளைப் பொறுமை இன்றிப் பார்ப்பாள். எங்கே அவ்வளவு அவசரமாகப் போவாளோ? தொப்பிக்கு அடியிலிருந்து சிறு வைக்கோல் சுருள்கள் போலக் கேசம் வெளியே துருத்தி, கறுப்பு மென்மயிருடன் பின்னிப்பிணைந்து கொள்ளும். மொத்தத்தில் சர்வ சாதாரணமான பெண். பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் அவளைக் காண் பது பையனுக்கு வழக்கம் ஆகிவிட்டது, அவ்வளவுதான். தெரு மூலையில் கண்ணுடி அறைக்குள் மிலீஷியாக்காரரையோ, விவ சாய விஞ்ஞானக் கல்லூரிக் கட்டிடத்தில் கடிகாரத்தையோ காண்பது அவனுக்கு வழக்கம் ஆகிவிட்டது போலத்தான் இது வும். ஒருவேளை அப்படி இல்லையோ.... குறைந்த பட்சம், கடி காரம் அகற்றப்பட்டுவிட்ட போது பையனுக்கு எவ்விதக் கலக் கமும் ஏற்படவில்லை. பியர்வமாய்ஸ்க்காயா வீதியில் இந்தப் பெண்ணை ஒரு வாரம் முழுவதும் சந்திக்காதபோதோ, அவன் மனத்தில் ஏதோ கலவரம் உண்டாயிற்று. மறுபடி அவள் எதிர்ப் பட்டதுமோ, என்ன காரணத்தாலோ மனதில் களி பொங்கியது.

அப்போது பையனுக்கு எரிச்சலாயிருந்தது. அவன் முகம் சிவந்தது. பக்கத்தில் வந்துகொண்டிருந்த நண்பன் ஸெர்யோஷா தெர்யாபினைக் கீழ்ப்பார்வையாகப் பார்த்தான். இனிமேல் அந்தப் பெண்ணை ஒரு தரங்கூடப் பார்ப்பதில்லை என்று தீர்மானித்தான். எதிர்ப்படும் பெண்களை எல்லாம் நோக்கிப் பரக்க விழிப்பது அவனுக்கு ரொம்பத்தான் வேண்டுமாக்கும்!

ஆனால் மனித சுபாவம் மிகவும் அசட்டுத்தனமாக அமைந்தது. ஏதேனும் தீர்மானம் செய்ய வேண்டியதுதான் தாமதம், அதற்கு நேர் எதிரிடையாக நடக்க விருப்பம் உண்டாகிறது.

ஒரு முறை மார்ச் மாதக் கடைசியில் சரியான வசந்த காலம் தொடங்கிவிட்டபின், திடீரென்று தென்மேற்குக் காற்று வானத்தில் சாம்பல் நிற மேகங்களைக் கொண்டு நிறைத்தது. பிசுபிசுப்பான வெண்பனி பெய்யத் தொடங்கிற்று. இடைவிடாமல் பெய்த வெண்பனி பாப்ளார் மரங்களை வளைத்தது, கருநீர்க் குட்டங்களை மூடி நிறைத்தது, கம்பிகளில் ஒட்டிக் கொண்டது. வெண்பனிப் பந்துகள் உருட்டுங்கள் என்று அதுவே கேட்பது போலிருந்தது.

அவர்கள் பள்ளிக்கூடத்திலிருந்து புறப்பட்டதும் ஸெர்யோஷா, ''தயாராக நில்லு! எதிரி நேரே வழியில் வருகிறாள்!'' என்று பற்களின் ஊடாகச் சொன்னான்.

கறுப்பு மென்மயிர்த் தோல் தொப்பி அணிந்த 'எதிரி' அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஸெர்யோஷாவின் சூழ்ச்சித் திட்டங்கள் பற்றி ஒன்றுமே அறியாமல் வழக்கம் போலவே பரபரப்புடன் நடந்தாள் அவள்.

ஸெர்யோஷா வெண்பனி எடுப்பதற்காகக் குனிந்தான். பையனும் குனிந்தான். வெண்பனியை அள்ளி உருட்டி சடைத் தொப்பிமேல் அடித்தால் எப்படி இருக்கும்! அப்போது அவள் புரிந்துகொள்வாள், ஆள் யார் என்று.... அதற்குள் ஸெர்யோஷா இடது கண்ணைச் சுருக்கி, வெண்பனி உள்ள கையைப் பின்னே கொண்டு போனான். அவன் கையும் பார்வையும் குறி தவறாதவை. ஆனாலும் எப்படி நிகழ்ந்தது இது? பையன் ஒரு நொடி

யில் நிமிர்ந்து நின்று, தற்செயலாகப் போல அந்தப் பெண்ணை மறைத்துவிட்டான்.

ஸெர்யோஷா எறிந்த வெண்பனி பையன் முகத்தில் சளப் பென்று அப்பியது. அவன் ஸெர்யோஷாவின் பக்கம் திரும்பி, ''கவனமாகப் பார்க்க வேண்டும்'' என்று கடுகடுத்தான்.

ஸெர்யோஷாவுக்கோ எரிச்சல் மண்டியது. இப்படி நேரும் என்று அவன் கண்டானு? அவன் பதிலே பேசவில்லை....

கோடைகாலம் வந்தது. பையனுக்கு அந்தப் பெண் எதிர்ப் படுவது நின்றுவிட்டது. அவன் அவளை மறந்தும் விட்டான்.

மயிரடர்ந்த பூனையை ஒத்த தொப்பி இல்லாவிடினும் அவளை இப்போது சட்டென அடையாளம் கண்டுகொண்டான் பையன்.

பையன் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். அவன் ஜாக்கி ரதையாகத்தான் உட்கார்ந்தான். என்ருலும் பெண்ணின் மடி மேல் கிடந்த குடையைக் காலால் இடறிவிட்டான். முகத்தைச் சுளித்து மறுபுறம் திரும்பியவன் அசட்டுப் பிசட்டென்று தன் ஈரச் சட்டைக் கையால் அவளுடைய மழைக் கோட்டை ஈர மாக்கிவிட்டான்.

பையன் பரபரப்புடன் தன் முழங்கையை உடம்போடு சேர்த்து வைத்துக்கொண்டு பெஞ்சின் மறு கோடிக்கு நகர்ந்த தைக் கண்டதும் அந்தப் பெண், ''பயப்படாதே. இது நீர் சுவருதது'' என்று சொன்னுள்.

''இங்கே ஒருவரும் பயப்படவில்லையே'' என்று முணு முணுத்துவிட்டு தரையைப் பார்வையிடலானுன் பையன்.

மெல்லிய கம்பிகளால் ஆன கிராதி தரைமேல் பாவியிருந் தது. நனைந்த டிக்கட்டுகள் அதில் ஒட்டிக் கொண்டிருந்தன....

''குடை இல்லாவிட்டால் மோசந்தான்'' என்று தணிந்த குரலில் சொன்னுள் அந்தப் பெண்.

அவளுடைய குரலில் பெண்களுக்கு உரிய இரக்கம் இல்லை. அரைகுறை அனுதாபம்தான் இருந்தது.

''நலம் என்ன இருக்கிறது!'' என்று சற்று யோசித்தபின் பதில் சொன்னுன் பையன்.

''மழையோ அடித்துப் பெய்த வண்ணமாய் இருக்கிறது.''

இது தேவையற்ற பேச்சு. அவளுக்கு வார்த்தையாட ஆசையாய் இருந்தது போலும். தவிர, மழை அப்போது அடித்துப் பெய்யவும் இல்லை. சிறு தூறல்தான் தூறிக்கொண்டிருந்தது. பையன் அப்படியே சொன்னான்.

''ஐயோ, 'அடித்துப் பெய்கிறதாம்'.... கதை விடாதே'' என்றான்.

''நானா கதை விடுகிறேன்?'' என்று ரோசப்பட்டாள் பெண்.

''அப்படியே வைத்துக்கொள்ளேன். ஆகாயத்தில் மேகமே இல்லை. வெளியில் ஈரமே இல்லை. நீயும் நனையவே இல்லை'' என்று நொடித்தாள்.

''உனக்கென்ன, கவலையற்ற பாடு. மழைக்கோட்டு, மேற்கொண்டு குடை வேறே. வீட்டு முகட்டுக்கு அடியில் இருப்பது போலத்தான்'' என்று கோபச் சிரிப்பு சிரித்தான் பையன்.

''என் பாடு கவலையற்றதுதான்'' என்று அந்தப் பெண் ஒப்புக்கொண்டாள். ஆனாலும் ஏனோ தெரியவில்லை, பெருமூச்சு விட்டாள். அப்புறம் சொன்னாள்: ''குடை என்னுடையது அல்ல, அம்மாவுடையது. அவள் முன்னால் உட்கார்ந்திருக்கிறாள். அதோ, அங்கே.... நீ ஏன் குடை இல்லாமல் கிளம்பினாய்?''

''என்னிடம் குடை இல்லை. இருந்திருந்தால் இப்போது வீட்டில் உட்கார்ந்திருப்பேன். அதுதான் விஷயம்'' என்று தெளிவாகச் சொன்னான் பையன்.

இதைக் கேட்டு அந்தப் பெண் ஆச்சரியம் அடைந்ததைக் கண்டு பையனுக்குத் திருப்தி உண்டாயிற்று.

''குடை இல்லாமல் மழையில் அலைகிறாய். குடை இருந்தால்... வீட்டில் இருப்பாயா?''

''ஆமாம். என்ன, விளங்கவில்லையோ?'' என்று உதட்டைக் கடித்துக்கொண்டு கண்களைச் சுருக்கிக்கொண்டான் பையன்.

''மொத்தத்திலேயே நீ ஒரு மாதிரியான ஆள்தான்'' என்று கொஞ்சம் மனத்தாங்கலுடன் சொன்னாள் பெண்.

''எந்த மாதிரி ஆள்?'' என்று முறைப்புடன் கேட்டுவிட்டு, ''அப்படி நடந்துவிட்டது என் குற்றமா என்ன?'' என்முன் பையன்.

''எப்படி?''

அந்தப் பெண் கொஞ்சங்கூட உற்சாகம் இல்லாமல், ஏதோ மரியாதைக்காகப் போலத்தான் இந்த வார்த்தையை உச்சரித்தாள். ஆனாலும் அவள் ஆவல் கொண்டிருப்பதைப் பையன் கண்டான்.

அவன் முகம் சுளிப்பதை நிறுத்திவிட்டான்.

ஆனாலும் இவள் கொஞ்சந்தான் அறிமுகமான பெண். ஏதோ நன்கு பழக்கமானவள் போலப் பேசினாள். ஒரு தடவை வெண்பனி உருண்டை அவளை நேரே தாக்காதபடி அவன் காப்பாற்றியிருந்தான். வெண்பனி உருண்டை கெட்டியானது கூட. அவளுக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பது உண்மைதான். ஆனால் இது இன்னும் நல்லதே என்று பையனுக்குத் தோன்றியது. தன் தோல்வியைப் பற்றிச் சொல்ல அவனுக்கு ஆசையாய் இருந்தது. மிகுந்த சித்தவுறுதியும் பெருமிதமும் உள்ளவர்களுக்குக்கூடத் தங்கள் துயரத்தை யாரிடமாவது சொல்லிக்கொள்ள ஆசை உண்டாகும் அல்லவா? அதனால் நெஞ்சுக்கனம் குறையும்.

''விஷயம் என்ன தெரியுமா?'' என்று பெருமூச்சு விட்டு, நீரில் ஊறி நமுத்துப் போன ஜோட்டை அசைத்தான் பையன். அப்புறம் தயக்கத்தை விட்டுவிட்டு, ''விஷயம் என்ன தெரியுமா? நான் ஒரு கண்டுபிடிப்பு செய்தேன்'' என்முன்.

''புதுப்புனைவு'' என்று சொல்ல விரும்பினான் பையன். ஆனால் அதற்குப் பதில் ''கண்டுபிடிப்பு'' என்ற வார்த்தை தானாகவே அவன் நாவில் உதித்துவிட்டது. ஒருவேளை பையன் எண்ணியது சரிதான் போலும்....

பையனைப் பொறுத்தவரை, இது மெய்யாகவே கண்டு பிடிப்புதான். மூன்று நாட்களுக்கு முன் நிகழ்ந்தது அது. அப்

போது மழை தொடங்கவில்லை. வெயில் பளிச்சென்று அடித்துக் கொண்டிருந்தது. பையன் குடையை விரித்துப் பிடித்தபடி கொட்டார முகட்டின்மேல் நின்றுகொண்டிருந்தான்.

''குதி!'' என்று கீழிருந்து கத்தினார்கள் சிறுவர்கள்.

பையன் குதிக்கவில்லை.

''பயந்துவிட்டான்'' என்று சொல்லி இகழ்ச்சியுடன் கீழுதட்டைப் பிதுக்கினான் நண்பர்கள் எல்லாரிலும் வயதில் சிறியவனும் கொழுத்தவனுமான ஒருவன்.

பையன் பேசாதிருந்தான்.

தரையிலிருந்து பார்க்கையில் கொட்டாரம் சாதாரண மாக—பழையதாகவும் உயரமற்றதாகவும்—தென்பட்டது. தரையிலிருந்து கூரை விளிம்பு மூன்றே மீட்டர்தான் இருந்தது. பையனும் சாதாரணமானவன் தான். உயரமற்றவன், மெலிந்த கைகள் உள்ளவன். அவனுடைய நிறம் மங்கிய கேசம் கத்தரிக்கோலைக் கண்டு வெகு காலம் ஆகியிருந்தது. ஆகஸ்டு மாதத்தில் எல்லாப் பையன்களையும் போலவே அவனும் வெயி லில் அடிபட்டுப் பழுப்பேறியிருந்தான். அவனுடைய நீல பனியன் இடைவாருக்கு வெளியே துருத்திக்கொண்டிருந்தது. பார்வைக்கு அவன் வீரனைச் சற்றும் ஒத்திருக்கவில்லைதான். ஆனால் அதுவரை அவன் கோழையாகவும் இருந்ததில்லை.

இப்போதோ முகட்டின் மேல் நின்று குதிக்கத் தயங்கினான்.

''மேலே ஏறி இவனுக்குச் சரியானபடி கொடுத்தால் தேவலையே!'' என்றாள் வெளிர் முடியளான ஒரு ஒடிசல் பெண். அபாயமான காரியங்கள் எல்லாவற்றிலும் சிறுவர்களுடன் சேர்ந்து பங்கு கொள்ளும் வகைச் சிறுமிகளைச் சேர்ந்தவள் இவள். ''உன்னைத்தான் என்கிறேன்! ஊம், குதி! அல்லது படுத்துச் சறுகி வா! மற்றவர்களைத் தாமதப்படுத்தாதே'' என்று கத்தினாள்.

பையன் பதில் பேசவில்லை.

விண்ணில் மேகங்கள் மிதந்தன—பெரியவை, உருண்டை யானவை, மஞ்சள் பலூன்கள்போல. தரையிலிருந்து பார்ப்ப

தற்குச் சர்வ சாதாரணமாயிருந்த கொட்டாரம் வானில் கிளம்பிய கப்பல் போல மேகங்களை எதிர்கொள்ள நீந்திச் சென்றது.

முகப்பு வெளியோ விண்வெளி உயரத்திலிருந்து கண்ணுக்குத் தெரியும் கோளத்தின் மேல் பரப்பு போன்று காணப்பட்டது. புழுதி படிந்த புல் திட்டுக்களில் சாம்பல் நிறச் சாமந்திப் பூக்கள் பந்துகள் போலச் சிதறியிருந்தன. இந்தத் திட்டுக்கள் பச்சைத் தீவுக் கூட்டம் போன்று காட்சி அளித்தன. கொட்டாரத்தின் பக்கத்தில் பீப்பாயில் நிறைந்திருந்த தண்ணீர் செங்குத்துக் கரைகள் கொண்ட வட்ட ஏரியை ஒத்திருந்தது. ஆழ் நீலமாகப் பளிச்சிட்டது அது.

காண்பவை எல்லாவற்றுக்கும் ஏதாவது பெயர்கள் இடுவதில் பையனுக்கு விருப்பம். இந்தப் பெயர்கள் அவனுக்குச் சட்டென்று தோன்றிவிடும். பீப்பாய் நீருக்கு ''நீல ஒளி ஏரி'' என்றும் புல் திட்டுக்களுக்கு ''அறியாக் காட்டுத் தீவுக்கூட்டம்'' என்றும் அவன் பெயர்கள் சூட்டினான்....

''அட குதியேன் அடா!'' என்று தொண்டையைப் பிய்த்துக்கொண்டு கத்தினாள் வெளிர்முடிச் சிறுமி.

பையன் கடைசியில் சுயநினைவை அடைந்தான்: ஆமாம், குதிக்க நேரம் வந்துவிட்டது.

குடையை உயர்த்திப் பிடித்தான்.

கறுப்புக் குடை பல நூறு மடங்கு சிறிதாக்கப்பட்ட ஸர்க்கஸ் கும்மட்டம் போல இருந்தது. ஸர்க்கஸ் கும்மட்டத்தின் அடியில் எப்போதும் விளக்குகள் எரியும், இங்கே இருண்டிருந்தது என்பதுதான் வித்தியாசம். ஊசித் துளை போன்ற ஒரே ஒரு நுணுக்கு ஓட்டை மட்டுமே தனியாகப் பிரகாசித்தது. விண்ணின் நுண்ணிய துளி, இருண்ட வானத்தில் நீல நட்சத்திரம் போல அந்தத் துளையில் சுடர்ந்தது.

''நீல ஸிரியஸ் நட்சத்திரம்'' என்று கிசுகிசுத்தான் பையன். மகிழ்ச்சி விரைவில் ஏற்படுவதற்கான முன்னுணர்வு அவனுக்கு உண்டாயிற்று.

உச்சித் தலைமுடி சுரசுரப்பான குடைத் துணியில் படும் படிக் குடையைத் தணித்தான். இப்போது பையன் தரையை மட்டுமே கண்டான். ஆகாயத்துக்குப் பதில் வெயிலால் உள்ளும் புறமும் சூடேறி, எதனாலோ பசை நாற்றம் அடித்த கறுப்புத் துணிதான் எங்கும் இருந்தது. நட்சத்திரத் துளையில் மட்டுமே பளிச்சிடும் நீலம் முன்போலவே ஒளிர்ந்தது. அப்புறம் குடை மீது வெயில் பட்டது. நட்சத்திரம் கண்கூசும்படி சுடர் வீசி, நுண்ணிய கதிர்களாகவும் வானவில் வட்டங்களாகவும் சிதறியது.

''அதி நூதன நட்சத்திர வெடிப்பு'' என்று கிசுகிசுத் தான் பையன்.

''ஹா, இவன் 'ஆண்டவனே காப்பாற்று' என்று வாய்க் குள் சொல்லுகிறான் போல் இருக்கிறது!'' என்று கீழிருந்து உரக்க முழங்கிவிட்டு அருவருப்பைக் காட்டுவதற்காக முகத் தைத் திருப்பிக்கொண்டாள் ஒடிசல் பெண்.

''நட்சத்திர மண்டலங்களின் வரைபடம் இவனுக்குக் கர தலப் பாடம், ஆனாலும் என்ன பயன்? மூன்று மீட்டர் உயரத் திலிருந்து குதிக்க இவனால் முடியவில்லையே. இந்த அழகில் விண் வெளி வீரன் என்ற நினைப்பு. ஆளைப் பாரடா!'' என்று எல்லோ ரிலும் வயதில் பெரியவனும் விவேகியுமான சிறுவன் தோள் களைக் குலுக்கினான்.

''என்ன?'' என்று மேலிருந்து கேட்டான் பையன். தான் பயப்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை அப்போது தான் அவன் புரிந்துகொண்டான்.

நிதானமாகக் குடையை மடக்கினான். அதைப் பத்திரமாக வைத்திருப்பது இப்பொழுது அவசியமாய் இருந்தது.

''வெறுமேயே முடியுமே என்றால்!''

குடைப் பாரஷூட் எதுவும் இல்லாமலே குதித்தான். விறகு அடுக்கைத் தாண்டிப் புல்மேல்—''அறியாக் காட்டுத் தீவுக்கூட்டத்தின்'' மிகப் பெரிய தீவில்—கைகளையும் முழங் கால்களையும் ஊன்றியவாறு குதித்தான்.

''பிரமாதமாக்கும்'' என்றுள் ஒடிசல் பெண். சொல்வதற்கு ஒன்றும் இல்லாதபோது பெண்கள் வழக்கமாகக் கூறும் வார்த்தை இது.

நண்பர்கள் எல்லாரிலும் கொழுத்த, வயதில் சிறிய பையன் பெரிய உதட்டைப் பிதுக்கிக் கடித்தான்.

''மற்றவர்களால் முடியாது என்கிற நினைப்போ உனக்கு?'' என்று கேட்டுவிட்டு, முக்கி முனகிக் கொண்டு உறுதியற்ற விறகு அடுக்கு வழியே கூரை மேல் தொற்றி ஏற முற்பட்டான்.

பையன் பதில் பேசவில்லை. அவன் குடையை விரித்து, சிறு துளை வழியே வெயிலைப் பிடித்தான். துணி வானில் சுடர்ந்தது விண்மீன். பையன் அதைப் பார்த்துக் கண் சிமிட்டி, வாய்க்குள் சிரித்துக்கொண்டான்.

கண்டுபிடிப்பு நிகழ்ந்த விதம் இதுதான்.

...டிராமில் சந்தித்த பெண்ணிடம் இதை எல்லாம் விவரிக்க அவனால் முடியவில்லை. வெகு நேரம் பிடிக்கும், விளங்கவும் விளங்காது. அவன் சுருக்கமாக விளக்கினான்:

''நட்சத்திரக் காட்சிசாலை அமைக்க விரும்பினேன். சின்னதாக, மடக்கி எடுத்துச் செல்லக்கூடியதாக. குடையில் எல்லா நட்சத்திரக் கூட்டங்களையும் குறிக்க வேண்டும். புரிகிறதா? குடையை விரித்ததும் தலைக்கு மேலே விண்மீன்கள் தெரியும். விண்மீன்கள் இருக்க வேண்டிய இடங்களில் ஊசியால் துளைகள் இட்டுக்கொள்ள வேண்டும், அவ்வளவுதான். வானத்தில் நட்சத்திரங்கள் தெரியாவிட்டாலும் எந்த விண்மீன் எங்கே இருக்கிறது என்று பகலில் கூடக் கண்டு கொள்ளலாம். குடையை எப்படி வைத்துக்கொள்வது என்று முன்கூட்டியே கணக்கிட வேண்டும், அவ்வளவு தான்....''

''உனக்கு எல்லா நட்சத்திரங்களையும் தெரியுமோ? கணக்கிட்டும் விட்டாயோ?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சிறுமி.

''ஆமாம், நான் ராத்திரி சரி பார்த்தேன்....''

புல், ஆற்று மூடுபனி, சூடு ஆறும் தார் போட்ட நடை பாதைகள் ஆகியவற்றின் மணம் இரவில் வீசிற்று.

பையன் வாசல் படியிலிருந்து இறங்கி வெளியே வந்தான். மூன்று மாடிகள் வரை விளக்கொளி அற்ற ஜன்னல்கள் வெளிப் பிரகாசத்தை மங்கலாகப் பிரதிபலித்தன. பகல் முழுவதும் வெயிலில் காய்ந்த சுவர்கள் கதகதப்பைப் பரப்பின. வெப்ப நாடு களிலிருந்து வந்து பழக்கமான துறையில் நின்று உறக்கத்தில் ஆழ்ந்த பெரிய கப்பலை ஒத்திருந்தது வீடு. முகப்பு வெளியின் உள் ஓரத்திலிருந்த கொட்டாரம் பெரிய கரும் பாறைபோலத் துருத்திக்கொண்டிருந்தது.

சிறுவன் முகப்பு வெளியின் குறுக்கே போய்க் கொட் டாரத்தின் முகட்டில் ஏறினுன்.

இப்போதையக் காட்சி முந்தியதைப் போல் இல்லவே இல்லை. புல் திட்டுக்கள் இருளில் மறைந்துவிட்டன. பீப்பாயில் நிறைந்திருந்த மழைத் தண்ணீர் சிறு ஏரியை நினைவூட்டவே இல்லை. அது கரியதாக இருந்தது. அதில் அசையாது மிதந்தன இரண்டு விண்மீன்கள். யாரோ உலக உருண்டையை ஊடுருவிக் குடைந்துவிட்டதுபோலவும் இந்த வட்டக் கிணற்றிலிருந்து தென் வானத்தின் விண்மீன்கள் தன்னைப் பார்ப்பது போலவும் பையனுக்குத் தோன்றியது.

பையனின் பனியனுக்கு உள்ளிருந்து டிக்டிக்கென ஒலித் தது டைம்பீஸ். சட்டை மார்புக்குள் மறைத்து வைக்கப்பட்ட பட்சியின் இதயம் போலத் திகிலுடன் ஒலித்தது அது. வசதி யான சிறு மேஜை மேலிருந்து தன்னை எடுத்து, பனியனுக்கும் வெறும் வயிற்றுக்கும் நடுவில் நுழைத்து எங்கோ கொண்டு செல்கிருனே இந்தப் பையன், இது எதற்காக என்று கடியாரத் துக்குப் புரியவில்லை. வானியல் காலக் கணிப்புக் கருவியாகத் தான் பணி செய்ய வேண்டும் என்பது சிறு அறைக் கடிகாரத் துக்கு விளங்கவில்லை.

பையன் அதை வெளியே எடுத்து, பக்கத்தில் பலகைமேல் வைத்தான். விடுதலை அடைந்ததும் கடிகாரத்துக்கு நிம்மதி

ஏற்பட்டது. அது காரியரீதியாக, வீட்டில் போலவே டிக்டிக் கென்று ஒலிக்கத் தொடங்கிற்று.

ஈரக் குளிர் நடுக்கிற்று. அசையாதிருந்த காற்று திடீ ரென்று குளுகுளுவென மெதுவாக வீசியது. பையன் முட்டுக் களை மடித்துக் கைகளால் தழுவிக்கொண்டு சுருண்டான். நடு இரவு ஆக இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கின்றன என்று பளிச்சிடும் கடிகார முட்கள் காட்டின.

பையன் ஆகாயத்தைப் பார்க்கலானுன்.

வானம் எல்லை அற்றதாகத் தென்பட்டது, ஆகவே மூச்சு விடுவதே அச்சமூட்டிற்று.

கரு ஆழத்தில் சுடர்ந்தன விண்மீன்கள். வட வானின் வரைபடத்தைப் பையன் நன்ருக அறிந்திருந்தான். நினைவி லிருந்தே அதை வரையக்கூட அவனுல் முடியும். ஆனுல் அவன் முக்கியமான, பிரகாசமான நட்சத்திரங்களை மட்டுமே நினைவு வைத்திருந்தான். அதாவது நட்சத்திரக் கூட்டத்தின் வடிவை உருவாக்கும் நட்சத்திரங்களை மட்டுமே. இப்போதோ, பைய னுக்கு உதவ முயல்வது போல வானம் பொறி சிந்தும் விண்மீன் ஒளிச்சேமிப்பு முழுவதையும் அவன்மேல் கவிழ்த்து விட்டது.

அவன் பார்க்கப் பார்க்க விண்மீன்கள் மேலும் மேலும் அதிகமாக எல்லையற்ற கருமையில் பளிச்செனத் தெரிந்தன. மிக அண்மையில் இருந்த, ஒளி சுடரும் நட்சத்திரங்களின் பின் னே மினுமினுத்தன வேறு விண்மீன்கள். அவை அவ்வளவு பிர காசமாய் இல்லை. என்ருலும் எண்ணிக்கையில் அவை அதிகமாக இருந்தன. அவற்றுக்குப் பின்னேயோ, மிகத் தொலைவில் கணக் கற்ற பொறிகள் கண்சிமிட்டின. இவ்வளவு மட்டுமே அல்ல. பையன் கூர்ந்து பார்த்தபோது, வானத்தில் மிக நுண்ணிய விண்மீன் துகள்கள் நெடுகிலும் தெளித்திருப்பதைக் கண்டான். இந்தத் துகள் பால்வீதி மண்டலம் எனப்படும் பனிமூட்டத் தை ஒத்த பட்டையிலும் தீவுகள் போன்ற பிற நட்சத்திரக் கூட்டங்களிலும் அடர்ந்து காணப்பட்டது.

பையன் குழப்பம் அடைந்தான். இத்தனையையும் நினைவு வைத்துக்கொள்ள அவனால் முடியாது. வரைபடத்தில் இவை இருக்கவில்லையே!

இவற்றை வரைவது முடியாது....

ஆனால் அப்புறம் அவன் சிரமப்பட்டு மனதைத் தேற்றிக் கொண்டான். முக்கியமான நட்சத்திரங்கள் மட்டுந்தாமே தனக்கு வேண்டும் என்று எண்ணினான். இப்போதைக்குஸப்தரிஷி மண்டலம், காச்யபி, பிரசியூஸ் போன்றவற்றைக் குறித்துக் கொள்வது, அப்புறம் மற்றவற்றைப் பார்த்துக்கொள்ளலாம் எனத் தீர்மானித்தான்.... இந்த நட்சத்திரக் கூட்டங்கள் காரணமாகத்தானே வானம் பரிச்சயமானதாகத் தோன்றுகிறது. அடர்ந்த குறுங்காட்டில் வழி காண உதவும் பெரு மரங்கள் போன்றவை இவை. மாலுமிகள் தீவுக்கூட்டங்களின் உருவரைகளை எவற்றால் இனங் காண்கிறார்களோ அந்தப் பெரிய தீவுகள் போன்றவை இவை....

இப்படி எண்ணினானே தவிர, புதிய புதிய பொறிகளைப் பார்வையால் துழாவித் தேடுவதைத் தொடர்ந்தான். ஒவ்வொரு புது விண்மீனும் மினுமினுத்து மர்ம ஒளி வீசிற்று.

நடுக்கும் ஈரக் காற்று சோம்பலுடன் அசைந்தது. அண்டவெளிக் குளிர் கனத்த துளிகளாக ஒழுகித் தரையின் வெப்பக் காற்றில் ஈரக் குளிர்மையாகக் கரைவது போலிருந்தது. பையன் நடுங்கினான். ஆனால் பயணத்துக்கு அழைக்கும் காற்று மாலுமிக்கு ஊக்கம் ஊட்டுவது போலவே வானத்தின் இந்தக் குளிர் மூச்சு பையனுக்கு ஊக்கம் ஊட்டியது. கணீரென்ற மணியோசை நிசப்தத்தைப் பிளந்தது. பையன் திடுக்கிட்டு அலாரத்தின் மணி விசைப் பொத்தானை அழுத்தினான். கடிகாரம் குப்புறக் கவிழ்ந்து ரோசத்துடன் மௌனமாகிவிட்டது. நடுநிசி வந்துவிட்டது.

பையன் துருவ நட்சத்திரத்தைத் தேடிக் கண்டு அதிலிருந்து வடக்காக, இருண்ட தொடுவானம்வரை பார்வையால் நேர் கோடு கிழித்தான். அப்புறம் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் இவ்வாறே பார்வைக் கோடுகள் இட்டான்.

இந்தக் கோடுகளை நினைவில் பதித்துக்கொண்டான்.

பையன் வானவியலில் தேர்ந்தவன் அல்ல. ஆனால் சில விஷயங்களை அறிந்திருந்தான், எளிமையாகச் சிந்தித்தான். வானம் துருவ நட்சத்திரத்தைச் சுற்றிச் சுழல்கிறது. இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு முழு வட்டம் வருகிறது. பூமியிலிருந்து பார்க்கும் போது அப்படித் தோன்றுகிறது. ஆகவே ஒரு மணி நேரத்தில் நட்சத்திரங்கள் வட்டத்தின் இருபத்து நானகில் ஒரு பகுதியைக் கடக்கின்றன. பகலிலோ இரவிலோ குறிப்பிட்ட எந்த நேரத்திலும் அவை எங்கே இருக்கின்றன என்று துல்லியமாகத் தீர்மானித்துவிடலாம். நடுநிசியில் அவற்றின் நிலை என்ன என்பதை ஆரம்பத்தில் தெரிந்துகொள்ள வேண்டும், அவ்வளவுதான். இப்போது பையன் இதையும் தெரிந்துகொண்டு விட்டான்.

நட்சத்திரக் கூட்டங்கள் இப்போது அவன் வசம் இருந்தன....

''நான் எல்லாவற்றையும் சரி பார்த்தேன், கணக்கிட்டேன்'' என்றான் பையன்.

''அப்புறம்?'' என்று கேட்டாள் சிறுமி.

''அப்புறம் என்ன... அவ்வளவுதான். குடைதான் என்னிடம் இல்லையே.''

குடை இருந்தது. கொட்டார முகட்டு மேலிருந்து எதன் உதவியால் அவன் குதிக்க விரும்பினானோ அதே குடை. மப்புமந்தாரமாய் இருக்கையில் அப்பாவும் அம்மாவும் மழைக் கோட்டு அணிந்துகொள்வது வழக்கம் ஆகையால் குடை சீந்துவார் அற்று அலமாரிக்குப் பின்னே கிடந்தது. பையன் அதைத் தன்னுடையது என்று எண்ணியிருந்தான்.

எல்லாம் ஒரே அசட்டுத்தனமாக நடந்துவிட்டது. அந்த வறட்டு ஜென்மம் வெரொனீக்கா பாவ்லவ்னாவால் வந்த வினை எல்லாம். எப்போதும் மாலை வேளைகளில் வீட்டிலேயே உட்கார்ந்

திருப்பாள் அவள். இன்றோ, இப்படி மழை கொட்டும் போது, தன் புருஷரின் நண்பர்களைப் பார்க்கப் போவதாக அறிவித்தாள். அவர்களிடம் அவளுக்குக் காரியம் இருந்ததாம். தமது எவையோ காகிதங்களை அவள் கணவர் நண்பர்களிடம் கொடுத்து வைத்திருந்தாராம், அவற்றைஅவள் திரும்ப வாங்கிக் கொள்ள வேண்டுமாம். அவை முக்கியமான விஷயாதாரங்களாம். புருஷர் அரை குறையாக விட்டுப்போன ஆய்வுரையுடன் தொடர்பு உள்ளவையாம்....

''நாளைக்குப் போய்க் கொள்ளலாமே, வெரொனீக்கா பாவ்லவ்னு'' என்று அப்பா தயக்கத்துடன் சொன்னார்.

''இல்லை, கூடவே கூடாது!'' என்றாள் அவள்.

அவளுக்குச் சிறிய மோவாய், சாம்பல் நிற உதடுகள், சுற்றிலும் நீல வட்டம் தீட்டிய துயரம் தோய்ந்த விழிகள். தங்க முலாம் பூசிய பிறைவடிவான காதணிகள் வேறு, ஜிப்ஸிகள் போல. இவ்வளவு படிப்பாளியான அந்த மாது இந்தப் பத்தாம் பசலி நகையைக் காதுகளில் மாட்டிக்கொண்டிருப்பது எதற்காக என்பது பையனுக்கு விளங்கவே இல்லை.

தகப்பனாரிடம் இதைப் பற்றிக் கேட்டான்.

''உன் காரியத்தைப் பார். பெரியவர்களைக் கேலி செய்து பல்லிளிக்க வேண்டாம்!'' என்று எரிந்து விழுந்தார் தகப்பனார்.

வெரொனீக்கா பாவ்லவ்னு அப்பாவின் மதனி. பெரியப்பா மூன்று வருஷங்களுக்குமுன் காலமாகிவிட்டார். அவருடைய மனைவி ஆண்டு தோறும் அவர்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வருவாள். ஒவ்வொரு தடவையும் இரண்டு வாரங்கள் இங்கே தங்குவாள். பகலில் தன்னந்தனியாக அறையில் ஈ ஓட்டிக்கொண்டிருப்பாள். மாலையில் தன் கணவரைப் பற்றிப் பேசுவாள். எங்கோ அகழ்ந்து எடுக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் பற்றிய ஆய்வுரையை அவர் முடிக்கவே இல்லை. அவருக்கு வாய்க்கவில்லை. இருந்தாலும் அவர் பிஎச். டி. பட்டம் பெற்றிருந்தார் என்பதில் வெரொனீக்கா பாவ்லவ்னுவுக்கு ஒரே பெருமை.

அப்பாவும் அம்மாவும் அவள்முன் எதனுலோ கூசிக் குறு கிருர்கள். அவர்கள் பிஎச். டி. பட்டதாரிகள் அல்ல, நோவ்கரத் என்னும் இடத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட, பிர்ச் மரப் பட்டையில் எழுதப்பட்ட பண்டைய ருஷ்யப் பத்திரங்கள் பற்றி அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை என்பதே இந்த நாணத்துக்குக் காரணமாய் இருக்கலாம்.

வேடிக்கைதான்!

வெரொனீக்கா பாவ்லவ்ஞவை அவர்கள் நெருங்கிய உறவினளாக மதித்தார்கள். ஆனுல் மரியாதையாக முழுப் பெய ரையும் சொல்லியே அழைத்தார்கள். பையன் மட்டுந்தான் எந்தப் பெயரையும் சொல்லி அவளை அழைப்பது கிடையாது.

''பெரியம்மாவுடன் நீ ஏன் பேசுவதில்லை?'' என்று கேட் டார் தகப்பனுர்.

''எதைப் பற்றி?''

''ஓகோ, அதி சாமர்த்தியம் பண்ணுகிருயா? ஒரே தறிதலை ஆகிவிட்டான் பயல். எனக்குக் கோபம் வந்ததோ, உன்னை உரித் துப் போட்டு விடுவேன்'' என்று கடிந்துகொண்டார் தகப்பனுர்.

''ஐயோ'' என்று மெதுவாகச் சொன்னுன் பையன்.

இது அவன் வழக்கம். அவனுக்கே இந்த வழக்கம் பிடிக்க வில்லை. ''பெண்களைப் போல ஐயோ என்கிருயே'' என்று மற்றச் சிறுவர்களும் அவனைக் கேலி செய்வார்கள். ஆனுலும் இந்த வழக்கத்தை விட்டுத் தொலைக்க அவனுல் முடியவில்லை. இந்த ''ஐயோ''வை அவன் பல விதங்களில் உச்சரிப்பான். சில வேளை களில் கேலியாகவும் சில வேளைகளில் ஆச்சரியத்துடனும் பின்னும் சில வேளைகளில் அசட்டையாகக் கொட்டாவி விட்ட படியும் இன்னும் எத்தனை எத்தனையோ வகைகளில் சொல்லு வான். ஒரு சமயம் உரக்கக் கத்துவான், மறு சமயம் கிசுகிசுப் பான். இந்தத் தடவை மிகவும் தணிந்த குரலில் சொன்னுன். தகப்பனுர் காதில் கூட அது படவில்லை.

இவ்வளவிற்குப் பிறகும் வெரொனீக்கா பாவ்லவ்ஞவுடன் பையன் பேசவில்லை. அவளும் அவனை ஏறெடுத்தே பார்ப்பதில்லை.

இன்று அவளுக்குக் குடை தேவைப்பட்டது.

பையன் ஜன்னல் அருகே உட்கார்ந்து குடையில் ஊசிகளால் துளைகள் இட்டுக் கொண்டிருந்தான். துணி அழுத்தமானது. ஒவ்வொரு முறையும் குத்திய பின் அதில் ஒழுங்கான வட்டத் துளை ஏற்பட்டது. பருத்த ஊசியால் பெரிய துளைகளும் மெல்லிய ஊசியால் சிறு துளைகளும் உண்டாயின. ஆகாயத்தில் நட்சத்திரங்களும் பல விதமானவை ஆயிற்றே....

ஆனால் நட்சத்திரங்களில் எல்லோருக்கும் அக்கறை இருப்பதில்லை.

''இது கலைக்கொலை. தொன்மையான பொருள்களை இப்படியா பாழ்படுத்துவது!'' என்று வறண்ட குரலில் சொன்னாள் வெரொனீக்கா பாவ்லவ்னா.

குடை தொன்மையானது அல்ல, பழையது, அவ்வளவு தான். தவிர, கலைக்கொலை என்ற சொல் பையனுக்கு விளங்கவில்லை. ஆயினும் அவன் ஏதோ பெட்டி நிறைய விலைமதிப்பற்ற பொருள்களைப் பாழாக்கி விட்டது போல அப்பாவும் அம்மாவும் அவனை உறுத்துப் பார்த்தார்கள்.

''பாருங்களேன் சற்றே.... ஒன்று, இரண்டு, மூன்று.... எட்டுத் துளைகள் இட்டிருக்கிறான்'' என்று கணக்காக எண்ணிச் சொன்னாள் வெரொனீக்கா பாவ்லவ்னா.

ஸப்தரிஷி மண்டலம் அவளுக்கு வெறும் துளைகளாகப் பட்டது!

''ஏழு. ஒரு துளை முன்பே இருந்தது'' என்றான் பையன்.

''உனக்கு வாய் வேறா!'' என்று அதட்டினார் அப்பா. பின்பு வெரொனீக்கா பாவ்லவ்னாவைப் பார்த்து ''என்னிடம் மின் தடுப்பு நாடா இருக்கிறது. நான் ஒட்டுத் துண்டுகள் கத்தரித்து உட்புறமாக ஒட்டி விடுகிறேன்'' என்று பரபரப்புடன் சொன்னார்.

வெரொனீக்கா பாவ்லவ்னா அவமதிக்கப்பட்டவள் போல உதட்டைக் கடித்துக்கொண்டாள். விஞ்ஞானப் பிஎச். டி. பட்டதாரியின் விதவைக்கு ஒட்டுப் போட்ட குடையைக் கொடுப்பார்களாமே!

''எங்கள் குழந்தைகள் இப்படிச் செய்திருந்தால் தண்டனை பெருமல் தப்ப மாட்டார்கள்'' என்ருள்.

உண்மையில் அவளுக்குக் குழந்தைகள் கிடையாது.

''அதைச் சொல்லவும் வேண்டுமா?'' என்ருர் அப்பா.

மங்கிய காதணிகளை அசைத்தபடி அறையிலிருந்து வெளியேறிஞள் வெரொனீக்கா பாவ்லவ்ஞ.

''மற்றவர்கள் முன்ஞல் மானத்தை வாங்கத்தான் தெரியும் உனக்கு!'' என்று விளங்காத வருத்தத்துடன் சொன்ஞள் அம்மா.

''மற்றவர்களுக்கு முன்ஞல்....'' என்ருன் பையன்.

அவனுக்கு நேரான நீண்ட இமைமயிர்கள். அவன் மனத் தாங்கல் இல்லாமல், குதூகலமாகக் கண்களை அகல விரித்துப் பார்க்கையில் இமைமயிர்கள் மேல் நோக்கித் துருத்தும். அவன் முகஞ்சுளிக்கும் போதோ கண்களில் மயிர் சிலிர்ப்பது போலிருக்கும்.

தகப்பஞர் சிறுகூடான மேனியர். கோபத்திஞல் அவர் முள் அடர்ந்தவர்போலக் காணப்பட்டார். லாகவம் இன்றி முட்டியால் மேஜைமேல் அடித்தார்.

''அதி சாமர்த்தியமா பண்ணுகிருய்? என்னிடம் முறைக்கவா செய்கிருய்? என்ன துணிச்சல் உனக்கு?'' என்று இரைந்தார்.

''மெதுவாக'' என்று கெஞ்சும் பாவனையில் சொன்ஞள் தாயார்.

பையனுக்குக் கண்ணீர் பொங்கி வந்தது. ''உங்களுக்குக் குடையைப் பற்றி வருத்தமாய் இருந்தாலாவது பரவாயில்லை. உங்களுக்குத்தான் அதைப் பற்றி வருத்தமே கிடையாதே. இவளுக்காகத்தான் பாடு படுகிறீர்கள்.... இவளிடம் உங்களுக்குப் பயமா என்ன?'' என்ருன்.

''வெம்பல் பயலே! நாய்க்குட்டி! போ வெளியே!'' என்று கீச்சுக் குரலில் கத்திஞர் தகப்பஞர்.

இல்லை, பையன் ஒன்றுமே பதில் பேசவில்லை, கதவையும் படீரென்று சாத்தவில்லை. ஓசைப்படாமல் மாடிப்படிக்குப்

போய், அழிமேல் குப்புறப் படுத்துக் கீழே, குறுகிய கரிய படிக் கட்டை நோக்கினான். வீடு பழையது. மாடிப்படியில் ஈரக் காரையும் மண்ணெண்ணெயும் நெடி வீசின. மனத்தாங்கலால் தொண்டை கரகரத்தது, கண்கள் காந்தின. அப்போது பையன் மெதுவாக இறங்கி மழையில் வெளியேறினான்.

குளிர் தாக்கி மரணம் ஏற்படுவதாய் இருந்தாலும் அப்போது அவனுக்கு ஆட்சேபம் இல்லை. ஒரேயடியாகச் சாவு ஏற்பட வேண்டாம், நியுமோனியாக் காய்ச்சல் வரட்டும். அப்போது தெரியும் இவர்களுக்கு.... ஆனால் மழை நல்ல மாதிரியானது. பையனைச் சாக அடிக்க அது விரும்பவே இல்லை. வெதுவெதுப்பான நீர்த்தாரையைப் பையன்மேல் பொழிந்து அவன் மனத்தாங்கலைக் கரைக்க அது முயன்றது. மனத்தாங்கல் கரையவில்லை. கைப்பும் கலங்கலுமான மண்டி இன்னும் நெஞ்சில் தங்கியிருந்தது. ஆனாலும் பையன் மழைக்கு நன்றி பாராட்டினான். இப்போது அவர்கள் இருவரும் குடைகளின் பாதுகாப்பில் மறைந்துகொள்பவர்களுக்கு எதிராய் இருந்தார்கள். குடை பிடித்தவர்கள் ஒரு சிலரே காணப்பட்டார்கள், பெரும்பான்மையோர் மழைக் கோட்டுக்களே அணிந்திருந்தார்கள் என்பது உண்மையே. எனினும் பையன் குடைகளைப் பற்றியே எண்ணமிட்டான், அவற்றை மட்டுமே கண்டான்.

தண்ணீரால் பளபளவென்று மின்னிய தெருக்கள் வழியே நடந்தான் பையன். வீட்டுப் புகு வாயில்களிலோ, புத்தகக் கடைப் பந்தலுக்கு அடியிலோ ஒரு தரங்கூட அவன் ஒண்டிக் கொள்ளவில்லை. அப்புறம், வீட்டிலிருந்து வெகு தூரம் போய் விடும் நோக்கத்தோடு டிராமில் ஏறினான். அங்கேதான் பெண்ணைச் சந்தித்தான்.

''குடை என்னிடம் இல்லை. இருந்தால் எல்லாம் மிகவும் சுளுவாய்ப் போயிருக்கும். வட வானின் வரைபடத்தில் உள்ள மாதிரியே நட்சத்திரங்களைக் குடையில் பொறித்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான், எல்லாம் ஒழுங்காகிவிடும். பிறகு

தேவையான விதத்தில் குடையை வைத்துக் கொண்டால் எங்கே எந்த நட்சத்திரக் கூட்டம் இருக்கிறது என்று உடனே தெரிந்து விடும்!'' என்முன் பையன்.

அவன் உற்சாகம் அடைந்தான். மனத்தாங்கல் கொஞ்சம் மட்டுப்பட்டது. அவன் உள்ளத்தில் மகிழ்ச்சித் தந்தி மறுபடி ஒலிக்கத் தொடங்கிற்று. குடையைப் பிடுங்கிக் கொள்ளலாம், கண்டுபிடிப்பைப் பறித்துக்கொள்ள முடியாது அல்லவா?

''இதை எப்படிச் செய்ய வேண்டும் என்று விளக்குகிறேன்'' என்று ஆரம்பித்தான் பையன். ''துருவ `நட்சத்திரம் எங்கே இருக்கிறது என்பதை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும், அதுதான் முக்கியமானது. இது சுலபம். வடக்கு எங்கே என்று தெரிந்தால் போதும். அப்புறம்....''

''இரு, இரு'' என்று அவன் பேச்சை இடைமுறித்தாள் பெண். ''எனக்கு இது ஒன்றுமே தெரியாதே! நீ முதலில் படம் வரை, அப்புறம் விளக்கு, வரைந்திருப்பதை ஒட்டி'' என்முள்.

''வரைவதா? எப்படி?''

''குடையில் தான். இந்தா'' என்று சகஜமாகக் கூறிப் பையிலிருந்து சாக்கட்டி ஒன்றை எடுத்த நீட்டினுள். நடை பாதையில் பாண்டி விளையாடுவதற்காகக் கோடுகள் கிழிக்கும் பொருட்டு எல்லாப் பெண்களும் பையில் எப்போதும் சாக்கட்டி வைத்திருப்பது வழக்கந்தானே. ''ஊசியால் துளை போடுவது அவசியமா என்ன? சாக்கட்டியாலும் நட்சத்திரங்களைக் குறிக்க லாமே. இல்லையா? எனக்கு அந்த மாதிரிக் குடை எவ்வளவு உபயோகமாய் இருக்கும் தெரியுமா?'' என்முள்.

இந்த விஷயம் அவன் மூளையில் எப்படிப் படாமல் போயிற்று? சாக்கட்டியால் குறிப்பது இன்னும் மேல். துளைகளை இருட்டில் காண முடியாது. சாக்கட்டிக் குறிகளையோ, சொற்ப வெளிச்சத்தில் கூடக் காணலாம். மப்பு மந்தாரமான இராத்திரிகளில் கூட அவனுல் வானத்தில் நட்சத்திரங்களைத் தேடி அறிய முடியும்!

பெண் குடையை விரித்தாள்.

''மெய்யாகவே எல்லா நட்சத்திரக் கூட்டங்களையும் நீ அறிவாயா?''

பையன் பெருந்தன்மையுடன் மௌனம் சாதித்தான்.

''வரை'' என்ருள் அவள்.

ஆனால் வரைய வாய்க்கவில்லை. சாக்கட்டியைக் கையில் எடுத்துக் கொள்ளக்கூடப் பையனுக்கு நேரமில்லை. பெண்ணின் தாயார் அவர்கள் அருகே வந்து நின்ருள். உயரமானவள், எதற்கும் மசியாதவள். கத்தோலிக்க மத விசாரணை மன்ற உறுப்பினர் போல உயர்ந்த தலை மூடி கொண்ட பழுப்பு நிற மழைக்கோட்டு அணிந்திருந்தாள் அவள்.

''தத்தியானு! எனக்குத் தெரியுமே நீ இப்படிச் செய்வாய் என்று! உன்னை ஒரு நிமிஷங்கூடத் தனியாய் விடக் கூடாது! வா, போவோம். நாம் இப்போது இறங்க வேண்டும். பலசரக்குக் கடையில் காரியம் இருக்கிறது'' என்ருள்.

பையனை அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. சிறுமியோ கவனித்துப் பார்த்தாள். போகும்போது வேண்டுமென்றே உரத்த குரலில், ''போய் வருகிறேன், வணக்கம்!'' என்று விடை பெற்றுக்கொண்டாள்.

''வணக்கம்!'' என்று வெடுக்கெனச் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான் பையன். தன் முகம் மறுபடி சிவப்பேறுவதாக அவனுக்குத் தோன்றியது. அப்படி அவன் என்ன செய்துவிட்டான்? நட்சத்திரங்கள் வானத்தில் தென்படாமல் இருக்கும் வேளையில்கூட எங்கே எந்த நட்சத்திரம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் வழியைச் சிறுமிக்குக் கற்றுக் கொடுக்க விரும்பினன்....

பையன் ஜன்னல் அருகே நகர்ந்து கொண்டான். ஏதோ கூர்மையானது அவன் விலாவில் உறுத்தியது. முகத்தைச் சுளித்து, சட்டைப் பைக்குள் கையை விட்டான். சாக்கட்டி அவன் கைக்குத் தட்டுப்பட்டது.

ஸர்க்கஸின் பக்கத்தில் கடைசி நிறுத்தத்தில் பையன் டிராமிலிருந்து இறங்கினன். ஸர்க்கஸ் கூடத்தின் வெளுத்த கும்

மட்டம் பிரமாண்டமான வெள்ளிக் குடை போலத் தோற்றம் அளித்தது. அதன் இறப்புக்கு அடியில் பளிச்சிட்டன கண்ணுடி நாடாக்கள் போன்ற நீண்ட ஜன்னல்கள். அவற்றுக்கு உள்ளே கவர்ச்சியான வண்ணப் பெருக்கு ஒன்று மின்னியது. அங்கே வெள்ளிக் குடையின் காப்பில் பல்வண்ணக் களியாட்டம் பொறி சிதறியது, கணீரென ஒலித்தது. வெளியே குதித்து வந்தது இசையொலி. வெளி வந்ததுமே கனத்த துளிகளாகத் தரையில் சுவறி விட்டது போல அது அடங்கிவிட்டது. ஈரப் பலகைகளின் வாடை கடுமையாக அடித்தது. ஸர்க்கஸ் புகுவாயிலுக்கு மேலே விலங்குப் பயிற்சி நிபுணி புக்ரீமொவாவின் சிங்கங்களுடைய பிரமாண்டமான ஒட்டுப்பலகை உருவங்கள் சிவந்த வாய்களைத் திறந்தவாறு நின்றன. அவை நனைந்திருந்தன, கொஞ்சங்கூட அச்சம் ஊட்டுபவையாக இல்லை. சந்துப் பூனைகள் போல நிறம் மங்கி ஏக்கம் கொண்டிருந்தன. பையனுக்கு அவற்றின்மேல் இரக்கம் உண்டாயிற்று.

அந்த மாதிரி நின்று மற்றவர்களின் இன்பக் கொண்டாட்டத்தை உற்றுக் கேட்பது அலுப்பூட்டிற்று. பையன் நிறுத்தத்துக்குத் திரும்பி, ரெயில் நிலையத்திலிருந்து உலோகத் தொழிலாளர் நகருக்குப் போகும் ''நாலாம் நம்பரில்'' ஏறிக் கொண்டான்.

நல்லியல்பு உள்ள கண்டக்டர் யுவதி அவனைப் பார்த்தாள், கொட்டாவி விட்டாள், பேசாதிருந்துவிட்டாள். போகட்டுமே, பாவம். இடங்கள் நிறையக் காலியாய் இருக்கின்றனவே.

டிராம் வண்டி அனேகமாக வெறுமையாய் இருந்தது. யாரோ ஒரு மாமா ஜன்னலோடு ஒண்டியபடி, தொப்பியைக் கண்களை மூடும்படி இழுத்து விட்டுக்கொண்டு குறட்டை விட்டார். முன் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தார் இராணுவக் காப்டன் ஒருவர்.

அவர் அழகர். கால்மேல் கால் போட்டு நேராக உட்கார்ந்திருந்தார். வண்டி உலுக்கிப் போட்டபோது அவருடைய பூட்சு நுனி ஆடிற்று, அதன்மேல் விளக்கொளி பிரதிபலித்தது. இத்

தகைய பருவ நிலையில் காப்டனின் பூட்சுகள் ஈரம் படாமல் பளபளத்தது ஆச்சரியமாய் இருந்தது. பழுப்பு நிற இடை வாரும் பொத்தான்களும் தொப்பி முன் விளிம்பும் மழுங்கச் சிரைத்த மோவாயுங்கூடப் பளிச்சிட்டன. பச்சைத் தோள்பட் டையில் பதவிச் சின்ன நட்சத்திரங்கள் மஞ்சள் கதிர்கள் வீசிச் சுடர்ந்தன. அவை ஒன்று சேர்ந்து மிருகசீர்ஷ நட்சத்திரக் கூட்டத்தை ஒத்திருந்தன.

காப்டனின் மடிமீது கிடந்தது ஈரத்தால் கறுத்த மழைக் கோட்டு. மழைக்கோட்டின்மேல் இருந்தது குடை. வளைந்த வெள்ளைப் பிடி வைத்த பெரிய கறுப்புக் குடை.

பையன் குடையைப் பார்த்தான், காப்டனிடம் பேசத் தயங்கினன். ஆனல் என்ன பேச வேண்டும் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. தனது வியப்பூட்டும் யோசனையை இனியும் தனக்குள்ளேயே வைத்திருக்க அவனுக்கு முடியவில்லை, விருப்ப மும் இல்லை. அவன் ஒருவனுக்கு மட்டுமே அது தேவை இல்லை. எந்த விதக் கண்டுபிடிப்பும், மிக அற்பமான கண்டுபிடிப்புகூட, மற்றவர்களுக்குக் களிப்பூட்ட வேண்டும் என்று அவன் உணர்ந் தான். ஆனல் சரியான முறையில் இதை எடுத்துச் சொல்லத் தன்னல் முடியாதோ என்று பயந்தான்.

''தோழர் காப்டன்... உங்களிடம் பேச அனுமதியுங்கள்'' என்ருன்.

காப்டன் நிமிர்ந்து பார்த்தார். அவர் ஆச்சரியம் அடைந் திருந்தாலும் பையன் அதைக் காணவில்லை. காப்டனின் முகம் கலக்கம் அடையாதிருந்தது. அப்படித்தான் இருக்க வேண்டும் போலும்.

''நல்லது, பேசு'' என்று அனுமதித்தார்.

''உங்கள் குடையில் நட்சத்திரங்கள் பொறிக்கிறேன், விரும்புகிறீர்களா?'' என்று கேட்டுப் பெருமூச்சு விட்டான் பையன்.

''என்ன நட்சத்திரங்கள்?''

''ஆகாயத்தில் போலவே. அவற்றைக் கொண்டு நிச்சயப் படுத்திக் கொள்ளலாம்....''

காப்டனின் இடது புருவம் சிலிர்த்தது.

''பொறு. எனக்கு விளங்கவில்லை. சரியான முறையில் சொல்லு. எந்த ஆகாயத்தில்? எந்த நோக்கத்திற்காக?''

''நல்லது'' என்று இசைந்தான் பையன். ''நான் விளக்குகிறேன். விஷயம் இதுதான். குடையை விரித்து அதன் உட்புறம் வானத்தின் வரைபடத்தில் இருப்பது போலவே விண்மீன்களைச் சரியாகக் குறித்தால் ஒரு சிறு நட்சத்திரக் காட்சிசாலை நமக்குக் கிடைக்கும். இதை நானே சிந்தித்துக் கண்டுபிடித்தேன்'' என்று அடக்கமாட்டாமல் கூறினான்.

''எதற்காக?''

''ஊம்... எனக்குத் தெரியாது.... தானாகவே உதித்தது இந்த எண்ணம்'' என்று அசட்டுப் பிசட்டென்று புன்னகை செய்து தோள்களைக் குலுக்கினான் பையன்.

''நான் கேட்டது அது அல்ல. உன் நட்சத்திரக் காட்சிசாலையின் நோக்கம் என்ன? ஒவ்வொரு பொருளுக்கும் நோக்கம் இருக்க வேண்டும்'' என்று தெளிவுபடுத்தினார் காப்டன். அவர் தணிந்த குரலில் பேசினார். ஒவ்வொரு சொல்லும் அடக்கிய கொட்டாவி போன்று இருந்தது. மழித்த மோவாய் அனேகமாக அசையவே இல்லை.

''ஊம்... என்ன நோக்கம்... நோக்கம் இதுதான். எங்கே எந்த நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று பகலில்கூடத் தெரிந்து கொள்ளலாம். இரவில் மேகங்கள் கவிந்திருந்தாலும் தெரிந்துகொள்ளலாம். குடையைச் சரியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும், அவ்வளவுதான்.... துருவ நட்சத்திரத்தை நோக்கித் திருப்பிக் கொள்ளவேண்டும். அப்புறம்....''

''நல்லது. எதற்காக?''

''துருவ நட்சத்திரம் எதற்காக என்கிறீர்களா? எதற்காக என்றால் அது வானத்தில் எப்போதும் ஒரே இடத்தில் இருக்கிறது. அது அச்சு போல. பூமியிலிருந்து பார்க்கும்போது எல்லா நட்சத்திரங்களும் அதைச் சுற்றிச் சுழல்வது மாதிரித் தோன்றுகிறது.''

காப்டனுக்கு இந்த விஷயம் தெரியாதா என்ன?

காப்டன் சற்று முகம் சுளித்தார்.

''நான் கேட்டது இதை அல்ல. எங்கே எந்த நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று எதற்காகத் தெரிந்து கொள்ள வேண்டும்? திசை அறிவதற்காகவா? குடை விளையாட்டுத்தனமானது ஆயிற்றே. இன்னும் துல்லியமான முறைகள் இருக்கின்றன. அல்லது வேறு எதற்காகவாவதோ? எதற்காக?'' என்றார்.

மெய்யாகவே, எதன் பொருட்டு? என்ன உபயோகம் அதனால்? பையனுக்குத் தெரியவில்லை. தனது கண்டுபிடிப்பால் அவன் மகிழ்ந்தான். அதனால் என்ன பிரயோஜனம் என்பதை அவன் எண்ணிப் பார்க்கவே இல்லை. தவிர, பிரயோஜனம் என்பதுதான் என்ன?.. அறிமுகமான விண்மீன்கள், நண்பர்களைப் போல அவற்றைப் பார்த்துக் கண்சிமிட்டலாம்—இது பிரயோஜனமா? அல்லது வீண்தானா?

வானத்தில் ஒரு நட்சத்திரம் கூடத் தென்படாதபோதும் பிரசியூஸ், சிம்மம், அண்டிரமீடா முதலிய பல்வேறு நட்சத்திரக் கூட்டங்கள் எந்தெந்தப் பக்கங்களில் இருக்கின்றன என்று தெரிந்து கொள்வது யாருக்கேனும் வேண்டுமா?

அல்லது இது ஒருவருக்குமே வேண்டாமோ?

''தெரியாது எனக்கு'' என்று சொல்லி விட்டு, காப்டனைப் பாராமலே பேச்சைத் தொடர்ந்தான் பையன். ''நான் நினைத்தேன்... உதாரணமாக, சந்திரனுக்கோ செவ்வாய்க்கோ விண்வெளிக் கப்பல் அனுப்பப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். இன்று அது இன்ன நட்சத்திரக் கூட்டத்தில் இருக்கிறது, நாளை இன்ன நட்சத்திரக் கூட்டத்தில் என்று அறிவிக்கப்படுகிறது. ஆகாயத்திலோ, மேகம் கவிந்திருக்கிறது. ஒன்றும் புலப்படவில்லை. அப்போது குடையை விரித்து வேண்டியபடித் திருப்பிக் கொண்டால் போதும், எங்கே எந்த நட்சத்திரக் கூட்டம் இருக்கிறது என்பது தெரிந்துவிடும். ராக்கெட்டு எங்கே என்று கண்டு கொள்ளலாம்....''

''ராக்கெட்டு தன் இலக்கை எட்டிவிட்டால் அதுவே போதும் நமக்கு. வானொலி அலைப் பிரதிபலிப்பின் உதவியால் இடநிலை அறியும் ரேடியோ லொக்கேட்டர் கருவிகள் அதைக் கண்காணித்துக் கொள்ளும்'' என்றார் காப்டன்.

ஜன்னல் ஓரத்தில் இருந்த தூங்குமூஞ்சி மாமா அசைந்தார், தொப்பி விளிம்பை மேலே நகர்த்தினார்.

''என்ன, மறுபடி ராக்கெட்டு அல்லது ஸ்பூத்னிக் செலுத்தப்பட்டிருக்கிறதா? ஊம்?'' என்றார்.

''அட நீர் தூங்கும்! இறங்குமிடம் வந்ததுமாவது விழித்துக் கொள்ளும்'' என்று உறங்கி வழிந்தபடி சொன்னாள் கண்டக்டர்.

டிராம் வண்டி நின்றது. காப்டன் சட்டென்று எழுந்தார். நேரான, நெடிய மேனியர் அவர். தோள்கள் மேல் பச்சை மழைக்கோட்டைப் போர்த்துக்கொண்டார்.

''குடைகளில் வரைவது கூடாது'' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டுக் கதவுப் பக்கம் நடந்தார். குடையை மழைக்கோட்டுக்கு அடியில் மறைத்துக்கொண்டார். காப்டன்கள் குடைகளுடன் நடக்கக்கூடாது போலும். இவர் தமக்காக அல்ல, வேறு யாருக்காகவோதான் குடை வைத்துக் கொண்டிருக்கிறார் போலும்.

''கூடாதாம்'' என்று வறட்டுச் சிரிப்புடன் சொல்லிக் கொண்டான் பையன்.

தோல்வி அவனைக் கலவரப்படுத்தவில்லை. கண்டுபிடிப்பால் உண்டான மகிழ்ச்சி முன்பு எப்படி மனத்தாங்கலை அமுக்கிக் கொண்டு மேலெழுந்ததோ அப்படியே வெதுவெதுப்பான நீரூற்றுபோல அவனுக்குள் மீண்டும் குமிழியிட்டுப் பொங்கியது. பையன் காத்திருந்தான்: நட்சத்திரங்கள் வேண்டியிருக்கும் மனிதன் திடீரென எதிர்ப்படலாமே.

இரண்டு பேர் டிராமில் ஏறினார்கள். பெட்டி முழுவதும் அனேகமாகக் காலியாய் இருந்தது. ஆனாலும் அவர்கள் பின் பக்கத்தில் நின்று கொண்டார்கள்.

ஒருவன் உயரமான இளைஞன். அவன் குட்டையான வெளிர் நிற மழைக்கோட்டு அணிந்திருந்தான். அவன் முகம் பருத்த மூக்குக் கண்ணாடியும் உயர்ந்த நெற்றியும் மட்டுமே கொண் டிருந்தது போலத் தோன்றியது. கரிய சுருட்டை முடிக்கற்றை நெற்றிமேல் விழுந்திருந்தது. அதன் மீது மழைத் துளிகள் தெளித்திருந்தன. இரண்டாமவன் முதலவனைவிட வயதில் நிரம்ப மூத்தவனாகவும் சாதாரணமாகவும் காணப்பட்டான்: பகல் வேலையால் களைத்த, முதிர்ந்த முகம், கறுப்பு வேலையுடை, சாம்பல் நிறத் தொப்பி. குடையைக் கக்கத்தில் இடுக்கியிருந் தான்.

ஒருவருடைய உண்மைப் பெயர் தெரியாவிட்டால் பையன் தானாகவே அவருக்குப் புனைபெயர் சூட்டுவது வழக்கம். புனைபெயர்கள் அவனுக்குச் சட்டென்று தோன்றிவிடும். அது அவனுக்கு இயல்பாகவே கைவந்த கலை.

முதல்வனுக்குச் ''சதுரங்க ஆட்டக்காரன்'' என்று பெய ரிட்டான். இரண்டாமவனுக்கு ''மேஸ்திரி'' என்ற பெயர் மிகவும் பொருந்துவதாகப் பையனுக்குத் தோன்றிற்று.

அவர்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள். சரியாகச் சொன் னால் ''மேஸ்திரி'' பேசினான், மற்றவன் மரியாதையாகக் கேட் டுக்கொண்டிருந்தான். ஆனாலும் பேச்சு அவனுக்கு நிரம்பச் சுவைப்படவில்லை என்பது தெரிந்தது.

''நான் அவனை ஆளாக மதித்து, காரியப் பாங்கிலே சொன்னேன்: 'என்ன அடா, உதவாக்கரை, பெரிய ஆர்க்கிமி டீஸ்* போல நடிக்கிறாய், உன் கண்கள் எங்கே இருக்கின்றன? எந்த இடத்தில்? இங்கே அனுமதிக்கப்பட்ட இடைவெளி எவ் வளவு? சைபர்-சைபர் மூன்று! நீ விட்டிருப்பதோ சைபர் ஒன்று' என்று. அதற்கு அவன் சொல்லுகிறான்: 'போங்கள், தொழிற்கூடத் தலைவரிடம் புகார் செய்யுங்கள். வீணாகக் குற்றங் கூற நான் அனுமதிக்க மாட்டேன்....' ''

---

* **ஆர்க்கிமிடீஸ்**—தொன்மைக் கிரீஸ் நாட்டைச் சேர்ந்த மாபெரும் கணித விற்பன்னர்.

''வீணுகவாமோ?'' என்று வறட்டுச் சிரிப்புச் சிரித்தான் கண்ணுடிக்காரன்.

''வீணுக என்கிருன்.... அவ்வளவுதான், நான் ராஜதந் திரத்தை மூலையில் ஒதுக்கிவிட்டேன். 'தலைவரிடம் நான் போக மாட்டேன். உனக்கு நானேதான் தலைவன். உன் மூளையில் இதைப் பதிய வைப்பதற்காக இதோ இந்த ரப்பர்க் குழாயை மடித்து உனக்கு எப்படிக் கொடுப்பேன் தெரியுமோ....' ''

இவ்வாறு சொல்லி, குடை வைத்திருந்த கையை லேசாக வீசி ஆட்டிஞன்—தன்னுடன் விவாதித்த கெடுமதியனை எப்படித் தண்டிக்க நினைத்தான் என்று காட்டுவதற்காக. ஆனுல் காட்ட முடியவில்லை. குடை எதிலோ தாக்கியது, பின்னுலிருந்து குறுகிய பெருமூச்சு கேட்டது. சரியாகச் சொன்னுல் பெருமூச்சு அல்ல, எதிர்பாராத வலி ஏற்படும் போது ஒருவன் பற்களின் இடை வழியே காற்றை உறிஞ்சும் சத்தம்.

''மன்னிக்க வேண்டும்!'' என்று அவசர அவசரமாகச் சொல்லிவிட்டு, அப்புறம் திரும்பிப் பார்த்தான் ''மேஸ்திரி''. திரும்பியதும் பையனைக் கண்டான்.

பையன் அடிபட்ட முழங்காலை உள்ளங்கையால் அழுத்திக் கொண்டிருந்தான். ஒரு நொடிப்போது ''மேஸ்திரியின்'' முகம் கலக்கமும் நல்லியல்பும் உள்ளதாகக் காணப்பட்டது. அப்புறம் அவன் முகஞ் சுளித்தான்.

''ஊம்... பெட்டியில்தான் கூட்டம் இல்லையே, கொஞ்சம் தள்ளி நின்றிருக்கலாம் நீ. அடி பட்டுவிட்டதோ?.. அடே யப்பா, எப்படி நனைந்திருக்கிருய் நீதான்!'' என்ருன்.

பையனைப் பற்றி உண்டான பயத்தையும், ஒருவேளை அவ் வளவு அவசரப்பட்டு மன்னிப்பு கேட்டுவிட்டதால் ஏற்பட்ட கூச்சத்தையும் இப்படி உளமாரப் பேசியதன் மூலம் அவன் மறைக்க முயன்ருன்.

''எவனுக்குப் பட வேண்டுமோ அவனுக்குப் படவில்லை'' என்று தேவையற்ற குதூகலத்துடன் சொன்ஞன் ''சதுரங்க ஆட்டக்காரன்.'' ''கவனித்துப் பார்க்காமல் விட்டுவிட்டீர்கள், விக்தர் ஸெம்யோனவிச்'' என்ருன்.

பையன் நிமிர்ந்தான்.

''குற்றம் என்னுடையதுதான்....இங்கே நிற்கிறேனே....'' என்று ''மேஸ்திரியின்'' முகத்தைப் பார்த்துச் சொன்னான். அந்தப் பார்வையில் வெளிப்படையாகக் கூறப்படாத வேண்டு கோள் இருந்தது.

''சரிதான்... நீயே....''

''மெய்யாக நானே தான்....'' என்று முறையிடுபவன் போலத் திருப்பிச் சொன்னான் பையன். ''நான் ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தேன்'' என்றான்.

''டிராம் வண்டியில் யோசனை செய்வது ஆழ்ந்த, கவி இயல்புக்கு உரிய குணம். கால் சரியாகிவிடும்'' என்று புன்னகை செய்யாமல் மட்டுக்கு மேல் ஆழ்ந்த முறையில் சொன்னான் ''சதுரங்க ஆட்டக்காரன்.'' ''... நல்லது, அப்புறம் என்ன நடந்தது, விக்தர் ஸெம்யோனவிச்? ரப்பர்க் குழாயில் நிறுத்தி னீர்கள் கதையை'' என்றான்.

''மாமா, நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்று தணிந்த குரலில் மளமளவென்று பேசத் தொடங்கினான் பையன். ''உங்கள் குடையில் நட்சத்திரக் கூட்டங்களை வரைகிறேன், கொடுங் கள். நட்சத்திரக் காட்சிசாலையில் போலவே. குடையை விரித்தீர்களானால் எங்கே எந்த நட்சத்திரக் கூட்டம் இருக் கிறது என்பது உடனே தெரிந்துவிடும்—ஆகாயத்தில் மேகங் கள் சூழ்ந்திருந்தாலுங்கூட. அல்லது பகல் வேளையில். வானத் தில் துருவ நட்சத்திரம் உள்ள இடத்தை நோக்கி இருக்கும் படிக் குடையின் பிடியை வைத்துக் கொள்ள வேண்டும், அவ்வளவுதான். அப்புறம் திருப்ப வேண்டும்....'' முதல் வார்த்தைகளிலேயே தன் விருப்பத்தை வெளியிட்டுவிட வேண்டும் என்று உணர்ந்து, கேள்விகளை எதிர்பார்க்காமல் எல்லா விவரங்களையும் ஒரேயடியாகச் சொல்லித் தீர்த்து விட்டான்.

அவன்தான் ஜனங்களுக்கு நட்சத்திரக் கூட்டங்கள் பரிசளிக் கிறானே!

பையன் இப்போது ''நட்சத்திரங்கள்'' என்று சொல்லாமல் ''நட்சத்திரக் கூட்டங்கள்'' என்று வேண்டுமென்றே சொன்னான். இதனால் அதிகப்படியாக விளக்குவது தேவை இல்லாது போய்விட்டது. அவன் ஆகாயத்தைப் பற்றிப் பேசுகிறான் என்பது உடனே தெளிவாகிவிட்டது.

முடிவுவரை காது கொடுத்துக் கேட்க மாட்டார்களோ என்ற பயத்தால் அவன் சொற்களை மென்று விழுங்கிக்கொண்டு அவசரமாகப் பொரிந்து கொட்டினான், சொன்னதைத் திரும்பச் சொன்னான், மறுபடியும் எல்லாவற்றையும் விரைவாகவும் புரியும்படியும் சொல்லத் தொடங்கினான்.

திடீரென்று அவன் பேச்சை நிறுத்திவிட்டான். சொல்ல வேண்டியது எல்லாவற்றையும் சொல்லியாகிவிட்டது என்றும் தன் பேச்சில் யாரும் குறுக்கிடவில்லை என்றும் அவன் சட்டெனப் புரிந்து கொண்டான். மனக்குழப்பத்துடன் பதிலை எதிர்பார்த்தான்.

''பிரமாதமான வேலை. இதை நீயே கண்டுபிடித்தாயா என்ன?'' என்று கேட்டான் ''மேஸ்திரி.''

''ஆமாம்.... ஏன்? இது சுலபம்.... பலனாக நட்சத்திரங்கள் கிடைக்கும்.''—இந்தக் கடைசி வார்த்தைகளைச் சொன்ன போது பையனுடைய குரல் விழுந்து போயிற்று. ''எதற்காக'' என்று ''மேஸ்திரியும்'' இதோ கேட்கப் போகிறான் என்று எண்ணினான். பார்வையைத் தாழ்த்தி, ''மேஸ்திரியின்'' சேறு தெளித்த மொண்ணை நுனி பூட்சுகளைப் பார்க்கலானான்.

''அக்கறைக்குரிய விஷயம்'' என்று சொன்னான் ''சதுரங்க ஆட்டக்காரன்''.

''மேஸ்திரி'' சிந்தனை செய்தான்.

''காரிய ரீதியாகச் சொன்னால், இது ஆகாயத்தின் திட்ட வரைப்படம் மாதிரி, இல்லையா?'' என்று அப்புறம் கேட்டான்.

''ஆமாம், வரைப்படம் போலத்தான். அதைவிட மேல். எடுத்துப் போகக்கூடிய நட்சத்திரக் காட்சிசாலை மாதிரி. வானத்தில் எங்கே எந்த நட்சத்திரக் கூட்டம் இருக்கிறது

என்பதை மேகங்களின் ஊடாகப் பார்ப்பது போலத் தெரிந்து கொள்ளலாம்'' என்று பையன் சந்தோஷமாக விவரிக்கலானான்.

''இரு, இரு'' என்று அவனை இடை நிறுத்தி, புகையிலைக் கறையால் மஞ்சள் பாரித்த விரலால் மோவாயைத் தேய்த்துக் கொண்டான் ''மேஸ்திரி.'' ''இது எனக்கு முழுவதும் தெளிவாகவில்லை. மொத்தத்தில் விளங்குகிறது, ஆனால் பூராவும் அல்ல.... உதாரணமாக, துருவ நட்சத்திரத்தைப் பற்றிய விஷயம் புரியவில்லை. இதை இங்கே எப்படித் தெரிந்து கொள்வது?''

''விக்தர் ஸெம்யோனவிச், நான் புரிந்து கொண்டது எப்படி என்றால்'' என்று குறுக்கிட்டான் ''சதுரங்க ஆட்டக்காரன்.'' அவனுடைய மூக்குக் கண்ணாடி உற்சாகமாகப் பளிச்சிட்டது. ''தனிச் சிறப்பான முறையில் பையன் சிந்தித்திருக்கிறான், ஆனால் சித்தாந்தம் மிகச் சாதாரணமானது. வானக் கும்மட்டம் கற்பனையில் இருபத்து நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு நாளில் இருபத்து நான்கு மணிகள் அல்லவா?..''

''இது தெரிந்த சேதிதான்'' என்று வறட்டுச் சிரிப்பு சிரித்தான் ''மேஸ்திரி.''

''ஆகவே, இந்த நேரத்தில் வானம் நமக்கு மேலே ஒரு முழுச் சுற்று சுற்றுகிறது. அப்படித்தானே?'' என்று தொடர்ந்தான் ''சதுரங்க ஆட்டக்காரன்.''

''அப்படித்தான்!'' என்று களிப்புடன் கூவினான் பையன். ''நான் இதைத்தான் விரும்பினேன்....''

''பொறு. ஆகையால் குடையையும் நேரத்துக்குப் பொருத்தமாகத் தலைக்கு மேலே திருப்ப வேண்டும். முன்னதாகக் கணக்கிடுவதுதான் தேவை....''

''நான் கணக்கிட்டு விட்டேன், சத்தியமாக!'' என்று கூறி, ''சதுரங்க ஆட்டக்காரனை'' நம்பிக்கையுடன் பார்த்தான் பையன். ''நான் சரிபார்த்தேன்—வரைப்படத்தின்படியும் ஆகாயத்தின்படியும். எல்லாம் சரியாய் இருக்கும். எல்லாவற்றையும் நான் விளக்குகிறேன். முதலில் துருவ நட்சத்திரத்தை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதையும் சொல்லுகிறேன்....''

''உண்மையாகவே இது அக்கறைக்கு உரியது'' என்று மறுபடி சொன்னுன் ''சதுரங்க ஆட்டக்காரன்''.

''ஆமாம்.... ஆனுல் இந்த மாதிரி விவகாரத்தைப் பார்த்தால் என் வீட்டுக்காரி என்ன சொல்லுவாள் என்பது உனக்கு அக்கறைக்கு உரியதாக இல்லையா?''

''நீங்கள் என்ன, விக்தர் ஸெம்யோனவிச்! அவள் என்ன சொல்லப் போகிருள்.... அவளுக்கு இது பிடிக்கும்'' என்று சொல்லிவிட்டு, ஒரு கணம் பெரியமனிதப் பாங்கை விட்டுவிட்டுப் பையனைப் பார்த்துக் கண் சிமிட்டினுன் ''சதுரங்க ஆட்டக்காரன்.''

''மேஸ்திரி'' இதைப் பார்க்கவில்லை. அவன் உள்ளங்கைகள் மேல் குடையைத் தன் எதிரே வைத்துக் கொண்டு அதைத் திருப்பினுன், கூர்ந்து பார்த்தான், ஆனுல் இன்னும் தயங்கினுன். குடை உயிர்ப்பிராணி போலவும் பையன் அதன் மனத்தைப் புண்படுத்திவிடுவானே என்று பயப்படுவதுபோலவும் இருந்தது அவன் பார்வை.

''எதனுல் வரையப் போகிருய்?''

''சாக்கட்டியால். பயப்படாதீர்கள். நான் ஜாக்கிரதையாக வரைவேன்.''

''சரி, உன் திட்டம் என்ன? ஒன்று விடாமல் எல்லா நட்சத்திரங்களையும் வரைவதா?'' என்று கேட்டான் ''மேஸ்திரி.''

''அட நீங்கள் என்ன? எல்லா நட்சத்திரங்களையும் நினைவு வைத்துக் கொள்ள முடியுமா என்ன? பெரிய விண்மீன்களை மட்டுமே வரைவேன். நட்சத்திரக் கூட்டங்களைக் குறிப்பதற்காக.''

''அப்படியானுல் பெயர்களையும் எழுது'' என்று பெருமூச்சு விட்டான் ''மேஸ்திரி.'' ''இல்லாவிட்டால் என்ன பயன்? எனக்கு சப்தரிஷி மண்டலம் ஒன்று தவிர வேறு எந்த நட்சத்திரக் கூட்டமும் பிறந்ததுமுதல் இதுவரை தெரியாது. லகுஸப்தரிஷி மண்டலங்கூடத் தெரியாது....எழுதுவாயா பெயர்களை?''

''எழுதுகிறேன்!'' என்று குதூகலமாக இசைந்தான் பையன்.

அவன் நனைந்த பைக்குள் கையால் துழாவிச் சாக்கட்டியைத் தொட்டு உணர்ந்தான்.

''பிரமாதம்'' என்று ''மேஸ்திரி'' மறுபடி நீட்டி முழக்கி, எதிர்பாரா விதமாகப் புன்னகை செய்தான். அவனுடைய பெரிய மஞ்சள் பற்கள் பாதி திறந்தன. ''என் வீட்டுக்காரி குடை பிடித்துக்கொண்டு சந்தைக்குப் போவாள். அதில் ஸிரியஸ் நட்சத்திரத்தை நிமிர்ந்து பார்ப்பாள், நீர்க் குட்டத்தில் முகங்குப்புற விழுவாள். நல்ல கதைதான் நடக்கும். சரி, வரை. நாங்கள் வெகு தூரம் போக வேண்டியிருக்கிறது.''— இப்படிச் சொல்லிக் குடையை விரித்தான்.

குடை கறுப்பாக இல்லை.

நனைந்து மடக்கப்பட்டிருந்த போது மங்கிய வெளிச்சத்தில் அது கறுப்பாகத் தெரிந்தது. இப்போதோ, அது சாம்பல் நிறக் கம்பிகள் கொண்ட பழுப்பு நிறக் குடை என்பதை எல்லோரும் கண்டார்கள்.

சாம்பல் நிறப் பல் வைத்த பழுப்பு வானம் எங்காவது உண்டா?

பையன் பேசாமல் சாக்கட்டியைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

''அடத் தூ, இது நாசமாய்ப் போக!'' என்று ஈர பூட்சு அடிகளால் துவைக்கப்பட்டிருந்த தரையை விரித்த குடையால் இடித்தான் ''மேஸ்திரி.'' ''விஷயம் என்ன தெரியுமா? பிடிகள் ஒரே மாதிரியானவை. எத்தனையோ தடவை இந்தக் குழப்பம் ஏற்பட்டாகிவிட்டது. இது கிளாவ்தியாவின் குடை. அவள் எங்கள் தொழிற்சாலையில் வேலை அளவுக் கணக்கு அதிகாரி'' என்றான்.

''வருந்தத்தக்க விஷயம்'' என்றான் ''சதுரங்க ஆட்டக்காரன்''....

டிராம் வண்டி களைப்புடன் கடகடத்துச் சென்றது. ஏறு மேடைக்கு மேலே தூக்கக் கலக்கத்துடன் மினுக்கிட்டது மஞ்சள் விளக்கு. ஒரு சில பயணிகள் பெட்டியில் உறங்கி வழிந்

தார்கள். மழை மட்டுந்தான் வெளியே சோர்வின்றிக் களிப்புடன் நர்த்தனம் செய்து கொண்டிருந்தது.

ஏழாம் நம்பர் டிராம் வண்டி உலோகத் தொழிலாளர் நகரிலிருந்து மையப் பகுதிக்குச் சென்றது. வெகு நேரமாக ஒருவரும் ஏறவில்லை. ஏற்கனவே வண்டியில் இருந்தவர்களும் முதல் நிறுத்தத்தில் ஏறியவர்கள்தாம்.

அப்புறம் ஏறினான் ஒரு சிறுவன். குட்டை மேல்கோட்டும் ரப்பர் மேல்ஜோடுகளும் போட்டிருந்தான் அவன். ஜோடுகளின் அகன்ற முழங்கால் பகுதிகள் சிறுவனின் கால்களில் அடித்துக் கொண்டிருந்தன. ஜோடுகள் சிறுவனுக்கு மிகப் பெரியவை. ''அம்மாவுடையவை'' என்று எண்ணினான் பையன்.

சிறுவன் ஏறு மேடை வாயிலில் தொற்றினான். அவனுடைய ஒரு கையில் பால் பாத்திரமும் மறு கையில் விரித்த குடையும் இருந்தன.

சிறிய பச்சைப் பாத்திரம் அமைதியாகவே நடந்து கொண்டது. ஒரே ஒரு தரந்தான் அதன் அடி படியில் மாட்டிக் கொண்டது, அதன் மூடி கோபத்துடன் குலுங்கிற்று. ஆனால் அதுவும் அச்சமூட்டுவதாக இல்லை. மூடி நாடாவால் பிடியுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. எனவே பாத்திரத்திலிருந்து அகன்று விழவே அதனால் முடியாது.

கனத்த குடையோ, முரண்டு பிடித்தது. அது விரிந்த கறுப்புத் துணியுடன் கம்பிகளை அகலப் பரப்பிக்கொண்டு, வாயிலுக்குள் நுழைய மறுத்தது. அவ்வளவு பெரிய, பிடிவாதக்காரக் குடையை ஒரு கையால் சமாளிப்பது சிறுவனால் முடியுமா என்ன?

டிராம் வண்டி நகர்ந்தது. சிறுவன் அதிர்ச்சியால் திடுக்கிட்டான். பிறகு ஆத்திரம் அடைந்து முழு பலத்துடன் குடையை இழுத்தான்.

''ஒடித்துவிடுவாய். அட, என்ன செய்கிறாய் நீ, மெய்யாகவே....''

இவ்வாறு சொல்லி, முன்னே போய்க் குடையின் பிடியைப் பற்றிக்கொண்டான் பையன்.

''மடக்க வேண்டாமோ முதலில'' என்று குடையை மடக்கினுன். குடை கீழ்ப்படிவுடன் உள்ளே வந்தது.

பழைய பள்ளிக்கூடத் தொப்பியின் உடைந்த விளிம்பின் அடி வழியாகப் பார்த்து, குற்ற உணர்வுடன் இமைகளைக் கொட்டினுன் சிறுவன்.

''இதை மடக்குவது சிரமம்'' என்று விளக்கினுன்.

''சிரமமாம்''.... இந்த மாதிரி வாண்டுகளை ராத்திரி வேளையில் எங்கோ அனுப்புகிருர்களே, அவர்களைச் சொல்ல வேண்டும்!... ''என்ன காரியமாய்ப் போகிருய்?'' என்று கடுமையான குரலில் கேட்டான் பையன். முதல் வகுப்பு மாணவன் அல்லது இன்னும் பள்ளிப் படிப்பு தொடங்காதவன் ஆன இந்தச் சிறுவனுக்கு முன் அவன் இப்போது பெரியவனுக, பலசாலியாக விளங்கினுன்.

''புளித்த பாலாடை வாங்க'' என்று தயக்கத்துடன் பதில் சொல்லிவிட்டு மறுபடி விழிகளை நிமிர்த்தினுன் சிறுவன். தொப்பி விளிம்பின் நிழலில் அவை மிகக் கருமையாகவும் பெரியவையாகவும் தோன்றின. இரா வேளையில், அதிலும் மழையில் புளித்த பாலாடை வாங்க அவன் கடைக்குப் போகக் கூடாதோ என்னவோ. சுளித்த முகம் கொண்ட இந்தப் பெரிய பையனுக்கு அவனை விசாரணை செய்ய அதிகாரம் உண்டு போலும். ''வா, மிலீஷியா நிலையத்துக்குப் போய் விஷயத்தைத் தீர்மானிப்போம்'' என்ருே, இன்னும் பயங்கரமான எதையேனுமோ இவன் சொன்னுலும் சொல்லுவான்.—இப்படி எண்ணமிட்டான் சிறுவன்.

''உன் குடையில் நட்சத்திரங்களை வரைகிறேன், வரையட்டுமா?'' என்று கேட்டான் பையன்.

இது எதற்காக என்று அவனுக்கே விளங்கவில்லை. விண்மீன்கள் எப்படி இயங்குகின்றன என்பதே சிறுவனுக்குத் தெரியாதே. ஆனுலும் சொற்கள் திடீரென்று அவன் வாயிலிருந்து

வெளிப்பட்டு விட்டன. அவை அவன் நாக்கு நுனியில் இருந்தன போலும்—பொருத்தமான எந்தக் குடையைக் கண்டாலும் வெளிப்படத் தயாராக.

சிறுவனின் விழிகள் இன்னும் அகன்று கருமையாகின.

''நட்சத்திரங்களா?'' என்று திரும்பக் கேட்டுக் குட்டைப் புருவங்களை உயர்த்தினுன் அவன்.

''ஆமாம், நட்சத்திரங்கள்'' என்று மறுபடி சொன்னுன் பையன். இதோ சிறுவனுடைய குடையில் நட்சத்திரக் கூட்டங்களை வரையப் போகிறேம். இப்போதாவது இதற்கு வாய்க்கலாம் என்று எண்ணினுன்.

''குடை சின்ன ஆகாயம் போல இருக்கும், புரிகிறதா? சுற்றிலும் மேகங்கள் சூழ்ந்திருக்கும், மழை பெய்யும், ஆனுல் உன் தலைக்கு மேலே நட்சத்திரங்கள் தெரியும். உண்மையான ஆகாயத்தில் போலவே. விரும்புகிருயா இதை?'' என்ருன் பையன்.

''சின்ன ஆகாயமா?'' என்று கூவினுன் சிறுவன்.

''ஆமாம்! கொண்டா....''

பையன் அவசரப்பட்டிருக்கக் கூடாது. அவனுடைய அவசரம் சிறுவனைக் கலவரப்படுத்திவிட்டது.

''மாட்டேன்!'' என்று உரக்கக் கூறிக் குடையை உடம்போடு இறுக அழுத்திக்கொண்டான் சிறுவன். ''வேண்டாம்! தொடாதே!''

கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்திருந்த இரண்டு மாதர்கள் சிறுவனின் திகிலடைந்த குரலைக் கேட்டு ஒரே சமயத்தில் சட்டெனத் திரும்பிப் பார்த்தார்கள். சிறுவனை யார் தொந்தரவு செய்கிருர்கள்?

''நீ சுத்த அசடு. ஏதோ நான் உன்னைக் கொள்ளையடிப்பது போல அலறுகிருயே.... ஒருவரிடமும் இல்லாத மாதிரிக் குடை உன்னிடம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எக்கேடும் கெட்டுப் போயேன், எனக்கென்ன?'' என்று சோர்வுடன் சொன்னுன் பையன்.

வாயில் அருகிலிருந்து அகன்று காலி பெஞ்சியில் உட்கார்ந் தான்.

டிராம் இருண்ட பூங்காவின் ஓரமாகக் கடகடத்து விரைந் தது. வெளியே விளக்குகள் இல்லை. கண்ணுடி ஜன்னல் ஒளி புகாதது போலக் காணப்பட்டது. கறுப்பு நிலைக் கண்ணுடியை ஒத்த ஜன்னலில் பையன் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்தான்.

தன் பின்னே சிறுவனைக் கண்டான்.

சிறுவன் அவனுக்குத் தெரியாமல் பக்கத்தில் வந்திருந் தான். டிராம் சக்கரங்களின் இரும்புக் கணகணப்பில் சிறு வனுடைய ரப்பர் ஜோடுகளின் சளப்பொலி காதில் படவில்லை. பக்கத்தில் வந்து பெஞ்சியின் அருகே ஏதோ குற்றம் செய்து விட்டவன் போல நின்றுன் அந்தச் சின்னஞ் சிறுவன்.

''நீ வந்து... நிறைய நட்சத்திரங்கள் வரைவாயா?'' என்று தயக்கத்துடன் கேட்டான்.

''நிறைய'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறிச் சிறு வன் பக்கம் திரும்பிக்கொண்டான் பையன். ''உட்கார். நான் உனக்கு எல்லாவற்றையும் விளக்குகிறேன்'' என்றுன்.

சிறுவன் அருகில் அமர்ந்தான்.

பையன் குடையை விரித்து, அதன் கூர் முனையை முன் பெஞ்சு முதுகில் அழுந்தப் பொருத்தி, பிடியைத் தன் தோள் மேல் வைத்துக் கொண்டான். இப்போது அவனுக்கு எதிரே இருந்தது சிறு கும்மட்டத்தின் கரிய உட்புறம்.

''இதோ பார்'' என்று விரைப்பான துணியில் சாக்கட்டி யால் குத்தி, ''இதோ கம்பு இருக்கும் இடத்தில், ஆகாசத்தின் நட்ட நடுவில், எப்போதும் ஒரே புள்ளியில் இருக்கிறது துருவ நட்சத்திரம்'' என்றுன்.

''எப்போதுமா?'' என்று திரும்பக் கேட்டு, மறுபடி குட்டை வெளிர் புருவங்களை உயர்த்திஞன் சிறுவன்.

''ஆமாம், எப்போதும்.''

''பகல் வேளையிலோ?'' என்று தந்திரப் புன்னகை செய் தான் சிறுவன்.

''பகல் வேளையிலுந்தான். சூரிய வெளிச்சத்தில் நட்சத்திரங்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை.''

சிறுவன் கண்களைக் கொட்டினான்.

பையன் மேலே சொன்னான்:

''பார். இதோ இங்கே ஏழு நட்சத்திரங்கள் இருக்கின்றன. அகப்பை வடிவில். இதுதான் ஸப்தரிஷி மண்டலம், பெருங்கரடி என்று சொல்லப்படுவது.''

''கரடியா?''

''ஆமாம். நீ என்ன, இதைக் கேள்விப்பட்டதே இல்லையா?'' என்று பொறுமை இன்றி முகஞ் சுளித்தான் பையன்.

சிறுவன் தலையைத் தோள்மேல் சாய்த்துக் கொண்டான்.

''இவை நட்சத்திரங்களா?'' என்று சாக்கட்டிப் புள்ளிகளைச் சுட்டினான்.

''ஊம்... ஆமாம்'' என்று எச்சரிக்கையுடன் சொன்னான்.

''வேண்டாம்'' என்று பலமாகத் தலையை ஆட்டினான் சிறுவன். ''இந்த மாதிரி வேண்டாம். கிரணங்களோடு வரை.''

''எந்த மாதிரிக் கிரணங்களோடு?''

''இதோ, இந்த மாதிரி!'' என்று ஐந்து முனை நட்சத்திரத்தின் படத்தைக் காற்றில் வரைந்து காட்டினான் சிறுவன். ''பெரியவையாக'' என்றான்.

பையன் சாக்கட்டி இருந்த கையைத் தொங்க விட்டு ஜன்னல் பக்கம் திரும்பிக்கொண்டான்.

''அந்த மாதிரி நட்சத்திரங்கள் கிடையாது.''

''வரையேன்'' என்று தணிந்த குரலில் கெஞ்சினான் சிறுவன்.

''பெரிதாக வரைந்தால் எல்லா நட்சத்திரங்களுக்கும் இடம் போதாது'' என்று முகத்தைத் திருப்பாமலே பதில் சொன்னான் பையன்.

''எல்லாம் ஒன்றுதானே.... சில நட்சத்திரங்களுக்கு இடம் போதும்.''

''அவை உண்மையான நட்சத்திரங்களாக இரா.''

''வரைகிறேன் என்று நீயேதானே வாக்குக் கொடுத்தாய்!'' என்று சிரமத்துடன் சொன்னான் சிறுவன்.

கடைசியில் பையன் அவனைப் பார்த்தான். தொப்பி விளிம்பின் நிழல் இப்போது சிறுவனின் முகத்தில் விழவில்லை. நீர் நிறைந்த கருங் கண்களில் டிராம் விளக்குகளின் பிரதிபலிப்பு மினுமினுத்தது.

மனத்தாங்கலின் பொறிகள் போல.

பையன் பெருமூச்செறிந்தான். மனத்தாங்கல் எப்படிப் பட்டது என்று அவன் அறிந்திருந்தான்.

''சரி, வரைகிறேன்'' என்றான் அவன்.

பாதி காலியாய் இருந்த இரவு நேர டிராம் வண்டி முழங்கிற்று, கடகடத்தது, மணியைக் கணகணத்தது. நிறுத்தங்களில் நின்றுவிட்டு மேலே விரைந்தது. பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார்கள். சின்னவனும் பெரியவனுமாக இரண்டு சிறுவர்கள் உட்கார்ந்திருந்த பெஞ்சியில் சந்தடியில்லாமல் நடந்து கொண்டிருந்தது அற்புதம். கறுப்புக் குடை கவர்ச்சி மிக்க ஆகாயமாக மாறிவிட்டது.

பையன் பெரிய வெள்ளை நட்சத்திரங்களை வரைந்தான். ஐந்து முனைகள், எட்டு முனைகள், பத்து முனைகள் கொண்டவை அந்த நட்சத்திரங்கள். எல்லாமாகச் சேர்ந்து எந்த வானியல் அறிஞனும் கண்டிராத விந்தையான நட்சத்திரக் கூட்டங்களாக அமைந்தன. சிறுவன் பையனின் தோளில் சாய்ந்தவாறு அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவன் வாய் பாதி திறந்திருந்தது. கீழ் உதடு ரோஜா நிறச் சிறு பிறை போலத் தொங்கிற்று. நட்சத்திரங்கள் மேலிருந்து பார்வையை அகற்றாமலே சிறுவன் பழுப்புக் காலுறைகள் அணிந்த பாதங்களை ஜோடுகளிலிருந்து எடுத்து, குதிகளை பெஞ்சின்மீது வைத்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டான். அப்படி உட்கார்வது அதிகச் சௌகரியமாய் இருந்தது. தரையில் விடப்பட்ட ஜோடுகள் அசைந்து ஆடின, ஒன்றை ஒன்று இடித்தன. சிவப்பு உள்துணி தைத்த

முழங்கால் பகுதிகள் வியப்பினுல் திறந்த பெரிய வாய்கள் போன்று காணப்பட்டன. என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள ஜோடுகளால் முடியவில்லை.

பெஞ்சின் கோடியில் பொறுமையின்றிக் கிலுங்கிற்று மறந்து விடப்பட்ட பால் பாத்திரம்.டிராம் அசைந்து அதிர்ந்தது. பால் பாத்திரத்துக்குள் ஆவல் மிக்க சிறு பிராணி ஒன்று துள்ளிக் குதிப்பது போலவும் மூடியைத் தலையால் இடிப்பது போலவும் வெளியே என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்க்க விரும்புவது போலவும் இருந்தது.

பையன் துடியாக, திறமையுடன் வரைந்தான். முதலில் இது எளிதாய் இல்லை. சாக்கட்டி ஈரத் துணியில் நன்ருகப் பசைக்கவில்லை. ஆனுல் பையன் நிலைமைக்கு ஏற்ற வழியை மேற்கொண்டான். எல்லைக் கோடுகளை வரைந்துகொண்டு, லேசான ரேகைகளால் நட்சத்திரத்தை அழுந்தத் தீட்டினுன்.

திடீரென்று ஒரு விஷயம் பையன் மனதில் உதித்தது.

''இந்தா, வீட்டிலே உன்னை இதற்காகக் கோபித்துக் கொள்ள மாட்டார்களா?'' என்று கேட்டான்.

''மாட்டார்கள்!''

சிறுவனின் விழிகள் ஒளி வீசின. இவ்வளவு அழகான வேலைக்காகக் கோபித்துக்கொள்வார்களா எங்கேனும்?

''சந்திரனையும் வரைய உன்னுல் முடியுமா? இதோ இங்கே'' என்று சந்தோஷத்துடன் கிசுகிசுத்தான் சிறுவன்.

''வட்ட நிலாவையா, பிறைச் சந்திரனையா?''

''வட்ட நிலாவையும்... பிறைச் சந்திரனையும்.''

''கூடாது. அப்படி இருப்பதே கிடையாது'' என்று கை வீசி மறுத்தான் பையன்.

''நல்லது, அப்படியானுல் வட்ட நிலாவை வரை.''

பையன் பெரிய முழு மதியை வரைந்தான். துணி வானம் முன்னிலும் அற்புதமாகக் காட்சி அளித்தது.

''ஸ்பூத்னிக்கையும் வரை'' என்ருன் சிறுவன்.

பையன் வரைந்த ஸ்பூத்னிக் அடர் மயிர் வாலுள்ள காரட்டுக் கிழங்கு மாதிரி இருந்தது. ஆனாலும் சிறுவன் திருப்தி அடைந்தான். குடையை உயர்த்திப் பிடியைச் சுழற்றினன். ஸ்பூத்னிக் சிறு வான விளிம்பு ஓரமாக விரைந்தது. நட்சத்திரங்களும் சந்திரனும் விந்தையான அணி வரிசையாகச் சுழன்றன....

''ஐயோ!'' என்று கூவினன் பையன். ''அட பயலே!'' என்று சிறுவனின் கையைப் பிடித்துக்கொண்டான். வானத்தின் சுழற்சி நின்றது. ''நாம் எங்கே போகிறோம், தெரியுமா உனக்கு? உன் கடை எங்கே இருக்கிறது?''

வானம் அசைந்தாடிற்று.

சிறுவன் பாய்ந்து ஜோடுகளை மாட்டிக்கொண்டான். அவனுடைய கண்கள் இப்போது முழு வட்டங்கள் ஆகிவிட்டன, உதடுகள் சுழி வடிவில் குவிந்தன.

''அழலாம் என்று மட்டும் எண்ணுதே'' என்றான் பையன்.

இந்தப் பயலை,இந்தச் சிறுவனை என்ன செய்வது?பயலுக்கு நட்சத்திரங்களைப் பரிசாகக் கொடுத்துவிட்டு நட்டாற்றில் விடுவது கூடாதே.

''நல்லது. உன் புளித்த பாலாடை எங்கும் போய்விடாது.''

இருவரும் வந்த வழியே திரும்பினார்கள், கடையைத் தேடிக் கண்டார்கள், புளித்த பாலாடை வாங்கினார்கள், பின்பு நிறுத்தத்துக்குப் போய் டிராம் வண்டியை எதிர்பார்க்கலானார்கள். ஒரே குடையின் கீழ் நின்றபடி வெகு நேரம் காத்திருந்தார்கள். மழைத் துளிகள் எண்ணிக்கையில் குறைந்து அளவில் பெருத்தன. அவை குடைமேல் அங்கொன்றும் இங்கொன்றுமாக டொக் டொக்கென்று அடித்தன. விளக்கு வெளிச்சம் ஈரத் தார் ரோடில் பிரதிபலித்து குடையின் உட்புறம் இருந்த கூர்முனை நட்சத்திரங்களுக்கும் சந்திரனுக்கும் ஒளி காட்டின.

பையன் நடை பாதையிலிருந்து இறங்கி, மரங்களுக்கு அப்பால் டிராம் விளக்குகள் தென்படுகின்றனவா என்று பார்த்தான்.

''எங்கே போகிருய்? நம் ஆகாயத்தின் அடியில் நில்லு'' என்று பரிவுடன் சொன்ஞன் சிறுவன்.

டிராம் அருகில் வந்ததும், அவன் சட்டென நினைவு படுத்திக் கொண்டு, ''மூன்று கொப்பேக் போட மறந்து விட்டேன்'' என்ருன்.

முந்திய தடவை டிராமில் வந்த போது அவன் கட்டணத் தொகையான மூன்று கொப்பேக்குகளை உண்டியில் போட்டு டிக்கட்டு கிழித்துக்கொள்ள மறந்துவிட்டான். அது கண்டக்டர் இல்லாமலே இயங்கும் டிராம் ஆதலால் ஒருவரும் அவனுக்கு நினைவுபடுத்தவும் இல்லை.

''அற்ப விஷயம். இந்தத் தடவை டிராமில் ஏறியதும் இரட்டைக் கட்டணம் செலுத்திவிடு. எல்லாம் ஒன்றுதானே'' என்று தேற்றிஞன் பையன்.

''ஆமாம், எல்லாம் ஒன்றுதான்'' என்று திருப்பிச் சொன்ஞன் சிறுவன்.

அவனை டிராமில் ஏற்றிவிட்டுவிட்டு, நிறுத்தத்திலிருந்து அகன்ருன் பையன்.

சிறுவன் கையை ஆட்டி அவனிடம் பிரிவு சொல்லிக் கொள்ள விரும்பிஞன். ஆஞல் ஒரு கையில் குடையும் மறு கையில் புளித்த பாலாடைப் பாத்திரமும் இருந்தனவே, கையை எப்படி ஆட்டுவது? தனக்கு இத்தகைய அற்புத ஆகாயத்தைப் பரிசளித்த பெரிய நல்ல பையனை அவன் வெறுமே நன்றியுடன் பார்த்தான்.

சிறுவனை வழியனுப்பிவிட்டுப் பையன் கடைக்குத் திரும்பிஞன். அங்கிருந்து முதல் தடவை வெளியேறிய போது நிலையருகே மூன்று கொப்பேக் நாணயம் பளிச்சிட்டதாக அவனுக்குத் தோன்றியது. சிறுவன் எதிரில் அதைக் குனிந்து எடுக்க அவனுக்கு எதஞலோ கூச்சமாய் இருந்தது. மூன்று கொப்பேக்குகளோ தேவைப்பட்டன. டிக்கட்டு இல்லாமல் டிராமில் மறு

படி சவாரி செய்யப் பிடிக்கவில்லை, அருவருப்பாய் இருந்தது. ஆகவே பையன் கடைக்குத் திரும்பினான்.

நிலை அருகே நாணயத்தைக் காணவில்லை. பையன் வெளியே போக நினைத்தான். ஆனால் அதற்குள் காற்று பலமாக வீசிற்று, மழை சோவென்று கொட்டியதில் தார் ரோடு தளபளவென்று கொதிப்பதுபோல் இருந்தது.

தொப்பலாக நனைந்திருந்த போதிலும் இம்மாதிரி மழையில் வெளியே போகப் பையன் துணியவில்லை. அவன் கடை வாயில் உள்ளே நின்றுவிட்டான். திடீர் மழை விடும் வரையில் அங்கே தங்கியிருக்கத் தீர்மானித்தான். உள்ளே ஓடி வந்தவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காகச் சுவரோடு ஒண்டிக் கொண்டான். அடை மழையிலிருந்து தப்புவதற்காக ஜனங்கள் கடைக்குள் பாய்ந்து புகுந்தார்கள்.

ஒரு நபர் மட்டுமே அவசரப்படவில்லை. அவள் மிகவும் பருத்த மாது. தலைமூடி உள்ள ஒளிபுகும் மழைக்கோட்டு அணிந்திருந்தாள். அவள் உள்ளே வந்து வாயில் புறத்தை நிறைத்தவாறு ஓசையுடன் மூச்சு விட்டாள். வர்ணப் பிளாஸ்டிக் நாடாக்களால் பின்னிய இறுக்கமான கைப்பை அவளிடம் இருந்தது. வாயில் விளக்கு ஒளியில் கைப்பை நாடாக்கள் குதூகலமாகப் பளிச்சிட்டன. கைப்பையின் உச்சியில் பச்சைக் காட்டுக்கோழி வால்சிறகுகள் போல நீட்டிக்கொண்டிருந்தன பச்சை வெங்காயக் கொத்துகள். ஆட்கள் தடதடவென்று அருகாகச் சென்று இந்தக் கொத்துக்களை நசுக்கினார்கள். கைப்பை இழுபட்டது. நனைந்த வெங்காயத் தாள்கள் பையனுடைய காற்சட்டையைக் கறைப்படுத்தின.

கைப்பைக்காரி கொழுத்த பெரிய முகத்தைப் பையன் பக்கம் திருப்பினாள். அவள் கண்கள் தாராவினுடையவை போலச் சிவப்பாய் இருந்தன.

''நீ வேறு இங்கே எதற்காக?'' என்று தெளிவற்ற உச்சரிப்புடன் மறுபடி மறுபடி கேட்டவாறு கைப்பையின் பின்னல்

பிடியை இறுகப் பிடித்துக்கொண்டாள். ''என்ன வேண்டும் இங்கே? எதற்காக நிற்கிருய்?'' என்ருள்.

''உங்களுக்கு என்ன வந்தது?'' என்ருன் பையன்.

''உன் மாதிரி ஆட்களை எனக்கு நன்ருய்த் தெரியுமே. ஜேபடித் திருடர்கள் ஆயிற்றே நீங்கள்!'' என்று பல்நிறக் கைப் பைக்காரி மூச்சு திணறக் கத்திஞள்.

பையனுக்குக் கோபம் பீரிட்டது. ஆஞல் அவன் கத்தவோ, கண்களை உருட்டி விழிக்கவோ இல்லை.

கணநேரம் பேசாதிருந்தபின் தாராக் கண்களை நேரிட்டுப் பார்த்து, தெளிவாகச் சொன்ஞன்:

''மாமிச மூட்டை! வியாபாரத் திருடி!''

இப்படிச் சொல்லிவிட்டுக் கடையிலிருந்து பாய்ந்து ஓடி விட்டான். மூச்சுத் திணறலுடன் கூச்சல் அவனுக்குக் கேட்டது. பின்பு கதவு படீரென்று சாத்தப்படவே கத்தல் இடை முறிந்துவிட்டது. பையன் வெறியுடன் கைகளை வீசி ஆட்டியபடி, திரும்பிப் பாராமலே ஓடிஞன். அவன் ஓடியது பயத்திஞல் அல்ல, கண்ணீர் தொண்டையை அடைத்துக்கொண்டதால்.

ஆஞல் இப்போதும் பையனைத் தேற்றுவதில் மழை வெற்றி அடைந்தது. பின்பு மழை தானே அடங்கிவிட்டது. மறுபடி லேசாக, ஒரு சீராகத் தூறலாயிற்று.

பையனின் ஓட்ட வேகம் வரவரக் குறைந்தது. முடிவில் சேகவ் வீதியும் பாவ்லிக் மரோஸவ் வீதியும் சந்திக்கும் முனையில் அவன் நின்றுவிட்டான். அங்கே டிராம் நிறுத்தம் இருந்தது. பையன் வீடு திரும்ப நிச்சயித்தான். டிக்கட் இல்லாமல் தான் பயணம் செய்ய வேண்டும் என்ருல் செய்துவிட்டுப்போகிறது. வீட்டில் கவலைப்படுவார்கள், தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள், அன்று இன்னும் நிறையப் பிடிக்காத விஷயங்கள் நேரும் என்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருந்தது. ஆஞல் இதைப் பற்றி அவன் களைப்புடன் அசட்டையாக எண்ணம் இட்டான்.

வீட்டுப் பக்கம் போகும் டிராமை எதிர்பார்த்து நின்ருன் அவன்.

கடகடத்துப் போன பழைய டிராம்களும் தாமே திறந்து மூடிக் கொள்ளும் கதவுகளும் கணீரென்று ஒலிக்கும் மணிகளும் கொண்ட புதிய டிராம்களுமாகப் பல வித டிராம்கள் வந்து போயின. ஆனுல் தேவையான இலக்கமிட்ட டிராம் இன்னும் வரவில்லை.'

பெருத்த மழைத் துளிகள் தூறிய வண்ணமாய் இருந்தன....

திடீரென்று தூறல் நின்றுவிட்டது. மழைத்துளிகள் தார் ரோடில் நர்த்தனம் செய்தன, இலைகள் மேல் சடசடத்தன, ஆனுல் பையன்மேல் படவில்லை.

அவன் அண்ணுந்து பார்த்தான். பல் வைத்த இரண்டு கறுப்பு வட்டங்கள் அவனுக்கு மேலே ஒன்று சேர்ந்து அவன் மேல் மழை படாதவாறு காத்தன.

இது வேரு! பையன் குடைகளின் காப்பிலிருந்து அப்பால் செல்ல நினைத்துக் கோபத்துடன் முன்னே சாய்ந்தான். அதற்குள் ஒரு குரல் அவனைத் தடுத்தது:

''நீ தான் சொட்டச் சொட்ட நனைந்திருக்கிருயே.''

பேசியவள் ஒரு பெண். அவளுடைய சொற்களில் கேலி தொனித்ததாகப் பையனுக்குத் தோன்றியது. ஈரச் சட்டைப் பைகளில் முட்டிகளை நுழைத்துக்கொண்டு சட்டெனத் திரும்பினுன்.

பின்னே நின்றுகொண்டிருந்தார்கள் ஆணும் பெண்ணுமாக இருவர். அவர்கள்தாம் குடைகளைப் பிடித்திருந்தார்கள். அவர்களுடைய முகங்கள் அனேகமாக வித்தியாசம் காண முடியாதவையாக இருந்தன. தெரு விளக்கு வெளிச்சம், பெண்ணின் தலைக்குட்டையின் அடியே துருத்திக் கொண்டிருந்த கேசத்தின் மேல் லேசாக மட்டுமே பட்டது. ஆடவர் முற்றிலும் நிழல் மறைவில் இருந்தார். உயரமானவர். கறுப்பு உடை அணிந்திருந்தார். அவர் ஒன்றும் பேசவில்லை.

''நீதான் ஒரேயடியாக நனைந்து போய்விட்டாயே'' என்று திரும்பச் சொன்னாள் அந்தப் பெண்.

''நிஜமாகவா? நான் ஒரேயடியாக உலர்ந்திருப்பதாக அல்லவா நினைத்தேன்!'' என்று குத்தலாகக் கூறினான் பையன்.

அவள் சிரித்தாள்.

''இது உன் பிரமை. உண்மையில் நீ முழுக்க முழுக்க நனைந்து போய் இருக்கிறாய். குட்டத்தில் விழுந்த கோழிக் குஞ்சு போல.''

இதற்குச் சுடச்சுட ஏதாவது பதில் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் ஆடவர் பையனை முந்திக் கொண்டுவிட்டார்.

''லேனா, நிறுத்து'' என்று கரகரத்த கீழ்க் குரலில் சொன்னார் அவர்.

அந்த மனிதருடைய முகம் உறுதியையும் ஓரளவு களைப்பையும் காட்டுவதாகவும் நேரான ஆழ்ந்த சுருக்கங்கள் கொண்டிருப்பதாகவும் பையனுக்குத் தோன்றிற்று.

''நிறுத்து, தயவு செய்து. உன் அன்பர்களோடும் இப்படித்தான் பேசுகிறாய் என்றால் நான் உண்மையாகவே அவர்கள் மேல் அனுதாபப்படுகிறேன்.''

''அன்பனும்!'' என்று செருமினாள் அவள்.

பையன் குடைகளுக்குக் கீழிருந்து தீர்மானமாக அடி வைத்து மெதுவாக அப்பால் சென்றான்.

''நீ வீணாக மழையில் நனைகிறாய்'' என்று அவனிடம் சொன்னார் அந்த மனிதர்.

''மழை பெய்வது என் குற்றம்அல்லவே'' என்றான் பையன்.

''இருக்கலாம்.... ஆனால் இப்போது நீ வெட்டியாக நனைகிறாய். அல்லது வேண்டுமென்றே யாரையாவது பழி வாங்குகிறாயோ?''

''இருக்கலாம்!'' என்றான் பையன்.

''அப்படியானால் உன் பாடு'' என்று பெருமூச்சு விட்டார் அவர்.

''சந்தேகமில்லாமல்'' என்றான் பையன்.

''அப்பா, இவனைச் சீண்டாதீர்கள், கடித்துவிடுவான்'' என்று குறுக்கிட்டாள் பெண்.

அவளுடைய சுபாவம் பொறுமை அற்றது போலும்.

டிராம் அப்படியும் வரக் காணோம்....

பையனின் நனைந்த கோட்டு பருத்து, ரப்பர் துணிபோலப் பளபளத்தது. மழைத் துளிகள் அதன்மேல் அடிக்கடி சடபடத்தன.

பெண்ணின் தகப்பனார் பேசத் தொடங்கினார்: ''நான் வெகு காலமாக ஊரில் இல்லை, ஆகவே மழைப் பழக்கம் எனக்கு விட்டுப் போய்விட்டது. நான் நினைப்பது தவறாய் இருக்கலாம், ஆனால் இப்படி நின்று நனைவது மகிழ்வற்ற வேலை என்று எனக்குப் படுகிறது.''

''டிராம் வெகு நேரமாக வரக் காணோம். வீட்டுக்குக் கால் நடையாகவே திரும்ப வேண்டியிருக்கும்'' என்று எண்ணி வீட்டை நோக்கி நடந்தான் பையன்.

''பொறு'' என்றது அதே நிதானமான, கம்மிய குரல். ''குடையை எடுத்துக்கொள். நிஜமாகவே எங்களுக்கு ஒன்று போதும். நீ திருப்பித்தரக் கூட வேண்டாம்.''

''தாம் எவ்வளவு நல்லவர் என்று காட்டிக் கொள்ள விரும்புகிறார்'' என நினைத்தான் பையன்.

''எனக்குக் குடை வேண்டாம். அதற்கு அடியே ஒளிந்து கொள்வதற்காகவோ, வேண்டவே வேண்டாம்'' என்றான்.

கடைசிச் சொற்கள் தாமாகவே அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன. ஆனால் பையன் அவற்றுக்காக வருந்தவில்லை. சொல்லி விட்டுப் பதிலை எதிர்பார்த்தான் அவன். அந்த மனிதரும் பெண்ணுமோ பேசாதிருந்தார்கள். ஒருவேளை ஆச்சரியம் அடைந்தார்களோ?

அப்போது பையன் விடாப்பிடியாகக் கேட்டான்:

''மழையிலிருந்து தப்புவதற்காக மட்டுந்தான் குடை வேண்டும் என்று நினைக்கிறீர்களோ?''

''இல்லை, எதற்காக?'' என்று முற்றிலும் ஆழ்ந்த முறை

யில் பதில் சொன்னார் ஆடவர். ''நாங்கள் அப்படி நினைக்கவில்லை. குடையால் எத்தனையோ செய்யலாமே. கூரை மேலிருந்து குதிக்க மிகவும் சௌகரியமாய் இருக்கும்.... குடையிலிருந்து ஆரக் கம்பிகளைப் பிடுங்கலாம்....''

''பிடி வளைந்ததாக இருந்தால் யார் காலிலாவது மாட்டி இழுக்கலாம். ரொம்ப சௌகரியம்'' என்று அதே போல ஆழ்ந்த குரலில் சொன்னாள் பெண்.

இருவரும் அடக்கமாகச் சிரித்தார்கள். ஏனோ அதனால் மனத்தாங்கல் உண்டாகவில்லை. மனத்தாங்கலே ஏற்படவில்லை என்பதைப் பையன் உணர்ந்தான். ஆனாலும் பழைய மனத்தாங்கலும் தோல்விகளுமே அவன் மனத்தில் நிறைந்திருந்தனவே.

''நீங்கள் சிரிக்கிறீர்கள். உங்களுக்குக் குடை போய்விடுமே என்ற வருத்தம்கூட இல்லை. நான் நனையக்கூடாது என்பதற்காகக் குடையைக் கொடுப்பது உங்களுக்கு வருத்தமாகவே இல்லை'' என்றான்.

''கொஞ்சங்கூட இல்லை'' என்று ஒத்துப் பாடினாள் லேனா.

''வேறு விதமாயிருந்தால் கட்டாயம் தயங்குவீர்கள்....''

''மற்றவர்களைவிட நீ எந்த விதத்தில் உயர்த்தி?'' என்று வியப்புடன் கேட்டார் பெண்ணின் தகப்பனார்.

''நான் அப்படிச் சொல்லவில்லை. வேறு காரியத்திற்கானால் கொடுக்கத் தயங்குவீர்கள் என்றேன்.... சரி, நட்சத்திரங்களை உங்கள் குடையில் வரைகிறேன். வரையட்டுமா?'' என்றான் பையன்.

அவர்கள் இசைந்தார்கள். அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை. விஷயத்தை அவர்கள் ஒரு நொடியில் புரிந்துகொண்டார்கள்.

தன்மேல் வெறுமே இரக்கப்படுகிறார்கள் என்று பையன் முதலில் எண்ணினான்.

''அதோ உங்கள் டிராம் வருகிறது'' என்று சொன்னான். உண்மையில் அவன் தன் விதியைச் சோதித்துப் பார்த்தான்.

ஈரம் இன்றி, விளக்குகளின் வெளிச்சம் நிறைந்திருந்த டிராமில் பெண்ணும் அவள் தகப்பனும் இதோ ஓடி ஏறிவிடுவார்கள் என்று நிச்சயமாக நினைத்தான்.

''இது கடைசி டிராம் அல்லவே'' என்றார் பெரியவர்.

''பெட்டிக் கடையின் பக்கம் போவோம். அங்கே வெளிச்சமாய் இருக்கிறது'' என்று யோசனை சொன்னாள் பெண். ''எல்லா நட்சத்திரக் கூட்டங்களையும் நிஜமாகவே அறிவாயா?'' என்று கேட்டாள்.

''சின்னக் குட்டி!'' என்று நினைத்தான் பையன். இல்லை, நினைக்கவில்லை, வாய்க்குள் சொல்லிக்கொண்டான் போலும். ஏனென்றால் பெரியவர் மறுத்துரைத்தார்:

''அட நீ என்ன? இவள் கிட்டத்தட்ட மணப் பெண் ஆயிற்றே.''

''அப்பா!''

''அப்பா ஆவது! நான்தான் சொன்னேனே 'கிட்டத்தட்ட' என்று?''

பூட்டிய வெற்றுப் பெட்டிக் கடைக்குள் பிரகாசமான விளக்கு எரிந்தது. கண்ணாடிச் சுவர்களின் பின்னிருந்து அசட்டுப் பிசட்டென்று விழித்தன அம்மணமான ஸெல்லூலாயிடு பொம்மைகள்.

புதியவர்களை இங்கே கவனித்துப் பார்த்தான் பையன். பெரியவரின் முகம் உண்மையாகவே உறுதியைக் காட்டியது. ஆழ்ந்த சுருக்கங்களும் வாயருகே பெரிய மடிப்புக்களும் அதில் காணப்பட்டன. ஒரு சிறிது பழக்கமான முகம் அது. பெண்ணோ, பையனின் பயனீயர் குழுத் தலைவியாய் இருந்து இப்போது விளாதிவஸ்தோக் சென்றுவிட்ட லியூஸியா என்பவள் ஜாடையாக இருந்தாள்.

பையன் குடையைச் சுவரில் சார்த்தினான். பெண்ணும் அவளுடைய தந்தையும் பையனுக்குப் பின்னே, அவன்மேல் மழைத்துளிகள் படாதபடி மற்றக் குடையைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள்.

பையன் சாக்கட்டியை வெளியில் எடுத்தான்.

''வேண்டாம்'' என்று அவனைத் தடுத்துவிட்டு மடக்குக் கத்தியை நீட்டினார் பெரியவர். ''சாக்கட்டி வரைவு அழிந்து விடும். வெளிச்சம் ஊடுருவும் போது தெரியவும் தெரியாது. இதிலே கோணி ஊசி இருக்கிறது. துளைகள் இடு....''

வெளிச்சம் நிறைந்த டிராம் வண்டிகள் இரும்புக் கண கணப்புடன் வந்து தெருவின் இருளில் நின்று, போயின. நாற் புறமும் மழை சரசரத்தது, கணகணத்தது, களகளத்தது. ஏதோ பாங்கற்ற, ஆனால் களி பொங்கும் பாட்டு போலக் குதூகலமாக ஆர்த்தன இந்த ஒலிகளும் ஓசைகளும்.

நுண்ணிய கிரணம்போலப் பளிச்சிட்ட கோணி ஊசியால் கரு வானில் நட்சத்திரத் துளைகள் இட்டான் பையன்.

வழி நடப்பவர்கள் சில வேளைகளில் நின்று, அநேகமாகப் புதிய குடையில் துளைகள் இடும் மூன்று பைத்தியக்காரர்களை வியந்து நோக்கினார்கள்.

சில வேளைகளில் பெண்ணின் தகப்பனார் நட்சத்திரக் கூட்டங்களின் பெயர்களைத் தணிந்த குரலில் சொன்னார்— ''மிருக சீர்ஷம்... ஆம், அப்படித்தான், காச்யபி'' என்று.

''இப்போது இந்தக் குடையை நீ உடன் எடுத்துப் போவாயா?'' என்று பெண்ணும் தணிந்த குரலில் வினவினாள்.

''ஆம்'' என்றார் தந்தை.

அவர்கள் பேசியது பையனுக்குப் புரியவில்லை. ஆனால் விஷயம் என்ன என்று கேட்கத் தயங்கினான். தன் வேலையைத் தொடர்ந்து செய்தபடியே, ''என்ன ஆனாலும் சாக்கட்டியே மேல். இந்த மாதிரி வரையும் போது, பாருங்கள், குடை துளைகள் உள்ளது ஆகிவிடுகிறது'' என்றான்.

''பரவாயில்லை. நான் போகும் இடத்தில் மழை பெய்வதில்லை'' என்று சொன்னார் பெரியவர்.

''பாலைவனத்துக்குப் போகிறார் போலிருக்கிறது'' என்று எண்ணிக்கொண்டான் பையன்.

''நீங்கள் போவது தெற்கேயோ?'' என்று உறுதிப் படுத்திக் கொள்வதற்காகக் கேட்டான்.

''ஆமாம், தெற்குக் கோடிக்கு.''

''அங்கே மழை கிடையாதாம். அப்படியானல் என் விண் மீன்களுக்காகத்தான் குடையை எடுத்துப் போகிருர் என்று ஆகிறது'' என மகிழ்வுடன் எண்ணினுன் பையன். அவன் மன தில் குதூகலம் பொங்கியது. அன்று மாலையில் நிகழ்ந்த நல் லவை எல்லாம் நினைவுக்கு வந்தன. கொஞ்சம் அறிமுகமான சிறுமி, ஜோடுகள் அணிந்த வேடிக்கைச் சிறுவன்.... அப்புறம் இவர்கள் இருவரும்....

மறுபடியும் நிம்மதியற்ற எண்ணங்கள் உதித்தன.

''தெற்கே மிக இருண்ட இரவுகள் ஆயிற்றே! துளைகள் உங்களுக்குத் தெரியாவே! அவற்றின் வழியே வானம் ஒளி வீசாதே!''

''வீசும். நான் போகும் இடத்தில் இரவுகள் மிகவும் பிரகாச மானவை'' என்ருர் பெரியவர்.

''வேடிக்கைதான்'' என்று நினைத்துக்கொண்டான் பையன். ஆனல் மேற்கொண்டு கேட்கத் தயங்கினுன். கேலி செய்யும் கூர் நாவினள் ஆன லேனுவிற்கு மட்டுமீறிய ஆவல் உள்ளவனுகத் தன்னைக் காட்டிக்கொள்ள அவனுக்கு இஷ்ட மில்லை.

வேலையை முடித்து விட்டான் ஆதலால் பேசத் தொடங் கினுன்: ''இதோ உங்களுக்கு விளக்குகிறேன். இதெல்லாம் ரொம்ப சுலபம். குடைக் கம்பு துருவ நட்சத்திரத்தை நோக்கி இருக்கும்படி வைத்துக்கொள்ள வேண்டும்....''

''சரிதான். விளக்க வேண்டாம். இந்த விஷயம் எனக்கே தெரியும்'' என்று மெள்ளச் சொன்னுர் பெரியவர்.

பையன் குழப்பம் அடைந்து பேசாதிருந்தான். அவனுக்கு நம்பிக்கைப்படவில்லை. இந்த ஆளுக்கு ஒன்றுமே புரியவில்லை என்று தீர்மானித்தான்.

''இது சுலபம்'' என்று தயக்கத்துடன் ஆரம்பித்தான். ''துருவ நட்சத்திரம் எங்கே இருக்கிறது என்று நினைவு வைத்துக்கொள்வதுதான் முக்கியம்....''

''எனக்குத் தெரியும்'' என்று திரும்பக் கூறினார் அந்த விந்தை மனிதர். ''எனக்குத் தெரியும், பையா. விஷயம் அது வல்ல. தவிர, நீ எத்தனையோ விவரங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.''

''எதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை?'' என்று கலவரத்துடன் கேட்டான் பையன். பெரியவர் தன்னைப் 'பையா' என்று அழைத்ததற்கு ரோசப்படக்கூட அவன் மறந்து விட்டான்.

''வானம் இருக்கிறதே, சிக்கலானது. நட்சத்திரங்களின் நிலை, நாளின் பொழுதுக்கு ஏற்றபடி மட்டுமல்ல, ஆண்டின் பருவங்களுக்கும் தக்கவாறு மாறுகிறது. தவிர, ஒப்பு நிலைகளை நீ மிகத் துல்லியமாகக் கணக்கிடவில்லை. அப்புறம், துருவ நட்சத்திரம் ஆகாயத்தில் எங்கே இருக்க வேண்டும் என்று உனக்குத் திட்டவட்டமாக நினைவு இருக்கிறதா?.. வரைப் படம் தெரிந்திருந்தால் போதாது, வானம் தெரிந்திருக்க வேண்டும்.''

''அதாவது, எல்லாம் வீண் என்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் ஏன்....'' என்று ஆரம்பித்தான் பையன். அவனுக்குக் குரல் விழுந்து போயிற்று.

''வீண் அல்ல. என்ன ஆனாலும் நீ பாராட்டுக்கு உரியவன். உன் தப்புக்கள் எனக்கு ஒரு பொருட்டுமில்லை.... தவிர, நான் போகும் இடத்தில் துருவ நட்சத்திரம் தெரியவும் தெரியாது'' என்றார் பெரியவர்.

''எது அந்த இடம்?'' என்று வியப்புடன் கூவினான் பையன்.

''தென் துருவப் பிரதேசம்'' என்றார் பெரியவர்.

...பையனுக்கு வாய் அடைத்துப் போயிற்று. இந்த மாதிரி மனிதரைச் சந்திக்கும் போது ஏதேனும் சொல்லுவது லேசல்லவே. அவர் தென்துருவப் பிரதேசத்துக்குப் போகிறார். உலகின்

மறு கோடிக்கு. அங்கே விண்மீன்கள் வேறு. அங்கே தென் சிலுவை நட்சத்திரக் கூட்டம் தெரியும். துருவ நட்சத்திரத்தையோ, பார்க்க முடியாது.

''நீங்கள்... கேலி செய்யவில்லையே?'' என்று கிசுகிசுத்தான் பையன்.

''இல்லை. ஒருவன் துளைகள் இட்ட குடையை உடன் எடுத்துப் போவது வேடிக்கையாய் இருக்கலாந்தான். ஆனால் அங்கே... விஷயம் என்ன தெரியுமா? நினைத்தபோது குடையை விரித்து நம் வட வானின் நட்சத்திரக் கூட்டங்களைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கும். உண்மையாகவே. இவை நிஜ நட்சத்திரக் கூட்டங்களை மிகவும் ஒத்து இருக்கின்றன'' என்றார் தென் துருவப் பிரதேசம் செல்ல இருந்தவர்.

''உன் கை திருத்தமானது'' என்றாள் பெண்.

முக்கியமானதைக் கேட்கப் பையன் நெடு நேரம் தயங்கினான். அப்புறம் சொன்னான்:

''ஒன்று கேட்கிறேன், கோபித்துக் கொள்ளாதீர்கள். வந்து... உங்கள் குலப் பெயர் என்ன?''

''ஒருதலைப் பட்சமான கேள்வி. அதற்கு என்ன....'' என்று தம் குலப் பெயரைச் சொன்னார் பெரியவர்.

''ஐயோ'' என்று கிசுகிசுத்தான் பையன். இந்த ''ஐயோ'' வில் இப்போது கேலியோ ரோசமோ இல்லை. வியப்பும் குழப்பத்தைக் காட்டும் புன்னகையும் மாத்திரமே இருந்தன. பையனுக்கு இந்தப் பெயர் நினைவிருந்தது.

இந்தப் பெயரை எங்கே, எப்போது கேட்டோம் என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் பெயர் நினைவு இருந்தது. பையனுடைய நினைவில் இந்த மனிதரின் பெயர் அவனுக்கு மிகவும் பிடித்த விஷயங்களுடன்—தொலைதூரத் தீவுக் கூட்டங்கள் பற்றிய புத்தகங்கள், கடற்காற்றுகளின் கணீரொலி கொண்ட விளங்காப் பெயர்கள், விண்மீன்களையும் மண்ணகத்தையும் பற்றிய ஊகங்கள் ஆகியவற்றுடன்—பின்னிப் பிணைந்திருந்தது. பாதி மறந்த நல்ல பாட்டின் சொல் போல,

பல விஷயங்களை நினைவூட்டியது இந்தப் பெயர். ஒரு தரங்கூடப் பார்க்காததையும் எண்ணிப் பார்க்கவும் நினைவுபடுத்திக் கொள்ளவும் முடியுமே. பூமத்திய ரேகைக் கடலின் மெல் அலைகளுக்கு மேலே பறக்கும் மீன்களின் வெள்ளி அணிகள்; இடுங்கு கழிகளின் மூடுபனி அடர்ந்த கணவாய்கள் (அங்கே மாலுமிகளை மயக்கி மாய்க்கும் நீரணங்கின் கத்தல்களை எதிரொலி பன்மடங்காகத் திருப்பி ஒலிக்கும்); நீர்மூழ்கிக் கோளத்தின் அகன்ற ஒளிக்கதிரால் ஊடறுக்கப்பட்ட ஆழ்நீரின் மினுக்கிருள்; பனிக் கட்டிப் பாறைகள் கரைகளிலிருந்து மெதுவாகப் பிரிந்து வர வர மிகும் தடதடப்புடன் பசிய மாகடலில் சரியும் நிலப் பகுதியை நோக்கிச் செல்லும் பனிக்கட்டி உடைக்கும் கப்பல்கள், டீஸல் மோட்டார்க் கப்பல்கள் ஆகியவற்றின் உறைபனி மூடிய பாய்மரச் சாதனங்கள் எல்லாவற்றையுமே காணமுடியும்—பெருத்த விருப்பம் மட்டும் இருந்தால்.

''எனக்குத் தெரியும்.... நீங்கள் காப்டன்'' என்று தணிந்த குரலில் சொன்னான் பையன். அவன் உரக்கப் பேச விரும்பவில்லை. வியப்பூட்டும், ஓரளவு மர்மம் நிறைந்த இந்தச் சந்திப்பினால் உள்ளே பொங்கிய மகிழ்ச்சி வெளியே தளம்பிவிடுமோ என்று அவன் அஞ்சியது போலிருந்தது. ''நீங்கள் காப்டன்....''

''அதற்கென்ன, ஆமாம், நான் என் வேலையில் காப்டன் தான்'' என்று அமைதியாக விடையிறுத்தார் பெரியவர்.

''நீங்கள் பெங்குவின் பறவைகளைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டுவிட்டு, உடனேயே நாணமடைந்தான் பையன். இது முற்றிலும் குழந்தைத்தனமான கேள்வி. ஆறும் வகுப்பு மாணவனுக்கு அல்ல, அவன் கற்பனை நட்சத்திரங்கள் வரைந்து கொடுத்தானே ஒருவனுக்கு, அவனைப் போன்ற சின்னப் பயலுக்கே ஏற்றது இந்தக் கேள்வி.

காப்டன் முறுவலித்தார்.

''உன் வணக்கத்தை அவற்றுக்குத் தெரிவிக்கிறேன். அவை சந்தோஷப்படும். அல்லது இன்னொன்று செய்கிறேனே. உனக்கு

இரண்டு பெங்குவின் பறவைக் குஞ்சுகள் அனுப்பி வைக்கிறேன். சரிதானு?''

இந்தக் கேலியால் பையன் ரோசப்படவில்லை. சிவந்த பாதங்களை எடுத்து வைத்து மிடுக்குடன் கோணல் நடை போடும் வேடிக்கையான பெங்குவின் குஞ்சுகளை எண்ணிப் பார்த்துச் சிரித்தான். காப்டனும் சிரித்தார், பெண்ணும் கலகலவென்று நகைத்தாள்.

நிறுத்தத்திலிருந்து சற்று தொலைவில், திருப்பத்தில், ஜன்னல்கள் ஒளிவீசக் கணகணத்துப் பச்சைப் பொறிகளைச் சிதறியது டிராம் வண்டி. சிவப்பு, பச்சை விளக்குகள் கொண்ட பதினைந்தாம் நம்பர் டிராம் வண்டி. இதையே எதிர்பார்த்திருந்தார் காப்டன்.

இன்னும் ஒரு நிமிடம் என்று எண்ணினுன் பையன்.

போக்குவரத்துக் குறிவிளக்கருகே டிராம் சுணங்கினுல், ஒருவேளை இரண்டு நிமிடங்கள்.

டிராம் சுணங்கவில்லை.

பையனுடைய மகிழ்ச்சி இதனுல் போய்விடவில்லை. துயரத்தின் லேசான நிழல் படிந்து அது சற்றே மங்கியது. பிரகாசமான பல்புக்கு மேலே பச்சை விளக்கு மூடி பொருத்தும்போது அறையில் வெளிச்சம் இப்படித்தான் மங்கும்.

''அவ்வளவுதான்'' என்று காப்டனைப் பார்த்துத் தணிந்த குரலில் சொன்னுன் பையன். ''இதோ உங்கள் டிராம் வந்துவிட்டது'' என்று சொல்ல அவன் விரும்பினுன். ஆனுல் அந்த வாக்கியம் மிக நீளமாயிருந்தது.

''ஆமாம்'' என்றுர் காப்டன். தன் இடது தோள் நொடிப்போது கனத்ததைப் பையன் உணர்ந்தான். காப்டன் அவன் தோளைக் கையால் அழுத்தினுர்.

''நான் உனக்கு... அக்கரையிலிருந்து கறுப்புக்கல் கொண்டு வரட்டுமா? அசல் தென்துருவக் கருங்கல். அந்தப் பிரதேசத்தில் நினைவுப் பரிசுப் பொருள்கள் நிறையக் கிடையா'' என்றுர்.

இது வேடிக்கை அல்ல.

''கொண்டு வாருங்கள்!'' என்று கூவினான் பையன்.

''மறந்துவிட மாட்டாயே? நான் ஆறு மாதங்கள் கழித்தே திரும்புவேன்.''

''நானா? மறப்பேனா?'' என்றான் பையன்.

''அப்படியானால் முகவரியைச் சொல்கிறேன், கேள்....''

''வேண்டாம்!'' என்று திகில் அடைந்தவன் போலக் கூறினான் பையன்.

முகவரியை அவ்வளவு சுளுவாகத் தெரிந்துகொள்ள அவன் விரும்பவில்லை. ஆறு மாதங்களுக்குப் பின் அவன் தானே காப்டனைத் தேடிக் கண்டுகொள்வான். அதுவே மேல். கண்டு பிடிக்க அவனால் முடியும். இந்த மாதிரி மனிதரைக் கண்டுபிடிக்காமல் இருக்க முடியுமா என்ன?

டிராம் வந்தது. கதவுகள் சீறலுடன் திறந்தன.

''நான் உங்களைத் தேடிப் பிடித்து விடுவேன். நீங்களே காண்பீர்கள்'' என்று பரபரப்புடன் சொன்னான் பையன்.

''அறிவேன். விண்மீன்களுக்காக நன்றி.''

பெண்ணை முன்னே போக விட்டு, தாம் படியில் ஏறினார் காப்டன்.

''இந்தா, வாங்கிக் கொள்!'' என்று நட்சத்திரங்கள் பொறிக்காத குடையைத் தகப்பனாரின் தோளுக்கு மேலாக நீட்டினாள் பெண். ''வாங்கிக் கொள்! எங்கள் வீடு நிறுத்தத்துக்குப் பக்கத்திலேயே இருக்கிறது.''

''வாங்கிக் கொள்'' என்றார் காப்டன்.

''எதற்காக? எப்படியும் நானோ குட்டத்தில் விழுந்த கோழிக்குஞ்சுபோல நனைந்துவிட்டேன்'' என்றான் பையன். அதேசமயம், தன் கேலியை இன்னும் அவன் மறக்கவில்லை என்று பெண் நினைப்பாளோ என்ற பயமும் அவனுக்கு உண்டாயிற்று. ''மழை நீர் வெது வெதுப்பாகவே இருக்கிறது. பிரமாதமில்லை'' என்று விளக்கினான்.

கதவுகள் மூடிக் கொள்வதற்காக அச்சுறுத்துபவை போலச் சீறின.

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டார் காப்டன்.

''ஸ்லாவா'' என்று சொல்லி விட்டு, பளிச்சிடும் தார் ரோடில் வீட்டை நோக்கி நடந்தான் பையன்.

மழை பெருத்த, வெதுவெதுப்பான துளிகளை அவன்மேல் பொழிந்தது. ஒவ்வொரு துளியும் ஒளியின் பொறியைத் தாங்கி வந்தது. மேகம் மூடாத இரவில் வானில் சிதறிக் கிடக்கும் சின்னஞ்சிறு விண்மீன்களை இந்தத் துளிகள் மேலே இருந்து தலைக்கு ஒன்றாகப் பறித்து வந்தன போலத் தோன்றியது.

ஸ்லாவா நடந்தான், சிரித்தான், விண்மீன்கள் சுடரும் துளிகளை உதடுகளால் பிடித்தான்.

ப[illegible]ங்கள். பதினைந்து வய[illegible]ன மாஸ்[illegible]
பள்ளி மாணவி ஒல்யா புஷ்கரியோவா வரைந்தவை